பக்கங்கள்: இருபது

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 03 வெள்ளிக்கிழமை (18.12.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 022

# ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இம்முறை 22 வேட்பாளர்கள்

## பொன்சேகாவுக்கு எதிரான ஆட்சேபனை நிராகரிப்பு



கொழும்பு, டிசெம்பர் 18

**எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறும் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் 22 வேட்பாளர்கள் நேரடியாகக் குதித்துள்ளனர்.**

**இதுவரை நடைபெற்ற ஐந்து ஜனாதிபதித் தேர்தல்களின் போதும் ஆகக் கூடியது ஒரு சமயத்தில் 13 வேட்பாளர்களே களத்தில் இருந்தனர். ஆனால் இம்முறை இந்தப் பட்டியல் 22 ஆக அதிகரித்திருப்பதால் வாக்குச்சீட்டும் அதற்கேற்ப நீளமானதாகவே இருக்கும் எனக் கூறப்படுகின்றது.**

இத் தேர்தலில் போட்டியிடும் 22 வேட்பாளர்களின் வேட்பு மனுக்களையும் தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸ நாயக்க நேற்று ஏற்றுக்கொண்டார். கட்டுப்பணம் செலுத்தியவர்களில் ஒருவரின் மனுவை அவர் நிராகரித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். – கண்டி பஸ் சேவை இன்றிலிருந்து ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 18

யாழ்ப்பாணத்திற்கும் கண்டிக்கும் இடையிலான பஸ் சேவைகள் இன்று முதல் ஆரம்பமாகின்றன. அதன் பிரகாரம் கண்டியில் இருந்து இன்று அதிகாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணத்திற்கான பஸ் புறப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது மாத்தளை, தம்புள்ளை, மதவாச்சி மற்றும் வவுனியா ஊடாக யாழ்ப்பாணத்திற்கு செல்லவுள்ளது.

நாளை 19 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் இருந்து கண்டிக்கான பஸ் சேவை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மக்களுக்கும் தேசத்துக்குமாக மீண்டும் நானே வெல்வேன்; வேட்பு மனுத் தாக்கல் செய்த பின்னர் ஜனாதிபதி சூளுரை

கொழும்பு, டிச. 18

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் நானே மீண்டும் வெல்வேன் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் உள்ள தேர்தல் செயலகத்தில் நேற்று ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவைத் தாக்கல் செய்த பின்னர் செய்தியாளர்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

2005ஆம் ஆண்டைப் போல் மக்களுக்கும், தேசத்திற்குமாக மீண்டும் வெற்றி பெறுவேன் என ஜனாதிபதி தெரிவித்தார்.

ஜனாதிபதி தனது முதலாவது வெற்றி பயங்கரவாதத்திற்கு எதிராகப் பெறப்பட்டதை சுட் (20ஆம் பக்கம் பார்க்க)

## சிவாஜிலிங்கமும் ஸ்ரீகாந்தாவும் ரெலோவிலிருந்து வில(க்)கல்?

கொழும்பு, டிச.18

'ரெலோ' எனப்படும் தமிழீழ விடுதலை இயக்கத்திலிருந்து எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் ஸ்ரீகாந்தா ஆகியோர் விலகியுள்ளனர் எனக் கட்சியின் செயலாளர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் தன்னிச்சையாகப் போட்டியிடுவதற்கு சிவாஜிலிங்கம் – ஸ்ரீகாந்தா குழு தயாரானமையை அடுத்து அவர்கள் இருவரையும் சமாதானப்படுத்தி அந்த முயற்சியைக் கைவிட வைக்கும் எத்தனமாக நேற்று முன்தினம் இரவு செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தலைமையில் ரெலோவின் கூட்டம் ஒன்று கொழும்பில் நடைபெற்றதாகக் கூறப்பட்டது.

எனினும், அந்த முயற்சி பலன்தரவில்லை (20ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தல் முடிவினால் ஐரோப்பிய ஒன்றிய நிலைப்பாடு மாறாது

கொழும்பு, டிசெ. 18

எதிர்வரும் ஜனவரி மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் இலங்கை தொடர்பான தமது நிலைப்பாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தாது – என்று ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் தேர்தலில் எந்தக் கட்சி வெற்றியீட்டினாலும் இலங்கை தொடர்பான கொள்கைகளில் மாற்றம் ஏற்படாதெனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எந்தவொரு தரப்பிற்கும் ஆதரவளிக்கப்படமாட்டாது எனவும், இந்தத் தேர்தல் தொடர்பாக நடுநிலையான ஓர் நிலைப்பாட்டையே ஐரோப்பிய ஒன்றியம் கொண்டிருக்கிறது எனவும் கூறப்படுகிறது.

சுதந்திரம், ஜனநாயகம், சமத்துவம், சட்டம் ஒழுங்கு மற்றும் மனித உரிமை விவகாரங்கள் ஆகியன தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் தொடர்ந்தும் உன்னிப்பாக அவதானிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, இலங்கைக்கான ஆடைக் கைத்தொழில் கோட்டாவான ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் ரத்துச் செய்துள்ளது. இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தே ஒன்றியம் இந்த வரிச்சலுகை ரத்தாகியுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)

## இன்றும் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்பு

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் மழை பெய்யக்கூடிய சாத்தியம் உண்டு எனவும், கிழக்கு மற்றும் தெற்கு பிரதேசங்களிலும் இதே காலநிலை நீடிக்கும் எனவும், வானிலை அவதான நிலையம் நேற்றுப் பிற்பகல் 4 மணிக்கு அறிவித்திருந்தது. இன்று பிற்பகல் அல்லது மாலையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது எனவும் இடியுடன் மழை பெய்யும் போது கடும் காற்று வீசக்கூடிய நிலைமையும் தென்படுகின்றது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பங்களில் ஏற்படக்கூடிய மின்னல் தாக்குதல் குறித்து பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது. (ப)

## இலங்கைக்கு விஜயம் செய்வதற்கான கட்டுப்பாட்டைத் தளர்த்தியது கனடா

கொழும்பு, டிசெ. 18

இலங்கையில் சமாதான சூழல் காணப்படுவதுடன், பாதுகாப்பு நிலைவரம் சீரடைந்துள்ளதால் கனடா அரசு இலங்கை தொடர்பாகப் பேணிவந்த சுற்றுலாப் பயணிகளுக்கான பிரயாணக் கட்டுபாடுகளைத் தளர்த்தியுள்ளது.

இதுதொடர்பான அறிக்கையில் –

இலங்கையில் அவதானமாகப் பயணங்களை மேற்கொள்ளலாம் என்று கனடா அரசு தெரிவித்துள்ள போதிலும் இலங்கைக்கு விஜயம் செய்யும் அந்நாட்டுப் பிரஜைகள், இலங்கைக்குள் அனாவசிய பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள கனடா தூதுவர் புரூஸ் லெவி, விடுதலைப் புலிகளுடனான தீவிர யுத்தம் முடிவுக்கு வந்ததை அடுத்து இலங்கை புதிய யுகம் ஒன்றிற்குள் பிரவேசித்துள்ளதை இது எடுத்து காட்டுகின்றது.

(20ஆம் பக்கம் பார்க்க)

### ஏ-9 போக்குவரத்து கட்டுப்பாடுகள் மேலும் தளர்வு

யாழ்ப்பாணம் – வவுனியா, வவுனியா – யாழ்ப்பாணம் போக்குவரத்துகளுக்கான கட்டுப்பாடுகள் இன்று முதல் மேலும் தளர்த்தப்படுகின்றன. வவுனியா செல்லும் பஸ்கள் யாழ். மத்திய பஸ் நிலையத்திலிருந்து தொடரணி இன்றிச் செல்லும். (விவரங்களை உள்ளே 19 ஆம் பக்கத்தில் படியுங்கள்.)

## இடம்பெயர்ந்தோர் அனைவரும் வாக்களிக்க வசதி செய்யப்படும்

### வேட்பு மனுக்களை ஏற்ற பின்னர் தேர்தல் ஆணையாளர்

கொழும்பு, டிசெ. 18

வடக்குக் கிழக்கில் இடம்பெயர்ந்த மக்கள் உட்பட அனைவருக்கும் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் செய்து தரப்படும் எனத் தெரிவித்துள்ள தேர் தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்க அரசமைப்புக் கவுன்ஸில் இயங்காதமை குறித்த தனது கவலையையும் வெளியிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வேட்பு மனுக்களை நேற்றுத் தேர்தல் செயலகத்தில் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் அவர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தலைக் கண்காணிப்பதற்கு ஐரோப்பிய, பொதுநலவாய, ஆசியக் கண்காணிப்புக் குழுக்களுக்கு அழைப்பு விடுத்துள்ள போதிலும், ஐரோப்பிய ஒன்றியக்குழு இதுவரை சாதகமாகப் பதிலளிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## எதிரணியின் முதலாவது பிரசாரக் கூட்டம் கண்டியில்

கொழும்பு, டிசெ. 18

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டம் இன்று பிற்பகல் கண்டியில்நடைபெறவுள்ளது. பிரமாண்டமான ஏற்பாட்டில் அதை நடத்துவதற்கு முயற்சிக்கப்படுவதாகக் கூறப்படுகின்றது.

எதிர்க்கட்சிகளின் பொதுக்கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களான ரணில் விக்கிரமசிங்க, ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், சதாசிவம், மங்கள சமரவீர உள்ளிட்ட பலரும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க மற்றும் அக்கட்சியின் எம்.பிக்கள் எனப் பலர் இக்கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இன்று காலை 10 மணிக்கு கண்டிதலதா (20ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஜனாதிபதித் தேர்தல் களத்தில் மோதும் வேட்பாளர் பட்டியல்

மஹிந்த ராஜபக்ஷ - ஐ.ம.சு.கூ., சரத் பொன்சேகா -புதிய ஜனநாயக முன்னணி, சிறிதுங்க ஜெயசூரிய - ஐக்கிய சோசலிசக் கட்சி, எம்.பி. நமுனுமுல்ல - அனைவரும் மக்கள் அனைவரும் மன்னர், சரத் மனமேந்திர-புதிய சிகலஉறுமய, அச்சல சுரவீர-தேசிய அபிவிருத்தி முன்னணி, அநுர லியனகே - தொழிலாளர் கட்சி, வணபத்தரமுல்ல சீலரட்ணதேரர் - ஜனசெத முன்னணி, விக்கிரமபாகு கருணாரட்ண- இடதுசாரி முன்னணி, விஜயடயஸ் - சோசலிஸ சமரத்துவக் கட்சி, சரத் கொன்காஹே-ஐ.தே.மாற்று முன்னணி, கே.ஜி.ஆர்.எல்.பெரேரா - நமது தேசிய முன்னணி, எம்.சி.எம்.இஸ்மாயில் - ஐ.ஐ.தே.மு., ஒஸ்வால்ட் சொய்ஸா - ருகுணா ஜனதாக்கட்சி, சரத் பின்னடுவ - தேசியக் கூட்டமைப்பு, செனரட்ண சில்வா -தேசியப்பற்றுள்ள தேசியக் கூட்டமைப்பு, சுகத்திரிகமே - ஐக்கிய ஜனநாயக முன்னணி, எம் கே. சிவாஜிலிங்கம்-சுயேட்சை, ஐ.எம். இலியாஸ்- சுயேட்சை, மயோன் முஸ்தபா-சுயேட்சை, யு.பி. விஜயகோன்-சுயேட்சை, வி.மஹிமன் ரஞ்சித்- சுயேட்சை.


## கலைமகள் அழகுநிலா அழகுநிலையம்



நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு

★Facial ★Threading
★Hair Stretching ★Hair Dye
★Hair Perming ★Hair Cutting

இவை அனைத்தும் குறைந்த கட்டணத்தில் நேரடியாகச் செய்யப்படும்

இல.390, பிரதான வீதி, (பஸ்தியன் சந்தி, யாழ்ப்பாணம்)தொ.பே:0773719071

(சி-563329)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியர்களான திருமதி.ஸ்ரீகிருபாநந்தி அவர்களின் தந்தையும் ச.ஸ்ரீகரன் அவர்களின் மாமனாருமான

அமரர் கந்தையா கிருஷ்ணசாமி

(நயினாதீவு)

அவர்களின் மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தை அன்னாரின் குடும்பத்திற்கு தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யா/நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகாவித்தியாலயம். (91538)

பாடசாலைச்சமூகம்.


## STR COMPUTER SYSTEM

358, Navalar Road, Nallur, Jaffna.

Head Office: 385, Galle Road, Colombo - 06

T.P: 222 4459, Fax: 2224460, Mob: 077 4192275

Diploma in Microsoft Office (02 Month)
Diploma in Desk Top Publishing (02 Month)
Diploma in Hardware Technology (02 Month)

தரம் 03 முதல் 07 வரையான மாணவர்களுக்கு KIDS PROGRAM

சிறுவர்களுக்கான பயிற்சி நெறி.

Cetificate in Internet & E-Mail
(2 weeks, Only 08 Classes)

(அதிகூடிய செய்முறைப் பயிற்சியுடன் சான்றிதழ்கள் அனைத்தும் தலைமைக் காரியாலயத்தினால் வழங்கப்படும்)

(சி/563337)

கைலாச பிள்ளையார் கோவிலுக்கு அருகில்

ANDRA DIGITAL PRINTING

இப்போது லக்சன் பிளாசாவில் 1 மணி நேரத்தில் கொழும்பு விலையில் டிஜிற்றல் பிறிண்ட்




TRADEMASTER DIGITAL PRINTING

356A, லக்சன் பிளாசா. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 0212228929 0213218435 0776622981


## வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்
## 2010 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

15.11.2009 ஆம் திகதி உதயன் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட 2010 ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தலில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய வலிகாமம் தென்மேற்குப் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் என்பவற்றை 01.01.2010 தொடக்கம் 31.12.2010 ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கும் இறுதித் திகதி : 2009.12.22 பி.ப 1 மணி வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி : 2009.12.23 நண்பகல் 12 மணிவரை
கேள்வி திறக்கும் திகதி : 2009.12.23 பிப 2 மணி

### அட்டவணை

| இல. | சந்தைகள் (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்களுடன்) இறைச்சிக்கடைகள், கோழிக்கடைகள், கருவாட்டுக்கடைகள் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் (வற்வரி தவிர) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி நீங்கலாக) | மாதாந்த வாடகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|---|---|
| மானிப்பாய் கிராம உப அலுவலகம் | | | | | |
| 01 | காக்கைதீவு பொதுச் சந்தை | 500.00 | 1500.00 | 24000.00 | - |
| 02 | சாவற்கட்டுச் சந்தை | 1000.00 | 5000.00 | 126600.00 | - |
| 03 | நவாலி பிரசாத் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 2000.00 | 81500.00 | 400.00 |
| 04 | நவாலி பிரசாத் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 30000.00 | 300.00 |
| 05 | ஆனைக்கோட்டை பிரசாத் சந்தை கோழியிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 11000.00 | - |
| 06 | ஆனைக்கோட்டைச் சந்தி மாட்டிறைச்சிக்கடை | 1000.00 | 5000.00 | 196500.00 | - |
| பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் | | | | | |
| 01 | பண்டத்தரிப்பு சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 15000.00 | 600.00 |
| 02 | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல 01 | 500.00 | 1500.00 | 7500.00 | 600.00 |
| 03 | பண்டத்தரிப்பு சந்தை கருவாட்டுக்கடை இல 02 | 500.00 | 1500.00 | 7500.00 | 600.00 |
| பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் | | | | | |
| 01 | மாசியப்பிட்டிச் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 38000.00 | 250.00 |
| 02 | மாசியப்பிட்டிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 5500.00 | 250.00 |
| 03 | மாதகல் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 500.00 | 1500.00 | 5500.00 | 250.00 |

வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்,
மானிப்பாய். 17.12.2009

(சி/563330)

திருமதி .பு. சிவலிங்கம்
செயலாளர், வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்

## நெஞ்சை விட்டகலாத நினைவலைகள்

நான்காம் ஆண்டு

மலர்வு 14 ★ 05 ★ 1956



உதிர்வு 02 ★ 01 ★ 2005



திருமதி.தர்மராஜா புஸ்பலீலா
திதி:18.12.2009

நான்கு ஆண்டுகள் நிறைவடைந்த போதும்
நான்கு நாள்கள் முடிந்தது போல உள்ளது அம்மா!
இதயம் திடுக்கிட்டது, ஈரல் கருகியது,
என்றும் உங்கள் சிரிப்பு எங்கள்
நினைவில் வருகிறது அம்மா!
எங்கு சென்றாய் எம்மைவிட்டு
எல்லாம் இழந்து, எங்கெங்கோ சென்று
எப்போ உம்மைக் காண்போம்.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இரண்டாம் ஆண்டு

மலர்வு 14 ★ 05 ★ 1916



உதிர்வு 19 ★ 12 ★ 2007

திருமதி.ஆறுமுகம் வள்ளியம்மை

ஆண்டு இரண்டு ஆனாலும்
அகமெங்கும் உங்கள் நினைவே
நீண்ட கனவோடு நாம் வாழ்ந்திருக்க
நீங்கள் எம்மை பிரிந்திட்ட நியாயமென்ன?
தாங்கமுடியாத துயரினால் தவிக்கின்றோம்,
தரணியில் உங்களை எங்கு காண்போம் இனி.

சங்குவேலி வடக்கு,
மானிப்பாய். (சி/...) மகன், பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்கள்

### சபாபதி பன்னீர்செல்வம்

(உப அதிபர், யாழ். வைத்தீஸ்வரா வித்தியாலயம் )



யாழ்ப்பாணம் உடுவிலைப் பிறப்பிடமாகவும், யாழ். ஓட்டுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட சபாபதி பன்னீர்செல்வம் 10.12.2009 வியாழக்கிழமை அன்று சென்னையில் காலமானார்.

அன்னார் புஸ்பலீலாவின் அன்புக்கணவரும், சுகந்தி, பாபு, முகுந்தன், தீபன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நேற்று (17.12.2009) வியாழக்கிழமை சென்னையில் பெசன்ட்நகர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி/56334)

தகவல் :
குடும்பத்தினர்.

### நாகலிங்கம் நேசமணி



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் 130, முத்தமிழ் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நேசமணி நேற்று (17.12.2009) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சரவணமுத்து-லெட்சுமி தம்பதிகளின் அன்பு மகளும் கார்த்திகேசு - நாகம்மா தம்பதிகளின் மருமகளும் நாகலிங்கத்தின் அன்பு மனைவியும் நாகலெட்சுமி (விஜி), விஜயலெட்சுமி(வவா), நகுலேஸ்வரன்(ராசன்), கேதீஸ்வரன்(ஈசன்), யோகேஸ்வரன் (யோகன்), சுந்தரேஸ்வரன்(நாதன்), ஆகியோரின் அன்புத் தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2009) வெள்ளிக்கிழமை பி.ப. 2மணிக்கு 38, ஜின்னா வீதி, இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

38, ஜின்னா வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/563340) தொ.பே: 0779860300

தகவல்:
சு.துரைச்செல்வி
(செல்வி - மருமகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# கூட்டமைப்பின் ஐக்கியத்துக்கு வேட்டுவைத்த சிவாஜிலிங்கம்!

தமது உரிமைக்கான ஆயுதப் போராட்டத்தில் பல்லாயிரம் உயிர்த் தியாகங்களின் பின்னரும் கூட பின்னடைவைக் கண்டு, துவண்டு கிடக்கும் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தின் எச்சசொச்ச மன வைராக்கியத்தையும், சிதறடிக்கக் கிளம்பிவிட்டனர் 'தமிழ்த் தேசியம்'என்ற வேடமணிந்த அரசியல் தலைவர்கள். இது இலங்கைத் தமிழர்களைப் பொறுத்த வரையில் பனையால் விழுந்தவனை மாடு ஏறி மிதிக்கும் கொடூரத்துக்கு ஒப்பான கேவல நடவடிக்கையாகும்.

தாய் மண்ணில் தமிழினம் வேட்டையாடப்பட்டு கொன்றொழிக்கப்பட்ட சமயம், வேற்று மண்ணில் தஞ்சம் புகுந்தபடி 'கண் மண்' தெரியாமல் அறிக்கைப் போர் நடத்தி, விதூஷகர் போல நடந்துகொண்ட பிரகிருதிகள், இன்று தமிழினமே தனது ஆயுத பலத்தை யுத்த முனையில் இழந்து, அவலப்பட்டு நிற்கையில் வெறுங்கையுடன் இலங்கை புகுந்து, நலிவுற்ற தமிழினத்தை மேலும் மலினப்படுத்தும் ஈனச் செயலை ஆரம்பித்திருக்கின்றமை வேதனைக்குரியது. தமிழர் மனதில் வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவது போன்ற அகங்கார - அலங்கார - அவலட்சண - போக்கு இது.

சரியோ, பிழையோ ஆயுத வலிமையை அடியோடு இழந்தமையை அடுத்து, இலங்கைத் தீவில் தடுமாறிப்போய் நிற்கும் தமிழர் தரப்புக்கு இன்று கைகொடுக்கும் ஒரு சிறு துரும்பாகக் கருதப்பட்டது அவர்களது அரசியல் பலம் மட்டுமே.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற அரசியல் பலத்தை கொழும்பு அரசு ஒரு தூசுக்குத் தன்னும் கணக்கெடுக்காத நிலைமை நீடித்தாலும் கூட, 'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு' என்ற வடிவத்தில் அவர்கள் ஐக்கியப்பட்டு நின்றமை தமிழர் தரப்புக்கு ஒரு வலுவான - திடமான - பின்னணியாகவே இருந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

தமிழ்க் கூட்டமைப்பின் சில உதிரிகள், தனிப்பட்ட வகையில் கொழும்பு அரசின் அதிகாரவர்க்கத்தின் செல்லப் பிள்ளைகளாகி, தங்கள் கைங்கரியங்களைப் பார்த்துக்கொள்ளும் 'அங்கிடுதத்திகள்'ஆக மாறிய போதிலும் கூட, வெளிப்பகட்டுக்கேனும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் மூடையில் உள்ள நெல்லிக்காய்கள் சிதறி விடவில்லை, ஐக்கியப்பட்டே உள்ளன என்பதைக் காட்டும் வகையிலேயே நடந்து கொண்டனர்.

ஒரு பிரதான விடயத்தில் - ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதா என்ற விவகாரத்தில் - தமிழ்க் கூட்டமைப்பின் முடிவு இதுதான் என்ற ஒரு நிலைப்பாட்டைப் பின்பற்ற விடாமல் தனிப்போக்கில் செயற்பட்டு, கூட்டமைப்பின் ஐக்கியத்தில் விரிசல் விழுந்துவிட்டது என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்திக் காட்டிய முதல் நபர் என்ற பெருமையை சிவாஜிலிங்கம் தட்டிச்சென்றுவிட்டார்.

இந்தத் தனிப் போக்குக்கு அவர் கூறும் காரணமோ அல்லது இந்த வழியில் அவரைத் தூண்டியமைக்கான உண்மையான பிற காரணிகளோ, அவை எப்படியும் அமைந்து விட்டுப் போகட்டும்.

'தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வழிநடத்தும் தலைவர்கள் இவ்விடயத்தில் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் கருத்தைக் கருதாது சர்வாதிகாரமாகத் தம்போக்கில் முடிவெடுத்தமையால் வேறு வழியின்றி சுயாதீனமாக இப்படிச் செய்தேன்.' என்றோ-

அல்லது 'ஜனாதிபதித் தேர்தலில் நிற்கும் இரண்டு பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கோ அல்லது சரத் பொன்சேகாவுக்கோ தமிழ் மக்களின் வாக்குகள் போகக் கூடாது என்பதற்காக ஒரு சில எம்.பிக்களுடன் சேர்ந்து இப்படித் தீர்மானித்தேன்' - என்றோ இப்போது சிவாஜிலிங்கம் சமாதானம் கூறக்கூடும்.

அப்படியில்லாமல், கொழும்பு ஆட்சியாளர்களுக்கு எதிரான தமிழ் வாக்குகள், இத் தேர்தலில் எதிரணியின் பிரதம வேட்பாளருக்குச் சென்றடைவதைத் தடுப்போம் எனக் கங்கணம் கட்டி, அதற்காகக் கையூட்டு வாங்கி, 'அரசியல் வியாபாரம்'நடத்தும் கூட்டாளிகளின் சதித்திட்டத்தில் சிவாஜிலிங்கம் பகடைக்காயாக்கப்பட்டுவிட்டார் என்று பொதுவாகப் பேசப்படும் குற்றச்சாட்டும் கூட காரணமாக இருக்கலாம்.

எது, எப்படியென்றாலும் -

தமிழர்களின் அரசியல் ரீதியான ஐக்கியம் மிகமிக அவசியமாகத் தேவைப்படும் இக்கட்டான காலகட்டம் இதுவென முழுத் தமிழினமுமே சிந்தித்து வற்புறுத்தி, அதற்காக ஆலாய்ப் பறக்கையில் -

அரசியல் ரீதியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வெளியே நிற்கும் தமிழர் தரப்புகளையும் கூட, கசப்புணர்வுகள், வேறுபாடுகளை மறந்து உள்ளீர்த்து அரவணைப்பதற்குத் தமிழ்த் தலைவர்கள் தயாராகவேண்டும் என வலியுறுத்தப்படும் இச்சமயத்தில் -

தமிழ்த் தேசியக் கூட்மைப்பை உத்தியோக பூர்வமாகப் பிளந்து வைக்கும் கைங்கரியத்தை ஸ்ரீகாந்த எம்.பி. வழி நடத்த சிவாஜிலிங்கம் எம்.பி. ஒப்பேற்றியிருக்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெயரில் அல்ல தாம் சார்ந்த ரெலோ கட்சியின் சார்பில் கூட, இத் தேர்தலில் போட்டியிடுவதற்கு உரிய ஆதரவைத் திரட்ட வக்கில்லாத சிவாஜிலிங்கம் - ஸ்ரீகாந்தா கூட்டு, சுயேச்சையாக நிற்க வேண்டிய நிலைமை.

அதுவும், 'தமிழ்த் தேசியம்' என்ற கோஷத்தை முன்வைத்தபடியே, தமிழ்த் தேசியத்தைக் காப்பாற்றுவதற்கு இன்று மிக அவசியமாகத் தேவைப்படும் தமிழத் தலைமைகளின் ஐக்கியம் என்ற பலத்துக்கு வேட்டுவைத்தபடியே தமிழ்த் தேசிய எழுச்சிக்கு அழிவு, நாசம் பண்ணும் இந்தச் செயல் போக்குக்கு தகுந்த பரிசைத் தமிழ் மக்கள் அளிப்பார்கள் என்பது நிச்சயம்.

தம்மீது திணிக்கப்பட்ட எல்லைமீறிய அடக்குமுறை, கொடூர யுத்தம், அளவுகணக்கற்ற பேரழிவு என்று பலவற்றாலும் வாடி, வதங்கி நிற்கும் தமிழ் மக்களின் அடிப்படை மனவுணர்வுகளை - விருப்பத்தை - புரிந்து கொள்ளாமல், தான்தோன்றித்தனமாகவும் அதிக பிரசங்கித்தனமாகவும் நடந்துகொள்வோர் வரலாற்றின் ஏடுகளில் இருந்து இலகுவாகத் தூக்கியெறியப்பட்டு விடுவார்கள் என்பது மறக்கக் கூடியதல்ல;காலத்தின் நியதியும் அதுவே.

# குடாநாட்டில் இரண்டரை மாதங்களுக்குள் மூன்று சிறுவர்கள் டெங்கு நோயால் மரணம்!

## 162பேருக்கு நோய்த் தாக்கம் கண்டறியப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,டிசெ.18

குடாநாட்டில் கடந்த இரண்டரை மாதங்களுக்குள் 162 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளனர். இவர்களில் 3 சிறுவர்கள் மரணமாகியுள்ளனர். டெங்கு நோயின் பாதிப்பு குடாநாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது என யாழ். மாவட்ட தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் வைத்திய அதிகாரி திருமதி திருமகள் சிவசங்கர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

குடாநாட்டில் அண்மைக்காலமாக டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. கடந்த இரண்டரை மாதத்துக்குள் 3 சிறுவர்கள் டெங்குக் காய்ச்சலினால் உயிரிழந்துள்ளனர்.

கடந்த நவம்பர் மாதம் 44 பேரும், இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து நேற்று வியாழக்கிழமை வரை 114 பேரும் டெங்கு நோய்த் தாக்கத்துக்குள்ளாகியுள்ளதாக இனம் காணப்பட்டுள்ளனர்.

டெங்கு நோய் மேலும் பரவாமல் தடுப்பதற்குச் சுகாதாரத் திணைக்களத்தால் பல்வேறு விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

'எடிஸ்' எனப்படும் நுளம்பு வகையினால் பரப்பப்படுகின்ற இந்த டெங்கு நோய்த் தாக்கத்தினைக் கட்டுப்படுத்த பொதுமக்களும் சுய விழிப்புணர்வு செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றார் அவர். (50-9)

# 8 எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் வன்னிப்பகுதியில் விரைவில் திறக்கப்படும்

## மாங்குளத்தில் விநியோகக் களஞ்சியம் நிறுவப்படும்

யாழ்ப்பாணம், டிசெ.18

வன்னிப்பகுதியில் எட்டு எரிபொருள் நிரப்பும் நிலையங்களை உடனடியாகத் திறந்து வைப்பதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் தெரிவித்தன.

மாங்குளம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மல்லாவி மற்றும் ஏ-9 நெடுஞ்சாலை போன்ற இடங்களில் இந்த எரிபொருள் நிரப்பும் நிலையங்களை விரைவில் திறந்து வைப்பதற்கான பணிகள் முழு வீச்சில் இடம் பெற்று வருவதாக அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அத்துடன் முன்னர் சேதமடைந்த எரிபொருள் நிரப்பும் நிலையங்களையும் புனரமைக்கும் பணிகளும் நடைபெற்றுவருகின்றன.

இதேவேளை, மாங்குளத்தில் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகம் ஒன்றையும், எரிபொருள் நிரப்பும் களஞ்சியம் ஒன்றையும் அமைக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

அலுவலகத்துக்கான கட்டட வசதிகள் கால தாமதமாகும் பட்சத்தில் மிகப் பெரிய கொன்ரெய்னர்களைப் பயன்படுத்தி அலுவலகம் ஒன்றை அமைத்துப் பணிகளை மேற்கொள்ளவும் ஆலோசிக்கப்பட்டுள்ளதாகப் பெற்றோலியக் கூட்டுத்தாபன வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஒ-50-224)

# 'ஹய் ரெக்ஸ் சி பெற்கோ' உயர்தர ஒயிலே யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்யப்படுகிறது

யாழ்ப்பாணம்,டிசெ.18.

யாழ்ப்பாணத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 'ஹய் ரெக்ஸ் சி பெற்கோ' என்னும் ஒயிலையே சந்தைப்படுத்துகின்றது என்றும் இந்த ஒயில் உயர்தரமானதும் கலப்படமற்றது என்றும் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் வி.சண்முகநாதன் அறிவித்துள்ளார்.

இந்த 'ஹய் ரெக்ஸ் சிபெற்கோ' என்னும் ஒயில் வகைகளை எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் மாத்திரமே பெற்றுக்கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-50-224)

# பாதுகாப்புக் கோரும் பொன்சேகாவின் மனு உயர்நீதிமன்றால் நேற்றுத் தள்ளுபடி

கொழும்பு, டிசெ. 18

தமக்குப் போதிய பாதுகாப்பு வழங்குமாறு உத்தரவிடக் கோரி எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் நேற்றுத் தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

சட்டமா அதிபர் மொஹான் பீரிஸ் இந்த மனுத் தொடர்பாகக் கிளப்பிய பூர்வாங்க ஆட்சேபனையை ஏற்றுக் கொண்டே அதனை விசாரணைக்கு ஏற்காமல் நிராகரித்துத் தீர்ப்பளித்தது உயர்நீதிமன்றம்.

பிரதம நீதியரசர் அசோக என். சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, பி.ஏ.ரட்ணாயக்கா ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவை நேற்று வழங்கியது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் செயற்படத் தொடங்கிவிட்டன. இச்சமயத்தில் வேட்பாளர் ஒருவருக்கு தகுந்த பாதுகாப்பு அளிப்பது பற்றிய முடிவைத் தீர்மானிக்க வேண்டியவர் தேர்தல்கள் ஆணையாளரே. அவரின் அதிகாரத்தில் உயர் நீதிமன்றம் தலையிடமுடியாது - என சட்டமா அதிபர் குறிப்பிட்டு ஆட்சேபனை கிளப்பினார்.

அரசமைப்பின் 104 (ஆ) பிரிவின் படி தேர்தல்கள் ஆணையாளரின் பொறுப்பில் உள்ள விடயத்தில் இந்தக் கட்டத்தில் நீதிமன்றம் தலையிட முடியாது எனத் தெரிவித்த நீதிமன்றம் அதன் அடிப்படையில் மனுவைத் தள்ளுபடி செய்தது. (அ-சி)

# முனீஸ்வரன் வீதி புடைவைக்கடையில் திருடர்கள் கைவரிசை

யாழ். முனீஸ்வரன் வீதியில் உள்ள புடைவைக்கடையொன்றில் கொட்டும் மழையை பயன்படுத்தி திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர். இந்த திருட்டு சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது. புடைவைக் கடையை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பெறுமதிவாய்ந்த புடைவைகளை அள்ளிச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (50-224)

# முன்பள்ளிக் கலைவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.18.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய இந்துமுன்பள்ளியின் வருட இறுதிக் கலைவிழாவும் பாடசாலைக்கு வழியனுப்பும் நிகழ்வும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை சுப்பிரமணியம் மாலதி மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலை அதிபர் செல்லையா இளங்கோ கலந்துகொள்வார். (ஒ-10)

# வெள்ளத்தால் சேதமடைந்த வீதிகளை புனரமைக்க தார் கையிருப்பில் இல்லை

## கைவிரிக்கிறது வீதி அபிவிருத்தி அதிகார சபை

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்ப்பாணத்தில் மழை வெள்ளத்தினால் சேதமடைந்த பிரதான வீதிகளை மீளப்புனரமைப்பதற்குத் தேவையான தார் அறவே கையிருப்பில் இல்லை என வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது பெய்து வரும் பருவ மழையால் குடாநாட்டின் பிரதான வீதிகள் அனைத்தும் மோசமாகச் சேதமடைந்துள்ளன.

அண்மையில் புனரமைப்புச் செய்யப்பட்ட வீதிகள் உட்படப் பெரும்பாலான பிரதான வீதிகள் மழை வெள்ளம் காரணமாகக் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன. மோசமாகச் சேதமடைந்துள்ள மிகப் பிரதான வீதிகளில் கே.கே.எஸ்.வீதி, பருத்தித்துறை வீதி, கஸ்தூரியார் வீதி, பிரதான வீதி, பண்ணை வீதி, மானிப்பாய் வீதி, பலாலி வீதி, ஆஸ்பத்திரி வீதி என்பனவும் அடங்கும்.

இந்த வீதிகளில் பயணம் செய்யும் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதுடன் வாகனங்களைச் செலுத்துவதில் சாரதிகளும் பெரும் கஷ்டப்படுகின்றனர்.

எனவே இந்த வீதிகளை உடனடியாகப் புனரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளபோதும் அதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபையிடம் தார் இல்லை. இதனால் புனரமைப்புப் பணிகள் மேலும் தாமதமடையும் எனக் கூறப்படுகின்றது.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குக் கடந்த மே மாதம் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட 800 தார் பீப்பாக்களும் முன்னர் இடம்பெற்ற புனரமைப்புப் பணிகளுடன் முற்றாகத் தீர்ந்துவிட்டதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

சேதமடைந்த வீதிகளை உடனடியாகப் புனரமைப்புச் செய்வதற்கு வசதியாக தரைப் பாதையூடாகத் தார் பீப்பாக்களை எடுத்து வருவதற்கும் தற்போது நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (50-224)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி | 04 19.12.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | திருதியை |
| | மு.இ.11.07வரை |
| நட்சத்திரம்: | உத்தராடம் |
| | மு.இ.11.35வரை |
| சுபநேரம்: | 03.23-04.53 வரை |
| ராகுகாலம்: | 09.23-10.53 வரை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## சின்னையா தங்கராசா (கிளி)

கண்டாவளையை பிறப்பிடமாகவும், தெல்லிப்பளையை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தங்கராசா(கிளி) (16.12.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையா -ராஜேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும் ஞானகுமாரியின் அன்புக் கணவரும் யா/யூனியன் கல்லூரி மாணவர்களான டிலக்ஷன், லதுர்சன், கேதினி, ஆகியோரின் அன்புத் தந்தையும் மண்டலநாயகம்- ஞனம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், குலநாயகம், பூரணம், தவயோகம் (கனடா), தவபாலன், தனபாக்கியம், ஆகியோரின் அன்புச் சகோதரரும், தங்கம்மா, நடராஜா, வரதா(கனடா), விஜயா, கனகரட்ணம், ஞானேந்திரன், ஞானேஸ்வரி, ஞானகாந்தி, ஞானரூபி, ஞானரதி, ஞானகுமார், ஆகியோரின் அன்பு மைத்துனரும், கிரிசாந், சர்வதன், ஜெயா, ஜெகன், தீபன் ஆகியோரின் சித்தப்பாவும், தர்மீனன், தர்மீதன், தர்மீதா ஆகியோரின் பெரியப்பாவும், டக்சலா, விதுசன், துஷங்கி ஆகியோரின் மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2009) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கட்டுப்பிட்டி மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
காசிப்பிள்ளையார் கோவிலடி, தெல்லிப்பழை (வி/563332) குடும்பத்தினர்


இலெக்ரோனிக் கிருமிகொல்லி

வீட்டுக்கு மற்றும் ஹோட்டலுக்கு




டயிடஸ் ஸ்ரோஸ்
2439422


## ஐயப்பன் ஆலய தேர்த் திருவிழா

யாழ்ப்பாணம்.டிசெ.18

கோண்டாவில் சபரீச ஐயப்பன் ஆலய வருடாந்த தேர்த்திருவிழா இன்று வெள்ளிக் கிழமை நடைபெறவுள்ளது.

காலை 7 மணிக்கு ஐயப்பனுக்கு 108 சங்காபிஷேகம் நடைபெற்று தொடர்ந்து தம்பபூசை, வசந்தமண்டப பூசை நடை பெற்று, 10 மணிக்கு சுவாமி தேரேறி வீதி உலா வருவார்.

* * * *

தாவடி ஸ்ரீ சடகோப ராமானுஜ ஐயப்ப பக்த சபையின் 27 ஆவது மகர ஜோதி மண்டல பூர்த்திப் பெருவிழா தாவடியிலுள்ள 18ஆம் படி குருசாமியான அ. இந்துதாசன் தலைமையில் நாளை நடைபெறவுள்ளது. (ஒ-7)

## வயோதிபர் காயம்

வீதியோரத்தில் கட்டப்பட்டிந்த மாடு வீதியில்நடந்து சென்ற வயோதிபரை காயப்படுதியது.

நேற்று வரணியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஆர். குழந்தைவேல் (வயது 78) என்பவர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ-207)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் மனோன்மணி அம்மா நாகநாதன்

(பிரம்படி லேன், கொக்குவில்)

எமது கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினதும் விளையாட்டுக் கழகத்தினதும் ஆரம்பகால உறுப்பினர்களாக செயற்பட்டு தற்போது UK யிலும் நிலையத்தின் வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிவரும் நா.செல்வநாதன், நா. யோகநாதன் ஆகியோரின் அன்புத்தாயார் அமரர் மனோன்மணி அம்மா நாகநாதன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மாசாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி...சாந்தி...சாந்தி.

கே.கே.எஸ்.வீதி, கொக்குவில். (வி/563338) கொக்குவில் மத்திய சனசமூகநிலையம், விளையாட்டுக்கழகமும்.

# கண்ணீர் அஞ்சலி



## அமரர் மனோன்மணி அம்மா நாகநாதன்

(பிரம்படி லேன், கொக்குவில்)

எமது கொக்குவில் வளர்மதி நிறைவாழ்வகத்தின் நலன்விரும்பிகளான திரு.நா.செல்வநாதன்(UK), நா.யோகநாதன் (UK) ஆகியோரின் அன்புத் தாயும், ஆர். செல்வராஜா அவர்களின் அன்பு மாமியாருமாகிய அமரர் மனோன்மணி அம்மா நாகநாதன் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வளர்மதி சமூகம் சார்பாக பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்,
கொக்குவில். (வி/563339) வளர்மதி நிறைவாழ்வகம்.


தென்மராட்சி மக்களின் தகவல்தொழில்நுட்ப சேவைகளை வழங்க இன்றே உதயமாகிறது

Computer Sales
Full Service Professional Computer Repair
Home or Office Networking



Pickup, Delivery or Location Services Available

தொடக்கம்—18.12.2009

Invitation
We have great pleasure in invitation you to be present at our deeication to the Service ceremony On Friday 18Th of December 2009 at 12.00noon

Ultra Tech Computer's
Kandy Road Sangaththanai Chavakachcheri
T.P-0213734588,0779907627
Mail-ultratech87@hotmail.com

IDM e-KIDS & Teens
ICT Skills for the Information Age

அன்பான பெற்றோர்களே உங்கள் சிறார்களும் IT உலகில் கால்பதிக்கவேண்டுமா!




LEVEL 1-GRADE1-AGE5+YEARS
LEVEL 2-GRADE2-AGE6+YEARS
LEVEL 3-GRADE3-AGE7+YEARS
LEVEL 4-GRADE4-AGE 8+YEARS
LEVEL 5-GRADE5-AGE 9+YEARS
LEVEL 6-GRADE6-AGE10+YEARS
LEVEL 7-GRADE7-AGE 11+YEARS
LEVEL 8-GRADE8-AGE 12+YEARS
LEVEL 9 - GRADE 9-AGE 13+YEARS
LEVEL 10 - GRADE 10-AGE 14+YEARS

Join with us

New Batches Start
28th Dece 2009
01st Janu 2010
05th Janu 2010

216,NAVALAR ROAD,JAFFNA 021 2229301


# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 26.09.1919

உதிர்வு 22.12.2006

## திருமதி தங்கச்சிப்பிள்ளை கந்தசாமி

திதி: பூர்வபக்க துதியை (18.12.2009)

அன்பெனும் அமுதூட்டி பாசத்தால் பாதுகாத்து
பண்புக்கோர் இலக்கணமாய்,பலருக்கு இனியவராய்
கொடைக்கு சிறந்தவராய்
எங்கள் வாழ்க்கையை வசந்தமாக்கி
எமை ஊர் போற்ற வாழ வைத்த அன்புத் தெய்வமே
எமை எல்லாம் ஆறாத் துயரில் மூழ்கவைத்த
ஆருயிர் அணைந்து மூன்று ஆண்டுகள் ஆனதே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவுகள்
எங்களை விட்டகலா
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வேவில் விநாயகப் பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மகள், மருமகன், பேரன்,
பெறாமக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
உடன்பிறப்புக்கள்.

கொத்தன் கலட்டி,
வல்வெட்டி. (வி/563331)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### வெள்ளம் தேங்கியுள்ளதால்

## குடத்தனைப் பகுதியில் மணல் ஏற்றுவது நிறுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம்,டிசெ.18

குடத்தனைப் பகுதியில் கட்டடப் பணிகளுக்காக மணல் ஏற்றும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடத்தனைப் பகுதியில் ஏற்றப்படும் மணல், இறக்கப்படும் இடமான குடத்தனை ஆறாங்கட்டைப் பகுதியில் வெள்ளம் தேங்கி நிற்பதாலேயே கடந்த செவ்வாய்க்கிழமை முதல் மணல் ஏற்றி இறக்கும் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குடத்தனைப் பகுதியில் உழவு இயந்திரங்கள்மூலம் ஏற்றப்படும் மணல் குடத்தனை ஆறாங்கட்டைப் பகுதியில் இறக்கப்பட்டு குடாநாட்டின் பல பாகங்களிலும் கட்டடப் பணிகளுக்காக லொறிகளுக்கு விநியோகிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (58-78)

## அடைமழை, வெள்ளம் காரணமாக மரக்கறிச் செய்கையில் பெரும் பாதிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.18

யாழ்.குடாநாட்டில் கடந்த சில நாள்களாகப் பெய்த அடைமழை காரணமாக குடாநாட்டு விவசாயிகளின் மரக்கறிப் பயிர்ச் செய்கை நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

வெங்காயம், கரட், பீற்றூட், முள்ளங்கி, மரவெள்ளி, பயிற்றை, புடோல், கத்தரி, மிளகாய் மற்றும் புகையிலை ஆகிய பயிர்கள் மிகக் கடுமையாகப் பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அச்சுவேலி, இணுவில், மருதனார்மடம், உரும்பிராய், உடுவில், தாவடி, கட்டுவன், புன்னாலைக்கட்டுவன், குப்பிளான் போன்ற பகுதிகளில் பல ஏக்கர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்ட பயிர்களே இவ்வாறு பாதிப்புக்குள்ளாகியுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, வடமராட்சிப் பகுதி விவசாய நிலங்களில் தேங்கியுள்ள மழைநீரை, விவசாயிகள் நீர் இறைக்கும் இயந்திரங்களின் உதவியுடன் அப்புறப்படுத்தி வருவதனை அவதானிக்க முடிகிறது.

ஒரு அந்தர் விதை வெங்காயத்தை 4 ஆயிரத்து 500 ரூபாவுக்குக் கொள்வனவு செய்து வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளுக்கு அதிக நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் விவசாய நடவடிக்கைகளுக்கென விவசாயிகள் காப்புறுதி மேற்கொள்ளாததன் காரணமாக நஷ்ட ஈட்டைப் பெற முடியாத நிலைமையையும் ஏற்பட்டுள்ளது. (50-16-86-100-253-224)

### முன்பள்ளிப் பயிற்சி நிலையங்கள் திறப்பு விழா இன்று

யாழ்ப்பாணம்,டிசெ.18

உலக வங்கியின் நிதி உதவியுடன் சீலாப்புலம், கொம்மாத்தறை ஆகிய கிராமங்களில் நிர்மாணிக்கப்பட்ட முன்பள்ளி பயிற்சி நிலையங்கள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் திறந்து வைக்கப்படவுள்ளன. (204-253)

## சுண்டுக்குளிப் பகுதியில் இரண்டு கடைகளில் திருட்டு

யாழ்ப்பாணம், டிசெ.18

சுண்டுக்குளி விதானையார் வீதி, பாண்டியன்தாழ்வு வீதி ஆகிய இடங்களில் அமைந்துள்ள இரண்டு பலசரக்குக் கடைகள் திருடர்களினால் உடைக்கப்பட்டுப் பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு கடும் மழை கொட்டிய வேளை இடம்பெற்றுள்ளது.

கடைகளை உடைத்து உட்புகுந்த திருடர்கள் அங்கிருந்த பால்மா வகைகள் மற்றும் பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறுநாள் காலை கடைகளைத் திறக்கச் சென்ற போதே திருட்டுப்போன விடயம் உரிமையாளர்களுக்குத் தெரிய வந்தது.

இது தொடர்பாகப் பொலிஸ் நிலையத்திலும், கிராம அலுவலரிடமும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (50-23)

## காசநோய் விழிப்புணர்வு கருத்தமர்வு பண்ணையில்

யாழ்ப்பாணம் டிசெ.18

சேவாலங்கா நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட காசநோய் விழிப்புணர்வு கருத்தமர்வு நாளையும் நாளை மறுதினமும் பண்ணையில் அமைந்துள்ள மார்பு புற்றுநோய் சிகிச்சை நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு உட்பட்ட சுகாதாரத் தொண்டர்கள், இப்பிரிவுகளுக்குட்பட்ட முதியோர் இல்லம், சிறுவர் இல்லம் ஆகியவற்றின் பராமரிப்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர் என யாழ்ப்பாண பொதுச் சுகாதாரப் பரிசோதகர் டி.தளிர்ராஜ் தெரிவித்தார். (50-23)

குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## அன்னங்கை ஒழுங்கையில் கழிவுப் பொருள்கள்; அப்பகுதியில் தொற்றுநோய் பரவும் அபாயம்

யாழ்ப்பாணம்,டிசெ.18

கோண்டாவில் வடக்கு அன்னங்கை ஒழுங்கையில் கலைவாணி சனசமூக நிலையத்திற்கு அருகில் கழிவுப் பொருள்கள் அகற்றப்படாமல் மண்டிக் கிடப்பதால் தொற்றுநோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக பொதுமக்கள் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொண்டு கழிவுப் பொருள்களை அகற்ற வேண்டுமெனக் கோரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது.

அன்னங்கை ஒழுங்கையில் கழிவுப் பொருள்கள் தேங்கிக் கிடப்பதனால் அப்பகுதியில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கமும் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகின்றது.

உலக உணவுத் திட்டத்தின் மூலம் யாழ்.மாவட்டதிலுள்ள பொது இடங்கள், வீதிகள், ஒழுங்கைகள் தற்போது துப்புரவு செய்யப்பட்டு வரும் இவ்வேளையில், அன்னங்கைப் பகுதியில் கழிவுகள் தேங்கியிருப்பது தொடர்பாக அப்பகுதி மக்கள் மேலும் தமது அதிருப்தியைத் தெரிவிக்கின் றனர். (50-14)

### ஓய்வூதியர் ஒன்று கூடல் பிற்போடப்பட்டது

நவாலி,டிசெ.18

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த ஓய்வூதியர் சங்கங்களுடனான வருடாந்த ஒன்று கூடல் நிகழ்வு பிறிதொரு தினத்திற்கு பிற்போடப்பட்டுள்ளது.

இது பற்றி பின்னர் அறிவிக்கப்படுமென்று சமூக சேவை உத்தியோகத்தர் வி.அருந்தவராசா அறிவித்துள்ளார்.

இத்துடன் மாதாந்தம் நடைபெறும் இம்மாதக் கூட்டமும் எதிர்வரும் ஜனவரி மாதத்தில் நடைபெறுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (50-100)

## வழி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளாத மினிபஸ் சேவைகளே நிறுத்தப்பட்டன

### அரச அதிபர் விளக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.18

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் வழி அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சி சிற்றூர்திச் சங்கத்தினரிடம் கோரியிருந்தும் இதுவரை எவரும் விண்ணப்பிக்காததாலேயே கொடிகாமத்திலிருந்து வரணி, கச்சாய் மற்றும் கெற்பேலி வழிகளில் சேவையில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று யாழ். அரச அதிபர் கே.கணேஷ் அறிவித்துள்ளார்.

'மினிபஸ்' சேவை திடீரென நிறுத்தப்பட்டதால் தென்மராட்சிப் பயணிகள் அவதி என்ற தலைப்பில் கடந்த 15ஆம் திகதி உதயனில் வெளியான செய்திக்கு விளக்கமளித்து அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே அரச அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

மேற்குறித்த வழிகளில் சேவையில் ஈடுபடுவதற்கு வழி அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின் தலைமைச் செயலகத்தினரின் ஊடாக தென்மராட்சி சிற்றூர்திச் சங்கத்தினரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. ஆனால் இதுவரை எவரும் அனுமதிப்பத்திரத்தைப் பெற விண்ணப்பிக்கவில்லை. அதனால் மேற்குறித்த வழிகளில் சேவையில் ஈடுபடுவதற்கு எந்தவொரு சிற்றூர்திக்கும் வழி அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழு விதிகளை மீறி செயற்படுகின்ற சிற்றூர்திகள் மீது ஆணைக்குழுவின் விதிமுறைகளுக்கமைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் வழி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு தென்மராட்சியில் சேவையில் ஈடுபட்டு வருகின்ற எந்தவொரு சிற்றூர்தியும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் இடைநிறுத்தப்படவில்லை - என்றுள்ளது. (50-7)

## வெள்ளத்தால் தென்மராட்சியில் பல குடும்பங்கள் இடப்பெயர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.18

தொடர்ந்து பெய்த அடை மழையினால் தென்மராட்சி கிழக்கு, தென்மராட்சி வடக்கு ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த பல குடும்பங்கள் சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறி உறவினர், நண்பர்கள் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, தவசிகுளம், கொடிகாமம் தெற்கு, கொடிகாமம் மத்தி, வரணி, இடைக்குறிச்சி, மந்துவில் ஆகிய இடங்களில் உள்ள தாழ்வான பகுதிகளில் தங்கியிருந்த குடும்பங்களே வீடுகளை விட்டு வெளியேறியுள்ளன.

சில இடங்களில் வீடுகளுக்குள் மழை வெள்ளம் புகுந்ததாலும் சில வீடுகளைச் சுற்றி வெள்ளம் நிற்பதாலும் வீட்டுச் சுவர்கள் வீழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - தென்மராட்சிப் பிரதேச நெல்'வயல்களில் பயிர்களை மூடி வெள்ளம் காணப்படுவதாகவும் வெள்ளத்தினை வெளியேற்றும் பணியினை விவசாயிகள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்தனர்.

சில இடங்களில் வீதிகளை மூடி வெள்ளம் காணப்படுவதால் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகப் பொதுமக்கள் தெரிவித்தனர். (50-207)



'ஆர்ப்பிக்கோ நிறுவனத்தின் யாழ். ஏக விநியோகஸ்தர்களான 'வூட்ஸ்சன்ஸ் நிறுவனக்காட்சியறை யாழ்ப்பாணத்தில் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. 'ஆர்ப்பிக்கோ' நிறுவனத் தின் முகாமை இயக்குநர் சுனில் லியனகே காட்சியறையை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் தலைமை விற்பனை அதிகாரி ஜே.ஏ.எம்.நௌஷாட், 'வூட்ஸ்சன்ஸ்' நிறுவன முகாமையாளர் பி.சிவநேசன் ஆகியோர் நிற்பதை முதலாவது படத்திலும், விநியோக இயக்குநர் சாந்த குலரத்ன மங்களவிளக்கேற்றுவதை இரண்டாவது படத்திலும், முகாமை இயக்குநர் சுனில் லியனகே, தலைமை விற்பனை அதிகாரி நௌஷாட் ஆகியோர் உரையாற்றுவதையும் அருகில் யாழ்.வணிகர் கழகத்தின் உபதலைவர் எஸ்.இராசேந்திரம், விநியோக முகாமையாளர் துமிந்த வீரப்பெரும ஆகியோர் அமர்ந்திருப்பதை அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.

(படங்கள் - தருப்பகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் ஒளி விழா அண்மையில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள். கரவெட்டி பங்குத் தந்தை அருட் திரு. எமில் இராஜேஸ்வரன் போல் உரை நிகழ்த்துவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட மாணவர்களுடன் கிறிஸ்மஸ் தாத்தா அளவளாவி மகிழ்வதையும் படங்களில் காணலாம்.

*(படங்கள் : வடநம்பி)*

# லயன்ஸ் கழகத்தின் மரம் நடுகைத் திட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.18

தென்மராட்சி கிழக்கு லயன்ஸ் கழகத்திற்கு மரம் நடுகைத் திட்டம் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் உள்ள ஆலயங்கள், பாடசாலைகள் மற்றும் மருத்துவ மனைகள், பொது அமைப்புக்கள் ஆகியவற்றில் மரக்கன்றுகள் கழக பிரமுகர்களால் நடப்பட்டு வருவதாக கழகச் செயலாளர் தெரிவித்தார்.

'சொண்ட்' நிறுவனத்தின் அனுசரணையுடன் இந்த மரக்கன்றுகள் நடப்படுவ தாகவும் தெரிவிக்கப்பட்டது.

(50-207)


## தேவை

டீசல் லொறி மெக்கானிக், றைவர், வெல்டர், கூலியாள்களும் தேவை:

தொடர்பு : சிவலிங்கம் மோட்டோர்ஸ்
77, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.
தொ.பே : 0212223212

(91534)


## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், டிசெ.18

மானிப்பாய் பிரிவு பொலிசாரின் ஏற்பாட்டில் தவறவிடப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை தொடர்பான முறைப்பாட்டை மேற்கொள்வதற்கான நடமாடும் சேவை இன்று காலை 9 மணிக்கு சங்கானை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது. (50-29)

# தாராக்குளம் வீடமைப்புத் திட்டம் விரைவில் மக்கள் பாவனைக்கு

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ். குடாநாட்டில் பாதுகாப்புக் காரணங்களுக்காக ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற்பாடுகளை உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தளர்த்தும் நடவடிக்கையினை தொடர்ந்து மேற்கொண்டு வரும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் யாழ். ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தாராக்குளம் வீடமைப்புத்திட்டத்தில் முன்னர் குடியிருந்த மக்கள் விரைவில் குடியமர்த்தப்படவுள்ளனர்.

இன்னும் சில தினங்களில் இவ் வீடமைப்புத்திட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் உத்தியோக பூர்வமாக வீடமைப்பு அதிகாரசபை மூலம் அங்கு ஏற்கனவே குடியிருந்த மக்களுக்கு கையளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (50)


## தவறிவிட்டன

பொன்னம்பலம் வீதி, அல்வாய் கிழக்கு, அல்வாயில் வசிக்கும் சின்னையா சிவராசன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (713184195V), பாடசாலை அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் என்பன குஞ்சர் கடைக்கும் நெல்லியடி சந்திக்கும் இடையில் தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசிஇலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும் : 0213006279

(91532)


## ஆலோசனைச்சபை கூட்டம் 22 ஆம் திகதி

சாவகச்சேரி நகர சபையின் உள்ளூராட்சி மறுசீரமைப்பு, நகர அபிவிருத்தி ஆலோசனை சபை ஆகியவற்றின் கூட்டம் எதிர்வரும் 22 ஆம்திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு நகரசபை கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

கூட்டத்தில் டெங்குஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கும் இடம் பெறும். (50-207)


AMW

# WANTED

**Showroom & Service Dealers in Jaffna**

**CONTACT - 077 3667419**


## தப்பி ஓடிய கைதிகளில் இருவர் பிடிபட்டனர்

கண்டி, டிசெ.18

போகம்பரை சிறைச்சாலையிலிருந்து தம்புள்ள நீதிமன்றுக்குக் கொண்டுவரப்பட்ட மூன்று கைதிகள் தப்பி ஓடிவிட்டனர். அவர்களில் இருவர் மீண்டும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். ஒருவர் தலைமறைவாகியுள்ளார். அவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

பல்வேறு திருட்டுச் சம்பவங்களில் தொடர் புடையவர்கள் இம் மூவரும் என்று தெரிவிக்கப்படு கின்றது. (ப)

## ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களுக்கு

யாழ்ப்பாணம்.டிசெ.18

விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து வந்து ஆரம்ப வகுப்புக்களில் சேர்ந்த எழுத வாசிக்க சிரமப்படுபவர்களுக்கான செயற்றிட்டத்தை செயற்படுத்துகின்ற பாடசாலைகளின் பொறுப்பான ஆசிரியர்கள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்துக்குச் சமுகமளிக்குமாறு யாழ். கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(50-201)


## மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை

MSS — WE SERVE TO PROTECT

வெற்றிடங்கள் : கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)

தகைமை: க.பொ.த. (சா.த) பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும்.உயரம் 5' 4''

வயதெல்லை: 25 வயதிற்கு மேற்பட்டோர்

நேர்முகப்பரீட்சை : 26.12.2009 அன்று காலை 10 மணிக்கு 651/12 நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறும்.

ஆவணங்கள் : கிராம சேவகரின் நற்சான்றுப்பத்திரம் (6 மாதத்திற்குட்பட்டது)
பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
கல்வித் தகைமைச் சான்றிதழ்கள்
தேசிய அடையாள அட்டை
உறவினரல்லாத இருவரின் நற்சான்றுப் பத்திரம்

மேற்கூறப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதியுடனும் போட்டோப் பிரதியுடனும் வருகை தரவும்.

*651/12, நாவலர் வீதி.*
*நல்லூர்,யாழ்ப்பாணம்.* **பணிப்பாளர்.**

(91535)



## கண்ணீர் அஞ்சலி

எம் சக நண்பன்

**இரத்தினம் ஜெயரட்ணசிங்கம்**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

விரிவுரையாளர்,
ஆங்கிலமொழிப்பிரிவு,
யாழ். பல்கலைக்கழகம். (91532)

அ. ராசகுமாரன்
குடும்பத்தினர்.



# Kalaimagal International College
## Primary Teachers' Training Course

*எமது கல்லூரி கண்டி மாவட்டத்தில் வெற்றிகரமாக இயங்கிவரும் ஆங்கிலமொழி மூலம் கற்பித்தலை மேற்கொள்ளும் கல்லூரியாகும். நாம் யாழ்.மாவட்டத்தில் 2010 ஜனவரி முதல் சாவகச்சேரி, நல்லூர், கொக்குவில் போன்ற பகுதிகளில் எமது கல்லூரியின் கிளைகளை ஸ்தாபிக்க உள்ளோம். அதற்கான தெளிவான விளக்கங்களை 16.12.2009 'உதயன்' பத்திரிகையில் விளம்பரம் மூலம் கொடுத்துள்ளோம்.*

*எமது கல்லூரியில் தற்போது வெளிமாவட்ட ஆசிரியர்களே கடமையாற்ற உள்ளார்கள். 2011 முதல் யாழ்.மாவட்ட ஆசிரியர்களை பயன்படுத்தும் நோக்கில் க.பொ.த. (உ/த) சிறந்த பெறுபேறுகளை எடுத்த மாணவர்களைத் தெரிவுசெய்து அவர்களைப் பயிற்றுவிப்பதற்காக முழுநேர ஆங்கில மொழி மூல ஆசிரியர் பயிற்சிக்கல்லூரியை யாழ்.மாவட்டத்தில் கொக்குவிலில் நிறுவி உள்ளோம். இக்கல்லூரியில் ஒருவருட கால முழுநேர ஆங்கில மொழிமூல ஆசிரியர் பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்யும் மாண வர்களை 2011 முதல் எமது ஆசிரியர் குழாமில் இணைத்துக் கொள்வதே எமது நோக்கமாகும்.*

*23.11.2009 உதயனில் வெளிவந்த எமது கல்லூரியின் ஆங்கில மொழிமூல ஆசிரியர் பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரும் விளம்பரத்திற்கேற்ப விண்ணப்பித்த 170 மாணவர்களுள் 75 மாணவர்கள் நேர்முகத் தேர்வில் வெற்றிபெற்று 23.12.2009 முதல் தமது பயிற்சி நெறிகளை தொடர உள்ளனர் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கும் அதே வேளை, எமது நோக்கில் 150 ஆசிரியர்கள் தேவை என்பதால் மீதம் உள்ள 75 மாணவர்களை உடனடியாகத் தெரிவுசெய்து தொகுதி II இல் இணைக்க உள்ளோம் என்பதால் க.பொ.த.(உ/த) சித்தியெய்திய சிறந்த பெறுபேறுகளை உடைய மாணவர்களிடமிருந்து இதற்கான விண்ணப்பம் இவ்விளம்பரம்மூலம் கோரப்படுகின்றது. தகுதியும், ஆற்றலுமுடைய மாணவர்கள் தமது கல்வித் தகைமைகளுடன் 18.12.2009 முதல் 22.12.2009 வரை காலை 9 மணி முதல் மாலை 3.30 மணிவரை கொக்குவிலில் உள்ள எமது ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு நேர்முகத்தேர்விற்கு இவ்விளம்பரம் மூலம் அழைக்கப்படுகிறார்கள். நேர்முகத்தேர்விற்கு வரும் மாணவர்கள் தமது கல்வித் தகைமையின் உண்மை நகல்களை எடுத்துவருவது மிகமிக அவசியமாகும். கணித, விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இருப்பினும் ஏனையவர்களும் நேர்முகத்தேர்விற்கு தோற்றலாம். தகுதி, ஆற்றல் அடிப்படையில் அவர்களும் தேர்வு செய்யப்பட்டு எமது பயிற்சி நெறியில் உள்வாங்கப்படுவார்கள் என்பதை தெரிவிக்கின்றோம்.*

மேலதிக விவரங்களுக்கு:
021 222 2773, 0778834592, 0779389006.

### எமது நிலையத்திற்கு வருவதற்கான வழி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி




தென்மராட்சிப் பிரதேசத்தில் முதன்முறையாக ஆங்கில பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை இன்று சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியாக இயங்குகிறது.

ஏழை மாணவர்களின் கல்வி நிலையை உயர்த்தி அவர்களை சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக திகழச் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் 130 வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை தொடர்ந்தும் தனது நோக்கத்தை நிறைவேற்றி வருகிறது.

இந்த நோக்கத்தை இக் கல்லூரியில் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் முழு மனதுடன் செயற்படுத்தி வருவது பாராட்டத்தக்கது.

ஆங்கிலேய ஆட்சி இலங்கையில் பரவியிருந்த காலத்தில் மதத்தினைப் போதிக்கும் பணியுடன் கல்வித்துறைக்கும் முக்கியத்துவம் கொடுத்து ஆங்கிலக் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு பிரதேச ரீதியாக ஆங்கிலப் பாடசாலைகளை உருவாக்கினர்.

அந்த வகையில் 1834ஆம் ஆண்டு சந்தையடி பள்ளிக்கூடம் என அழைக்கப்படும் சாவகச்சேரி ஆங்கிலப் பள்ளியை வணபிதா ஜோன் ஸ்கட்டர் (Rev.John Scutter) என்பவர் ஆரம்பித்தார். சுமார் 20 வருடங்கள் இயங்கிவந்த இப்பாடசாலை பல்வேறு காரணங்களால் செயலிழந்து போயின.

பின்னர் 1874ஆம் ஆண்டு அப்போதைய திருச்சபை ஊழியரான வண. T.P.ஹன்ற் அவர்களும் இப் பகுதியில் நீதிவானாகக் கடமையாற்றிய ஜேம்ஸ் ஸ்ருவாட் டிறிபேர்க் என்பவரும் இணைந்து இப் பாடசாலையை மீள இயக்கும் முயற்சியில் ஈடுபட்டு 1875ஆம் ஆண்டு டிறிபேர்க் ஆங்கில ஆரம்பப் பாடசாலையாக புத்துயிர் பெறச் செய்தனர். பாடசாலையும் திருச்சபையும் அருகருகே இருந்ததால் அதன் சுற்றாடலில் வாழ்ந்த குடும்பங்கள் ஆங்கிலக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் பாடசாலை வளர்ச்சி கண்டது.

தென்மராட்சி வாழ் மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவதற்காக 1834ஆம் ஆண்டு தொடக்கம் மிஷனறிமார் செய்து வந்த அர்ப்பணிப்புகளுடனான கல்வி, மருத்துவ, சமூகப் பணிகளின் விளைவும், ஆங்கிலக் கல்வியினால் அடைய முடிந்த அரச பணிகள் மீதான அவாவும் ஈழத் தமிழரின் இயல்பான கல்வி நாட்டமும் இணைந்து டிறிபேர்க் ஆங்கில ஆரம்பப்பள்ளி மிக விரைவாக வளர்ச்சியடைந்தது.

1875ஆம் ஆண்டு ஆங்கில ஆரம்பப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட போது இரண்டு ஆசிரியர்கள் பணியில் இருந்தனர். 77 மாணவர்கள் கல்வி கற்றனர். ஆங்கிலம், கணிதம், சமயம் ஆகிய பாடங்களே ஆரம்பத்தில் போதிக்கப்பட்டன. அக் காலத்தில் இருந்த சமூகக் கட்டமைப்பு, இந்து சமயம் என்பன மாணவர்கள் இப் பாடசாலையில் இணைந்து படிப்பதில் பெரும் தடையாக இருந்த போதிலும் மிஷனறியினர் பிரதேசத்தில் கிராமங்கள் தோறும் மேற்கொண்ட பிரசாரங்கள் டி றிபேர்க் ஆங்கிலப் பாடசாலையில் மாணவர்கள் சேர்ந்து படிப்பதை படிப்படியாக ஊக்குவித்தன.

1899இல் ஆர்.எச்.முத்தையா என்பவர் இப் பாடசாலையின் தலைமை ஆசிரியராகப் பொறுப்பேற்ற பின்னர், இவர் காலத்தில் பாடசாலையில் கற்ற பலர் இலங்கையின் உயர் பதவிகள் பெற்றுப் பாடசாலையின் பெருமையை உயர்த்தினர்.

1913ஆம் ஆண்டு வண.யோசப் இய்ஸ்பரி சின்னத்தம்பி அடிகளார் என்பவர் மிஷன் பாடசாலைகளின் முகாமையாளராக நியமிக்கப்பட்டிருந்தார். இவருடைய காலத்தில் பாடசாலையின் தலைமை ஆசிரியராக இருந்தவர் ஈ.எஸ்.ஏபிரகாம் என்பவர். இவர்களது காலத்தில் பாடசாலையில் கற்ற மாணவர்களின் எண்ணிக்கை 300ஆக உயர்ந்ததுடன், அவர்களில் 30 பேர் பெண்களாக இருந்தமை மிஷனரிக்கும் கல்வி உலகத்திற்கும் சமூகத்திற்கும் கிடைத்த பெரு வெற்றியெனலாம்.

1931ஆம் ஆண்டு டிறிபேர்க் ஆங்கில ஆரம்பப் பாடசாலை டிறிபேர்க் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது. இக் கல்லூரியில் சிரேஷ்ட பாடசாலை சான்றிதழ் அல்லது லண்டன் மெட்றிக்குலேசன் தரம் கொண்ட கல்லூரியாக மாற்றம் பெற்றது. கடந்த 1941ஆம் ஆண்டு இப் பரீட்சைக்குத் தோற்றிய 18 மாணவர்களில் 16 பேர் சித்திபெற்று மாவட்டத்தில் இக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றது.

இக்கல்லூரியின் வளர்ச்சியினால் நூலகம், ஆய்வுகூடம் போன்ற செயற்பாடுகளும் கொண்டு இயங்கின. அத்துடன் இக் கல்லூரியின் கல்வி அபிவிருத்தியினால் தென்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு வந்து கல்வி கற்கத் தொடங்கினர். அதனால் மாணவர் விடுதியும் உருவாக்கப்பட்டது.

(வளரும்)

# சாவகச்சேரி பொதுச்சந்தை



சாவகச்சேரி சந்தையென்றால் உலகில் எப்பாகத்திலும் உள்ள அனைவருக்கும் தெரியும். அந்த அளவுக்குப் பிரபல்யம் மிக்கதாக இருந்தது. யாழ்.மாவட்டத்தின் அனைத்துப் பகுதி மக்களும் தமது வீட்டு, ஆலய விசேடங்களுக்கு பொருள்கள் கொள்வனவு செய்வதற்கு சாவகச்சேரி சந்தைக்கே வருகை தருவர்.

நீண்ட காலமாக சாவகச்சேரி, சுன்னாகம் ஆகிய இரு சந்தைகளுமே உற்பத்தியாளர்களுக்கும் கொள்வனவாளர்களுக்கும் கைகொடுக்கும் சந்தைகளாக காணப்பட்டன. சாவகச்சேரிச் சந்தையில் தென்மராட்சி, வலிகாமம், வடமராட்சி, தீவகம் போன்ற பிரதேசங்களில் உற்பத்தியாகும் பொருள்கள் விற்பனைக்குக் கொண்டு வரப்படுவதால் தென்னிலங்கை, வன்னி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பெருமளவு வியாபாரிகள் லொறிகளிலும் புகையிரதங்களிலும் வருகை தந்து பொருள்களைக் கொள்வனவுசெய்து கொண்டுசெல்வர்.

சாவகச்சேரி பொதுச்சந்தை கண்டி வீதியின் அருகே இருந்ததாலும் சாவகச்சேரி புகையிரத நிலையம் சந்தையிலிருந்து 100 யார் தூரத்தில் இருந்ததாலும் சாவகச்சேரியிலிருந்து பூநகரி, பருத்தித்துறை, கோப்பாய், சங்கானை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வரணி, கச்சாய் போன்ற இடங்களுக்குச் செல்லக் கூடிய தார் வீதிகள் அமைந்திருந்ததாலும் பிரபல்யமடையக் காரணமாக அமைந்திருந்தது.

சாவகச்சேரியில் கிராமச் சங்கம் இயங்கிய காலத்தில் 1930 ஆம் ஆண்டில் பிரதேச உற்பத்தியாளர்களால் சந்தை உருவாக்கப்பட்டது. சாவகச்சேரி நகர்ப்பகுதி கடலேரியில் பிடிக்கப்படும் கடல் உணவுகள், நகரத்தை அண்டிய கச்சாய், மட்டுவில், கைதடி, வேம்பிராய் போன்ற இடங்களில் உற்பத்திசெய்யப்படும் மரக்கறி வகைகளும் சந்தையில் விற்பனைக்குக் கொண்டு வரப்பட்டன.

அன்றைய காலங்களில் சந்தைக்கு கொண்டு வரப்படும் பொருள்களுக்கு குத்தகைப் பணத்திற்கு பதிலாக பொருள்கள் குத்தகை யாளர்களால் பெறப்பட்டதாகவும் 1934 ஆம் ஆண்டு கிராம சபையின் தலைவராக இருந்த அருணாசலம் என்பவரின் ஆட்சிக் காலத்தில் சந்தையில் முதலாவது கட்டடம் அமைக்கப்பட்டு அன்றாட வியாபாரத்திற்கு வழங்கப்பட்டன.

இக்கட்டடத்தில் புடைவை, வெற்றிலை பாக்கு, பலசரக்கு போன்ற வியாபாரம் நடத்தப்பட்டன. ஏனைய உற்பத்திப் பொருள்கள் மர நிழலில் வைத்து விற்பனை செய்யப்பட்டன.

கிராம சபையின் தலைவராக அருணாசலம் இருந்த காலத்தில் கிராம சபை ஊழியர்கள் மூலம் சந்தைக்கு கொண்டு வரப்படும் பொருள்களுக்கு வரியாக கட்டணம் அறவிடும் நடைமுறை கொண்டு வரப்பட்டது. காலத்தின் தேவைக்கேற்ப ஒவ்வொரு பிரிவுக்குமென தனித்தனிக் கொட்டகை அமைத்து அவற்றினுள்ளே வியாபாரிகளால் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் மட்டுமல்ல இலங்கையில் எந்தவொரு சந்தையிலும் ஒரு பொருளுக்கென ஒரு பிரிவு அமைக்கப்பட்டு விற்பனை செய்வது சாவகச்சேரி சந்தையில் மட்டுமே. மரக்கறி, வொங்காயம், தோங்காய், வாழைப்பழம், பழவகை, கீரை, அங்காடி விற்பனை, கடல் உணவுகள் வெற்றிலை போன்ற பொருள்கள் தனித்தனியான கட்டடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இன்று வரையும் அந்த நடைமுறையில் மாற்றமில்லாமல் உள்ளது.

முன்னைய காலங்களில் மட்டுமே உற்பத்திப் பொருள்கள் சந்தைக்குக் கொண்டு வரப்பட்டன.

பயிற்றங்காய், பாகற்காய் ,வெண்டிக்காய், பூசணி, மரவள்ளி, வற்றாளை உட்பட்ட மரக்கறிகள் பருவகாலங்களில் மட்டும் கொண்டு வரப்படும்.

தை மாதம் தொடக்கம் பங்குனி மாதம் வரை கச்சாய் கத்தரிக்காயும் , பங்குனி மாதம் தொடக்கம் ஆடி மாதம் வரை மட்டுவில் கத்தரிக்காயும் சந்தையில் பிரபல்யம் பெற்றிருக்கும்.

(வளரும்)

## தென்மராட்சி வலம்

தொகுப்பு: ஜயந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புடையார் எல்லாம் மனிதரில் தெய்வமாவர்

மனிதனை இனங்காட்டுவதும், உயர்த்துவதும், பணமோ, பதவியோ, குலமோ, கோத்திரமோ அன்று. குணமாகிய, அன்பே மனிதனை அடையாளம் காட்டுவதோடு மேன்மையை அளிக்கிறது. அன்பிலா ஒருவன் தான் மனிதனென்று சொல்லத் தகுதியற்றவனாகிறான். இதையே வள்ளுவர், அன்பிலா ஒருவன் பிணமென்று கூடச் சொல்லத் தகுதியற்றவன் என்கிறார். எவ்வாறெனில் பிணமானது தன்னை சுமப்பவர்க்கும், எரிப்பவர்க்கும் ஊதியம் தந்து உதவுகிறது. எனவேதான் அன்பிலா ஒருவனை ''என்பு போர்த்த உடம்பு'' என்கிறார் திருவள்ளுவர்.

திருஞானசம்பந்தர், இறைவனை அணுகும்போது, ''காதலால் கசிந்து கண்ணீர் மல்கியதாக'' கூறுகிறார். அன்பால் கண்கள் கண்ணீர் சிந்துவதால் கிடைக்கும் இன்பம், பேரின்பமாகும். அடிமை ஒருவனை விலைக்கு வாங்கலாம், ஆனால் அவனிடம் அன்பை எதிர்பார்க்க முடியாது. அன்பை, அன்பால் மட்டுமே பெறமுடியும்.

இத்தகைய அன்பைப் பற்றி திருநாவுக்கரசு சுவாமிகள் கூறும்போது, ''இறைவனிடத்திலே அன்பு இல்லாதவர்கள் பெருங்குலத்திலே பிறந்து, பெரும் செல்வராகி, எனக்கு மண்ணுலக வாழ்வும், விண்ணுலக அரசும் தந்து உதவி புரிவாராயினும், அவர்களை நான் ஒரு பொருளாக மதிக்கமாட்டேன். அதற்கு மாறாக இறைவனிடத்திலே அன்பு வைத்தவர்கள், அங்கம் அழுகிய தொழுநோயராயினும், பசுவையறுத்துண்ணும் புலையர் குலத்திலே பிறந்தவராயினும் அவர்களே நான் வழிபட விரும்பும் கடவுள் என்கிறார்.

ஞானக்கதிர்

''சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தனியொரு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போமல்லோம்
மாதேவர்க் கேகாந்த பல்லா ராகில்
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆ வுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க் கண் பாராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே''

இந்த அன்பு என்ற பக்தியானது, சித்தியையும், முத்தியையும் சேர்த்துத்தரும் வல்லமை படைத்தது. அன்பின் விளைவுகளை ஆதிசங்கரர் இவ்வாறு வியந்து கூறுகிறார்.

அன்பால்-தேய்ந்து பழஞ்செருப்பும் இறைவனுடைய புருவத்தைத் தொட்டது. கொப்புளித்து உமிழ்ந்த நீர் இறைவனுக்கு அபிஷேகத் தீர்த்தமானது. கடித்து எச்சில்செய்த புலால் துண்டு இறைவனுக்கு அமுதாகியது. வேடர் குலத்திலே பிறந்த தின்னன் பக்த சிரோன்மணியாக மாறினான். ஆகவே அன்பு எதைத்தான் செய்யாது. அன்பால் ஆகாதது எது என்று கண்ணப்பருடைய வாழ்க்கையையும், அன்பின் வலிமையையும் எண்ணி வியக்கிறார் ஆதிசங்கரர்.

இதேபால் பட்டினத்தாரும் வியக்கிறார்.

'வில்லால் அடிக்க செருப்பாலுதைக்க வெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கக் களிவண்டு கூர்ந்து
அல்லார் பொழில்தில்லை அம்பலவாணர்க்கு ஓர் அன்னைபிதா
இல்லாததால் அல்லவோ, இறைவா கச்சி ஏகம்பனே'' என்றும்,

உன்மீது அன்புவைத்தார் என்ற ஒரு காரணத்திற்காக, இதையெல்லாம் தாங்கிக் கொண்டாயா? தட்டிக்கேட்க உனக்கு ஒரு தாயில்லையா? என்று கேட்கிறார் பட்டினத்தார். இறைவன் தன் அன்பரின் அன்புக்காக 'பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்டவன் அல்லவா? குழந்தைகள் இனிப்புப் பொருள்கள் தருபவரிடம் கொள்ளைப் பிரியம் கொள்வதைப்போல், இறைவன் அன்பு வலை விரிப்பவர்களிடம் தானே வலியவந்து அகப்பட்டுக் கொள்கிறான்.

இத்தகைய விலைமதிப்பில்லா அன்பைப் பரிமாறிக் கொள்ளாத மனிதர்களைப் பார்க்கும்போதெல்லாம் ஒரு மகான் இப்படித்தான் அழைப்பாராம். இந்த மகான் திருவொற்றியூர் நெல்லிக்கா பண்டாரத்தெருவில் வாழ்ந்தவர். மக்கள் மாலையிலே வொற்றியூர் தியாகமே வடிவான பெருமானை வணங்கச் செல்லும்போது, அம்மக்களைப் பார்த்து இதோ, 'குதிரை போகிறது'', ''எருமை போகிறது'', ''நாய் போகிறது'', ''நரி போகிறது'', ''ஆடு போகிறது'', ''புலி போகிறது'', ''பெருச்சாளி போகிறது'' என்பாராம். ஆனால் அதே வழியில் இராமலிங்கர் போனால் மட்டும் இதோ ''மனிதன் போகிறான்'', ''மகான் போகிறார்'' என்பாராம்.

மக்களிடம் இருந்து வள்ளலாரை இனம்பிரித்துக் காட்டியது அவர் பிற உயிர்மேல் காட்டிய அன்பு, கருணை, தயை இவையே ஆகும். ''வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடியவர் அல்லவா! இறைவனிடத்திலே இவர் வேண்டியதெல்லாம்.

''அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்''

என்பதே. இத்தகைய அன்புள்ளங் கொண்டவர் ''மனிதரில் தெய்வம்'' அல்லவா! எனவே, அன்பென்பது ஆண்டவனுக்குக் கொடுக்கும் காணிக்கையில் இல்லை. அடியார்க்குச் செய்யும் தொண்டில் இருக்கிறது என்கிறது இந்துமதம். சமாதானம் என்பது தேவாலயத்தில் இல்லை. அது சமுதாயத்தில் இருக்க வேண்டியது என்கிறது கிறிஸ்தவம். இறைவன் எல்லாமுமாய் இருக்கிறான் என்றது இஸ்லாம்.

இப்படி எல்லா பக்திமார்க்கங்களும் அன்பைப்பற்றி வலியுறுத்தி வந்தாலும், அன்பென்பது இன்றைய சமுதாயத்தில் வசனங்களாகவும், வாசகங்களாகவும் உள்ளனவே தவிர வாழ்வியலில் கருவாக இன்னும் உயிர்பெறவில்லை. எனவே அன்பென்பது ஓர் ஆன்மீக அனுபவம் மட்டுமல்ல. அன்பேசிவம்; அன்பே அறம்!

நன்றி: ஆன்மீகம்.

## கண்ணீர் அஞ்சலி

திருநெல்வேலி சமுர்த்தி வங்கி முகாமையாளர்
திரு.சோ.சுஜீவகுமார் அவர்களின் அன்புத் தாய்
திருமதி சோமசுந்தரக்குருக்கள் கோமளாம்பிகை அவர்களின்
மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரின்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம், நல்லூர். (சி/563321)
நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.


## ஜயவிரு JAYAVIRU

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு இலக்கம் 491
சீட்டிழுப்பு திகதி: 16.12.2009

வெற்றி எழுத்து: U
வெற்றி இலக்கங்கள்: 51 57 59 62

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றி பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்துடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ.18,724,062.00 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000,000/- | 01 |
| 2 பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்களும் பொருந்தினால் | ரூ. 50,000/- | 10 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 2,000/- | 216 |
| 4 பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் பொருந்தினால் | ரூ. 1,000/- | 423 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 40/- | 10800 |
| 6 பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் பொருந்தினால் | ரூ. 40/- | 6152 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 155973 |
| 8 பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் பொருந்தினால் | ரூ. 20/- | 25013 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்த தொகை ரூ. 7,652,800.00

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03,
தொலைபேசி அவசர : 2470662, 2470663
தொலைநகல்: 2473360, 2433631
இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ.18,881,222.80

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.


## குமுதினிப் படகில் தொலைபேசி வசதி

நெடுந்தீவு, டிசெ.18

குமுதினி படகில் சி.டி.எம்.ஏ.தொலைபேசி ஒன்று பொருத்தப்படவுள்ளது. படகில் தொலைபேசியைப் பொருத்துவதற்கென நெடுந்தீவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பொறியியலாளர் கு.குணநாயகத்தின் புதல்வர் திவாகரன் குறிப்பிடப்பட்ட தொலைபேசியை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

படகில் பொருத்துவதற்கென குறிப்பிட்ட சி.டி.எம்.ஏ.தொலைபேசி வீதி அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்.அலுவலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது. (50-111)

## மீள் குடியமர்ந்தோருக்கான கொடுப்பனவு இன்று

வலி.மேற்கு,டிசெ.18

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் ஜே/153 (பெரியவிளான்), ஜே/154 (மாரீசன் கூடல்), ஜே/155 (இளவாலை), ஜே/156 (முள்ளானை) ஆகிய கிராம சேவகர் பிரிவில் மீள்குடியமர்ந்தவர்களுக்கான அகதிகளுக்கு ஐ.நா.நிறுவனத்தின் 20 ஆயிரம் ரூபா கொடுப்பனவு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் பெரியவிளான் றோ.க.த.பாடசாலையில் வைத்து வழங்கப்படவுள்ளதாக பிரதேச செயலர் ம.ஜெகூ அறிவித்துள்ளார். (50-112-100)

## ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தவர்களுக்கான உறுதிப் பத்திரம்

சங்கானைப் பிரதேச செயலகத்தில் சென்ற வருடம் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைந்தவர்களுக்கான உறுதிப்பத்திரம் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் உரியவர்கள் தத்தமது கிராம சேவகர்களிடம் தொடர்புகொண்டு பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறும் வலி.மேற்குப் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் அறிவித்துள்ளார். (50-112)

## செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுக் கிளைக்கு தளபாடங்கள்

நெடுந்தீவு, டிசெ.18

கனேடிய செஞ்சிலுவைச் சங்கம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரிவுக்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா பெறுமதியான தளபாடங்களை வழங்கியுள்ளது என நெடுந்தீவுப் பிரிவுத் தலைவர் எ.அருந்தவசீலன் தெரிவித்தார். (50-111)


A/L பெறுபேறுகளின் பின் பல்கலைக்கழக அனுமதி பெற்றவர்களுக்கான விசேட தொழில்சார் பயிற்சிகள் ஆரம்பம்

Advanced Diploma in Java Programming
Logic Building with 'C' Language, OOPS Using with C++, HTML, Sun Java 2.0, RMI, Servlets, Project
4 Months

TALLY FINANCIAL ACCOUNTING
Tally
Principles of Accounting, Voucher, Ledgers, Advanced Inventory, Billing, VAT, Bank Reconciliation, TB, Balance Sheet, P & L A/C, Stock, Cash & Fund Flow, Pay Roll, Graphical Analysis & Reports.
2-3 Months

ASIAN - CSC COMPUTER EDUCATION
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088, 077-3122198

af
ALLIANCE FRANCAISE DE JAFFNA
61,Kachcheri-NallurRoad,Jaffna
Phone: 021.2228093
E_Mail:allancejaffna@yahoo.com

Learn French the French Way French

சர்வதேச மொழியான French மொழி யாழ்ப்பாணத்தில், French Embassy இன் அனுசரணையுடன் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரெஞ்சு கலாச்சார மையத்தின் ஊடாக கற்பிக்கப்படுகிறது.

எங்களுடைய நூலகத்தை மாணவர்கள் மற்றும் அங்கத்தவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்.

- மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர்,மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.
- புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன
- அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
- மேலதிக விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாக பெறலாம்.

(91506)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



திருமதி
சுப்பிரமணியம் தெய்வநாயகி
(தங்கமுத்து)

மலர்வு: 13.02.1932 திதி:
உதிர்வு: 18.11.2009 துதியை

அன்னாரின் மரணச்செய்தி அறிந்து எமது துயரில் பங்குகொண்டவர்களுக்கும் தொலைபேசி, தந்தி, கடிதம் மற்றும்நேரில் வந்து அஞ்சலி செலுத்திய அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கடந்த (18.11.2009) வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்ப விளக்கு திருமதி சுப்பிரமணியம் தெய்வநாயகி அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.12.2009) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னை இல்லம்,
மந்துவீல் மேற்கு, கொடிகாமம்.
குடும்பத்தினர்.
(சி/563311)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
கார்த்திகேசு மகாலிங்கம்
(Chartered Civil Engineer)
(இளைப்பாறிய பொறியியலாளர்)

மலர்வு: 01.05.1942
உதிர்வு: 29.12.2008

நீங்கள் எமைவிட்டுப்பிரிந்து ஆண்டு ஒன்று ஆனாலும் உங்கள் நினைவு என்றும் எமைவிட்டு அகலாது. பண்பும் அன்பும் பாசமும் நிறைந்து சிறந்த பொறியியல் வல்லுனராகக் கடமையாற்றி இளைப்பாறியவரின் ஆண்டுத் திவசம் இன்று (18.12.2009) வெள்ளிக்கிழமை அவுஸ்திரேலியாவிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெறுகிறது. அவரது ஆத்மா இறைவன் திருவடி நிழலில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்களை என்றும் அன்புடன் நினைவு கூரும் பாசம் மிகுந்தவர்கள்.

பேர்த், அவுஸ்திரேலியா.
(91474)
குடும்பத்தினர்.
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடம்பெயர்ந்தோர் வாக்களிப்பதற்கு வசதி செய்யுமாறு பிரிட்டன் வற்புறுத்து

## நாடாளுமன்றத்தில் மில்லிபாண்ட் அறிக்கை

லண்டன், டிச. 18



இலங்கையில்தேர்தல் சுதந்திரமாகவும் நீதியாகவும் இடம்பெறவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள பிரிட்டன், இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கானபோதிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் கோரியுள்ளது.

பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை தாம் எழுத்துமூலம் விடுத்துள்ள நீண்ட அறிக்கையிலேயே அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் டேவிட் மில்லிபாண்ட் இவ்விடயங்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின்மனித உரிமை நிலைவரம் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியம் ஒக்ரோபர் மாதம் வெளியிட்ட கடும் கவலைகளை பிரிட்டனும் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ள டேவிட் மில்லிபாண்ட், 'ஜி.எஸ்.பி.' வரிச் சலுகையை அனுபவிப்பதற்காக இலங்கை தனது மனித உரிமைக் கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் தீர்வு, இடம்பெயர்ந்தவர்கள் நிலை உட்பட பல விடயங்கள் தொடர்பாக மில்லிபாண்ட் அந்த அறிக்கையில்மேலும் வலியுறுத்தியுள்ளவை வருமாறு:-

அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கக்கூடிய அளவிற்கு முகாம்களில் நிலைமை முன்னேற்றமடைந்துள்ளது.

இடம்பெயர்ந்த மக்கள் முகாம்களிலிருந்து விடுவிக்கப்படும் விடயத்திலும் கடந்த சில வாரங்களில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. டிசம்பர் 6 ஆம் திகதி வரை இடம்பெயர்ந்த மக்கள் ஒரு லட்சத்து 58 ஆயிரம்பேர் வரை விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பதை ஐ.நா. உறுதி செய்துள்ளது. இவர்களில் சுமார் 29 ஆயிரம் பேர் அவர்களது உறவினர்களின் வீடுகளுக்கோ அல்லது அமைப்புகளுக்கோ இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன் காரணமாக 'மெனிக் பார்ம்' முகாமில் ஒரு லட்சத்து 12 ஆயிரம் பேரே எஞ்சியுள்ளனர். ஏனைய பகுதிகளில் உள்ள முகாம்களில் பதினைந்தாயிரத்துக்கும் குறைவான மக்கள் உள்ளனர்.

### பிரிட்டன் நிதியுதவி

இந்த மக்கள் தமது பகுதிகள் பாதுகாப்பானவையாக மாறியவுடன் விரைவாக மீளக் குடியேற அனுமதிக்கப்படுவது அவசியம்.

இந்த நடவடிக்கைக்கு உதவுவதற்காக நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் செயற்பாடுகளுக்கு பிரிட்டன் தொடர்ந்தும் நிதியுதவி வழங்குகின்றது.

நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணிகள், முகாமிலிருந்து செல்வதற்கான போக்குவரத்து போன்றவற்றிற்கும் மக்கள் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கும் பிரிட்டன் தொடர்ந்தும் உதவும்.

டிசம்பர் முதலாம் திகதி முதல் இடம்பெயர்ந்த மக்களுக்கு நடமாட்ட சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது என்ற இலங்கை அரசின் அறிவிப்பு சாதகமான விடயமாகும். இது மிக விரைவில் தடையற்ற நடமாட்ட சுதந்திரத்திற்கு வழிவகுக்கும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

முன்னாள் போராளிகள் உட்பட சகல இடம்பெயர்ந்த மக்களையும் மனிதாபிமான அமைப்புகள் சென்றடைவதற்கான அனுமதி வழங்கப்படுவது அவசியம். இதன் மூலம் முகாமிலும், மீள்குடியேறும் இடங்களிலும் அந்த மக்களுக்கு அவசியமாகவுள்ள பாதுகாப்பையும், உதவியையும் வழங்க முடியும்.

மனிதாபிமானக் கரிசனைகளுக்கு அப்பால் இலங்கையில் சமூகங்களுக்கு மத்தியில் நேர்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசிற்கு வலியுறுத்தி வந்துள்ளோம்.

### நிரந்தரத் தீர்வு அவசியம்

இலங்கையின் சகல சமூகங்களினதும் நியாயபூர்வமான அபிலாஷைகள், துயரங்களைக் கருத்தில் கொள்ளும் அரசியல் தீர்வே நிரந்தர சமாதானத்திற்கு முக்கியமான விடயம்.

இலங்கையில் ஜனவரி 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

2010 நாடாளுமன்றத் தேர்தல், சமூகங்கள் தமது குரலை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாக அமையும்.

இலங்கையில் சுதந்திரமான, நீதியான தேர்தல் நடைபெறுவது, நாட்டின் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் தமது கருத்தை சகல சமூகங்களும் வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பை வழங்கும்.

இடம்பெயர்ந்த மக்கள் வாக்களிப்பதற்கு அவசியமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்- என மேலும் அவர் தெரிவித்துள்ளார். (சி)

# பொன்சேகாவின் கூற்றால் இலங்கைக்கு அபகீர்த்தி

## ஊடகத்துறை அமைச்சர் விசனம்

கொழும்பு, டிச. 18

அரசியல் நோக்கங்களைப் பூர்த்தி செய்வதற்காக ஜெனரல் சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்து பாரதூரமானது என்று ஊடக அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார். சரத் பொன்சேகாவின் சர்ச்சைகுரிய அறிக்கையின் காரணமாக சர்வதேச ஊடகங்களில் இலங்கைக்கு எதிராக பல்வேறு செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் நோக்கில் சரத் பொன்சேகா வெளியிட்ட பொறுப்பற்ற கருத்து முழு நாட்டின் நற்பெயருக்கும் களங்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் இந்த அரசை மட்டுமன்றி எதிர்வரும் காலங்களில் பதவியேற்கும் அரசுகளையும் பாதிக்கச் செய்யும்.

இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்ட யுத்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுபடுவதற்கு அரசு கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது. இந்த முயற்சிகளின்போது சீனா, ரஷ்யா மற்றும் வியட் நாம் போன்ற நாடுகள் இலங்கைக்குத் தமது பூரண ஆதரவை வழங்கின. இவ்வாறான ஒரு பின்னணியில் சரத் பொன்சேகாவின் அண்மைய கூற்று இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மீண்டும் சர்வதேச அரங்கில் தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

சரத் பொன்சேகாவின் கூற்றுக்கள் ஊடகங்களில் பிழையான வகையில் அர்த்தப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான தகவல்களை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். (சி)

# தரம்-5 புலமைப் பரிசிலில் சித்தியடைந்த மாணவருக்கு பரிசளிப்பு இன்று

வலி.கிழக்கு, டிசெ.18

வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்க கிளை இல.1 இனால் நடத்தப்படுகின்ற தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு நீர்வேலி போயிட்டி இளந்துளிர் சிறுவர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவும் சிறப்பு விருந்தினர்களாக சமூக சேவைத் திணைக்கள மாவட்ட அலுவலக முகாமைத்துவ உதவியாளர் நா.இராசநாயகம் மற்றும் நீர்வேலி, வலி.கிழக்கு ப.நோ.கூ.சங்க முகாமையாளர் க.சிவலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (50-16-288)

# அரச ஊடகங்களின் பக்கச்சார்பு குறித்த முறைப்பாடுகளை தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்து நிவாரணம் கோரலாம்

## பொன்சேகாவுக்கு உயர்நீதிமன்றம் ஆலோசனை

கொழும்பு, டிச. 18

'ரூபவாஹினி', ஐ.ரி.என்., 'லேக் ஹவுஸ்' போன்ற அரச ஊடகங்கள் ஜனாதிபதித் தேர்தலை ஒட்டிய விடயங்களில் பக்கச்சார்பாக நடந்துகொள்கின்றன எனத் தெரிவித்து, அதனை ஆட்சேபித்து எதிர்க்கட்சிகளின் சார்பில் பொதுவேட்பாளராகப் போட்டியிடும் ஜெனரல் சரத்பொன்சேகா தாக்கல செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனு முன்தினம் ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயத்தின் முன் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த விடயத்தில் மனுதாரர் முதலில் தேர்தல் ஆணையாளரிடம் முறையிட்டு நிவாரணம கோரியிருக்கலாம் என்றும் -

தேர்தல் ஆணையாளர் தேர்தல் சட்ட விதிகள் மற்றும் ஒழுங்குகளுக்கு அமைவாக உரிய நடவடிக்கை எடுக்கத் தவறுவாரானால் மனுதாரர்கள் அவருக்கு எதிராக 'ரிட்' மனு ஒன்று தாக்கல் செய்ய முடியும் என்றும் -நீதியரசர்கள் நேற்று முன்தினம் தெரிவித்தனர்.

பிரதம நீதியரசர் அசோகா டி சில்வா, நீதிய ரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா, நிமால் காமினி அமரதுங்க, சலீம் மார்சூக், பி.ஏ. ரட் ணாயக்க ஆகியோர் முன்னிலையில் அடிப்படை உரிமை மீறல் மனு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிரதம நீதியரசர் மேற்படி ஆலோசனைக் கருத்தைத் தெரிவித்தார்.

எனினும், இந்த விவகாரம் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால் இந்த மனுவைத் திருத்தி மீண்டும் இன்று பிற்பகலில் நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ள நீதிமன்றம் அனுமதித்தது.

இதேவேளை -

அரச ஊடகங்களின் செயற்பாடுகளை ஆட்சேபித்து ஐ.தே.கட்சி சார்பில் அதன் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க சார்பிலும் நேற்று முன்தினம் அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. அவையும் இன்று,சரத்பொன்சேகாவின் மனுவுடன் சேர்த்து உயர்நீதி மன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படு கின்றது. (சி)

# வன்னி மக்களின் மீள்குடியமர்வை வாக்களிப்புக்கு முன் உறுதிப்படுத்துக

## அரசை வற்புறுத்துகின்றார் கருஜயசூரிய

கொழும்பு, டிச. 18

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு ஒரு கிழமைக்கு முன் வன்னி அகதிகள்



அனைவரும் மீள்குடியமர்த்தப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவரும்எம்.பியுமானகருஜயசூரிய அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் அவர் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடிய போதே இவ்வேண்டுகோளை முன்வைத்தார். இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த ஜனாதிபதித் தேர்தல் நீதியானதும் நேர்மையானதுமாக இருக்க வேண்டும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் அரசு செய்து தரவேண்டும்.

இப்போதே தேர்தல் வன்முறைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. ஓரிரு தினங்களுக்கு முன் ரவி கருணாநாயக்க எம்.பியின் கூட்டத்திற்கும், களனியில் இடம்பெற்ற ஜே.வி.பியின் கூட்டத்திற்கும் தடைகள் ஏற்படுத்தப்பட்டன. அரச முக்கியஸ்தர்களே இதன் பின்னணியில் உள்ளனர்.

அரசமைப்பின் 17 ஆவது திருத்தம் நடைமுறைப்படுத்தப்படாமையால் அரசமைப்புச்சபை செயலிழந்து சுயாதீன ஆணைக்குழுக்களும் செயலிழந்துள்ளன.

தேர்தல் ஆணைக்குழு மீண்டும் ஸ்தாபிக்கப்படும் வரை அந்த ஆணைக்குழுவின் அதிகாரங்களைத் தாம் தன் கையில் வைத்திருக்கப் போகிறார் என்று தேர்தல் ஆணையாளர் கூறியுள்ளார். நியாயமான தேர்தல் ஒன்றை நடத்த தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தற்போது வவுனியா அகதி முகாம்களில் உள்ள அகதிகள் சுதந்திரமாக நடமாட முடியும். ஆனால், வடக்கில் தேர்தல் பிரசாரங்கள் நடத்துவதற்காக எதிர்க்கட்சி எம்.பிக்களால் மதவாச்சிக்கு அப்பால் செல்லமுடியாதுள்ளது.

முகாம்களில் உள்ள அகதிகள் அனைவரும் தேர்தலுக்கு முன் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். ஆகக் குறைந்தது தேர்தலுக்கு ஒரு கிழமைக்கு முன்னராவது மீள்குடி யேற்றம் முற்றுப்பெற வேண்டும். - என்றார்.



கடந்த சில தினங்களாகத் தொடர்ந்து பெய்த கடும் மழையினால் வடமராட்சியில் தாழ்ந்த நிலப் பகுதிகளில் அமைந்துள்ள வீடுகள், ஆலயங்கள், கிணறுகள் என்பன வெள்ளத்தில் மூழ்கின.

தோட்டப் பகுதியில் உள்ள கிணறு, சக்கோட்டை புனித சவேரியார் ஆலயம், வீடுகள் என்பன வெள்ளத்தில் மூழ்கியுள்ளதையும், வெள்ளத்தால் இடம்பெயர்ந்த மக்களுக்கு படையினர் உணவுப் பொருள்களை வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்; சுந்தா)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருப்பெயர்ச்சியால் உங்களின் பலன் மாறப்போவது எப்படி?

-வித்யா தருவதைப் படியுங்கள்

## கடகம்

இராமன் ஆண்டால் என்ன, இராவணன் ஆண்டால் என்ன என்றில்லாமல் உலகநடப்பை அன்றாடம் உன்னிப்பாகக் கவனிப்பீர்கள். காலத்திற்கேற்ப யோசிக்கும் நல்ல கலாரசிகர்களான உங்களை 15.12.2009 முதல் 21.11.2010 வரை உள்ள காலகட்டங்களில் குருபகவான் என்ன செய்யப் போகிறார்?




இதுவரை உங்கள் ராசிக்கு 7ஆம் வீட்டில் நின்ற குருபகவான் நீசகதியில் நின்றதால் சொல்லிக்கொள்ளும் அளவிற்கு கடந்த ஓராண்டில் எதுவும் உங்களுக்குத் தர முடியவில்லை. குரு பலவீனமாக இருந்ததால் நல்லதையும், கெட்டதையும் சேர்த்துக்கொடுத்தாரே! இப்போது குருபகவான் உங்கள் ராசிக்கு எட்டாவது வீட்டில் சென்று மறைகிறார். இன்யெட்டினில் வாலி பட்டமிழந்து போம்படியானதும் என்று சில பழைய நூல்கள் கூறுகின்றன. 8ஆம் வீட்டில் குரு வந்தால் ஏகப்பட்ட செலவுகளும், நஷ்டங்களும் வருமோ, எந்த வேலையையும் முழுமையாக முடிக்க முடியாமல் போகுமோ என்று வருந்தாதீர்கள். சர வீடான கடக ராசியில் பிறந்த உங்களுக்கு குருபகவான் ஸ்திர வீட்டில் மறைவதால் கெடு பலன்கள் குறையும். அதோடு மட்டுமல்லாமல் 04.05.2010 முதல் 14.07.2010 வரை அதிசாரமாகவும், 15.07.2010 முதல் 06.11.2010 வரை வக்ரமாகவும் உங்கள் யோகவீடான 9ஆம் வீட்டிற்கு குரு செல்வதால் எதிர்பாராத வகையில் பணம் வரும். குடும்பத்தில் கணவன்-மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும். நின்றுபோன வேலைகளையெல்லாம் இனி விரைந்து முடிப்பீர்கள். பிரச்சினைக்குரிய சொத்தை விற்று புதுச் சொத்து வாங்குவீர்கள்.

குருபகவான் 2ஆம் வீட்டைப் பார்ப்பதால் எதிர்பார்த்த பணம் வரும். கல்யாணம், காதுகுத்து என்று வீடு களைகட்டும். பணம் வந்தாலும் தங்கவில்லையே என புலம்பினீர்களே! இனி சேமிக்கும் அளவிற்கு பணம் வரும். குரு 4ஆம் வீட்டைப் பார்ப்பதால் பல சிந்தனைகளுடன் தூக்கமில்லாமல் தவித்தீர்களே! இனி ஆழ்ந்த உறக்கம் வரும். தாயின் உடல்நிலை சீராகும். புது வாகனம் வாங்குவீர்கள்.

குருபகவானின் நட்சத்திர சஞ்சார பலன்கள்

15.12.2009 முதல் 18.01.2010 முடிய உங்களின் பூர்வ புண்யாதிபதி மற்றும் ஜீவனாதிபதியுமான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் திடீர் திருப்பம் ஏற்படும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். நிலம், வீடு வாங்குவீர்கள். சகோதர வகையில் இருந்த பிணக்குகள் நீங்கும். இருந்தாலும் குரு பகவான் 8ஆம் வீட்டில் நிற்பதால் உறவினர்களுடன் மனக்கசப்பு வரும்.

19.01.2010 முதல் 17.03.2010 முடிய ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் வெளிநாட்டுப் பயணங்கள் அமையும். செலவுகள் அதிகரிக்கும். வெகுநாள்களாக வேலைதேடி அலைந்தவர்களுக்கு நல்ல சம்பளத்துடன் புதுவேலை அமையும். தந்தைக்கு இருந்த நோய் விலகும்.

18.03.2010 முதல் 03.05.2010 வரை மற்றும் 07.11.2010 முதல் 21.11.2010 முடிய உங்களின் பாக்கியாதிபதியான குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் செல்வதால் இக்காலகட்டத்தில் அரசு காரியங்கள் விரைந்து முடியும். பழைய கடனில் ஒரு பகுதியை அடைக்க வழி கிடைக்கும். நல்ல பதவிகள் தேடி வரும். உறவினர்கள் மதிப்பார்கள்.

04.05.2010 முதல் 21.05.2010 வரை மற்றும் 28.09.2010 முதல் 06.11.2010 முடிய குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் செல்வதுடன் உங்கள் ராசிக்கு 9ஆம் வீட்டில் ஆட்சிபெற்று அமர்வதால் மகளுக்குத் திருமணம் முடியும். எதிர்பாராத பணவரவு உண்டு. இழுபறியாக இருந்த வழக்கில் நல்ல தீர்ப்புக் கிடைக்கும்.

22.05.2010 முதல் 27.09.2010 முடிய உங்களின் சப்தம அஷ்டமாதிபதியான சனிபகவானின் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் மனைவி வழியில் உதவிகள் கிடைக்கும். வேற்றுமொழியினரால் ஆதாயம் உண்டாகும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். இக்காலகட்டத்தில் குருபகவான் 9ஆம் வீட்டிற்குச் செல் வதால் தடைப்பட்ட திருமணம் முடியும்.

வியாபாரத்தில் புது யுக்திகளைக் கையாளுவீர்கள். பழைய பாக்கிகளை வசூலிப்பீர்கள். புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். மே, ஜூன் மாதங்களில் எதிர்பார்த்த புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். கூட்டுத்தொழிலில் பங்குதாரர்களுடன் இருந்த தற்பெருமை பிரச்சினைகள் விலகும்.

உத்தியோகத்தில் காலநேரம் பார்க்காமல் உழைத்தும் அதற்கான பலனையும், பாராட்டையும் வேறொருவர் தட்டிச் சென்றாரே! இனி பதவி உயரும். சம்பளமும் கூடி வரும். ஒப்பந்த அடிப்படையிலான வேலையில் சேர்வதற்கு முன் அதற்குரிய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளைப் படித்துப்பார்த்து பின்னர் கையெழுத்திடுவது நல்லது.

கன்னிப் பெண்களே! காதல் விவகாரத்தை தள்ளிவைத்து விட்டு மேற்கல்வியில் கவனம் செலுத்துங்கள். ஹோர்மோன் பிரச்சினை, பசியின்மை நீங்கும். எதிர்பார்த்த நிறுவனத்தில் வேலை கிடைக்கும். திருமணம் நல்ல விதத்தில் முடியும்.

மாணவர்களே! அன்றைய பாடங்களை அன்றே படித்து விடுவது நல்லது. வகுப்பறையில் முன் வரிசையில் அமருங்கள். அதிக மதிப்பெண் எடுப்பீர்கள்.

கலைஞர்களே! ஒருபுறம் விமர்சனம் இருந்தாலும் மற்றொரு புறம் உங்களின் திறமையால் சாதித்துக் காட்டுவீர்கள். விவசாயிகளே! பூச்சித்தொல்லை, எலித்தொல்லை இனி இருக்காது. நவீன யுக்தியால் வருமானம் பெருகும். அரசியல்வாதிகளே! அறிக்கைகளாக விட்டுக்கொண்டிருக்காமல் மக்களுக்கு பயன்படும்படியான புதுத்திட்டங்களை செயற்படுத்துங்கள். தலைமையின் பார்வை உங்கள் மேல் விழும்.

இந்த குருப்பெயர்ச்சி மாறுபட்ட அணுகு முறையால் வெற்றியையும், வாழ்வில் ஒருபடி முன்னேற்றத்தையும், அந்தஸ்தையும் தருவதாக அமையும்.

***

## சிம்மம்

எதுகை, மோனை மற்றும் எடுத்துக் காட்டுகளுடன் உங்களுக்கு பேசத்தெரியாது. அதனால் மனதில் பட்டதை அப்படியே கொட்டுவீர்கள். பணத்தை விட சரித்திரத்தில் இடம் பிடிக்கும்படி ஏதாவது செய்ய வேண்டுமென துடிப்பீர்கள். அப்படிப்பட்டவர்களான உங்களுக்கு 15.12.2009 முதல் 21.11.2010 வரை உள்ள காலகட்டங்களில் குருபகவான் என்ன செய்யப் போகிறார்?

இதுவரை உங்களுக்கு எதிரி வீடான ஆறாம் வீட்டில் அமர்ந்திருந்து அடுக்கடுக்காக பல இன்னல்களைத் தந்த குருபகவான், இப்போது ஏழாம் வீட்டில் அடி எடுத்து வைப்பதால் இனி எதிலும் வெற்றி பெறுவீர்கள். இதுவரை குடும்பத்தில் உள்ளவர்கள்கூட உங்களை ஒரு பொருட்டாக நினைக்காமல் அலைக்கழித்தார்களே! இப்போது உங்களின் யோகாதிபதியான குருபகவான் உங்கள் ராசியை நேருக்குநேர் பார்ப்பதால் இனி குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். கணவன்-மனைவிக்குள் இருந்த சலசலப்புகள் நீங்கும். அடுத்தடுத்து வீட்டில் திருமணம், சீமந்தம் போன்ற சுபநிகழ்ச்சிகள் நடக்கும். மழலை பாக்கியத்திற்காக நீங்கள் பார்க்காத மருத்துவரே இல்லை, இனி அழகான வாரிசு கிடைக்கும். அடகிலிருந்த வீட்டுப் பத்திரத்தை மீட்பீர்கள். புதுவீடு கட்டுவீர்கள். சொத்துப்பிரச்சினை நல்ல விதத்தில் முடியும்.




குருபகவான் லாப வீட்டைப் பார்ப்பதால் பங்குடைமை வகைகளால் பணம் வரும். மூத்த சகோதரருக்கு திருமணம் சிறப்பாக முடியும். இளைய சகோதரருடன் இருந்த மனவருத்தம் நீங்கும். வெளிநாட்டில் இருக்கும் நண்பர்களால் ஆதாயம் உண்டு. உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டை குரு பார்ப்பதால் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். கோயில் திருவிழாவை முன்னின்று நடத்துவீர்கள்.

குருபகவானின் நட்சத்திர சஞ்சார பலன்கள்

15.12.2009 முதல் 18.01.2010 முடிய உங்களின் சுக பாக்கியாதிபதியான செவ்வாயின் அவிட்டம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் தன்னம்பிக்கை பிறக்கும். நாடாளுபவர்களின் அறிமுகம் கிடைக்கும். இழுபறியாக இருந்த சொத்துப் பிரச்சினை சுமுகமாக முடியும். படுத்த படுக்கையாக இருந்த பெற்றோர் நோயிலிருந்து விடுபடுவார்கள். அரைகுறையாக நின்ற வீட்டை கட்டி முடிப்பீர்கள்.

19.01.2010 முதல் 17.03.2010 முடிய ராகுவின் சதயம் நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் திருமணம் உள்ளிட்ட சுபசெலவுகள் அதிகரிக்கும். பழுதான வாகனத்தை மாற்றுவீர்கள். சமூக சேவைகளில் ஈடுபடுவீர்கள். பெரிய பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படுவீர்கள். குலதெய்வக்கோயிலுக்குச் சென்று பிரார்த்தனைகளை முடிப்பீர்கள்.

18.03.2010 முதல் 03.05.2010 வரை மற்றும் 07.11.2010 முதல் 21.11.2010 முடிய உங்களின் பூர்வ புண்யாதிபதியான குருபகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் செல்வதால் இக்காலகட்டத்தில் குழந்தை பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளை பலவகையிலும் உற்சாகப்படுத்துவீர்கள். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மகளுக்கு நல்ல இடத்தில் திருமணம் முடியும். வேலை கிடைக்கும். அரசியல் தலைவர்கள் அறிமுகமாவார்கள். சிறிய சொத்தை விற்று பெரிய சொத்து வாங்குவீர்கள்.

04.05.2010 முதல் 21.05.2010 வரை மற்றும் 28.09.2010 முதல் 06.11.2010 முடிய குரு பகவான் தனது பூரட்டாதி நட்சத்திரத்தில் சென்றாலும் உங்கள் ராசிக்கு 8ஆம் வீட்டில் சென்று மறைவதால் கொஞ்சம் அலைச்சலும், வீண் செலவுகளும் இருக்கும். வெளிநாட்டுப் பயணம் அமையும். கல்வி, உத்தியோகம் ஆகியவற்றின் பொருட்டு பிள்ளைகளைப் பிரிவீர்கள்.

22.05.2010 முதல் 27.09.2010 முடிய உங்களின் ரோக சப்தமாதிபதியான சனிபகவானின் உத்தரட்டாதி நட்சத்திரத்தில் குருபகவான் செல்வதால் கணவன்-மனைவிக்குள் கருத்து மோதல்கள் வரும். மனைவிக்கு உடல் நிலை பாதிக்கும். யாராவது யாருக்காவது பணம் வாங்கித்தருவதில் குறுக்கே நிற்க வேண்டாம். வாகனத்தை இயக்கும் போது கவனம் தேவை. இரவு நேரப் பயணங்களை தவிர்ப்பது நல்லது. அசைவ உணவுகளைத் தவிர்த்துவிடுங்கள்.

வியாப்பாரத்தில் ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் புதிய ஒப்பந்தங்கள் தேடி வரும். பழைய பாக்கிகளும் வசூலாகும். பிரபலங்கள் வாடிக்கையாளர்களாக அறிமுகமாவார்கள். உணவு, வாகனம், ஏற்றுமதி, இறக்குமதி வகைகளால் ஆதாயம் அதிகரிக்கும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும்.

உத்தியோகத்தில் பிரச்சினை தந்த மேலதிகாரி வேறு இடத்திற்கு மாற்றப்படுவார். புதிய அதிகாரி உங்களை ஆதரிப்பார். பெப்ரவரி, ஏப்ரல், மே மாதங்களில் எதிர்பார்த்த பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். அயல்நாட்டுத்தொடர்புடைய நிறுவனங்களில் இருந்து நல்ல வாய்ப்புகளும் தேடிவரும்.

கன்னிப்பெண்களே! உங்கள் மனம் போல நல்ல கணவர் அமைவார். சிலருக்கு வெளிநாட்டில் உயர்கல்வி தொடர வாய்ப்பு வரும். நல்ல வேலையும் கிடைக்கும்.

மாணவர்களே! அதிக மதிப்பெண் வாங்கும் மாணவர்களின் நட்பு கிடைக்கும், நினைவாற்றல் பெருகும். சந்தேகத்தை ஆசிரியரிடம் தைரியமாகக் கேளுங்கள். தேர்வில் அதிக மதிப்பெண் கிட்டும்.

கலைஞர்களே! உங்கள் படைப்புக்கு அரசு பரிசு கிடைக்கும். விவசாயிகளே! கரும்பு ஆதாயம் தரும். மூலிகைப்பயிர்களால் இலாபமடைவீர்கள்.

அரசியல்வாதிகளே! தலைமைக்கு வேண்டப்பட்டவர்களால் அலைக்கழிக்கப்பட்டீர்களே! இனி தலைமையால் பாராட்டப்படுவீர்கள். பெரிய பதவிகள் கிடைக்கும்.

இந்தக் குருப் பெயர்ச்சி பழைய பிரச்சினைகள், சிக்கல்கள், பணத்தட்டுப்பாடு இவற்றிலிருந்து உங்களை விடுவிப்பதுடன் புதிய பாதையில் சென்று சாதிக்க வைக்கும்.


***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலும்.....

# முஸ்லிம் காங்கிரஸின் நோக்கும் இலக்கும்

பஷீர் சேகுதாவூத்
(எதிர்க்கட்சித் தலைவர் - கிழக்கு மாகாணசபை, தவிசாளர் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்)



நமது நாட்டில் 2005 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலுக்குப் பின் வந்த 4 வருட கால நிகழ்வுகள் மறக்க முடியாதவை.

இனவாதமும், மதவாதமும் இக்காலகட்டத்தில் என்றுமில்லாதவாறு நாட்டில் பரவலாக அதிகரித்தன. இவற்றால் சிறுப்பான்மையினர் சகல வழிகளிலும் சிறுபான்மைப்படுத்தப்பட்டனர். நாட்டின் பொருளாதாரம் நலிவடைந்து வீழ்ச்சியை நோக்கி வேகமாக இறங்கியதால், பெரும்பாலான தனி மனிதர்கள் வறுமையில் வாடி வதங்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

யுத்தத்தின் காரணமாக மரணங்களும், இடப்பெயர்வுகளும் அதிகரித்து உறவுகளின் பிரிவும், ஓலங்களும், அவலங்களும், அழுகைகளும் அக்காலகட்டத்தில் மனித வாழ்வின் நிரந்தர அம்சங்களாகவே விளங்கின.

இவற்றின் காரணமாக 'மரணம் மட்டும் தான் தனி மனித வாழ்வின் ஒரே உறுதியான எதிர்காலம்' எனக் குறிப்பிடப்படும் அளவுக்கு பொது இலட்சியமும், பொது வாழ்வும், சமூக மேம்பாடுகளும் சிதைக்கப்பட்டுக்கொண்டே வந்தன.

* மத்திய ஆட்சியில் ஜனநாயகம் துளியளவு கூட இல்லாத நிலை.

* இலங்கை முழுவதையும் தமது சொத்தாகக் கருதிச் செயற்பட்ட ஒரு குடும்பத்தின் செயற்பாடுகளை மக்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டிய நிர்ப்பந்தம்.

* 'எதிர்க்கட்சிகள் எல்லாம் தேசத்துரோக சக்திகள்' என்ற கட்டுக்கதை அரசால் பிரசாரம் செய்யப்படுகின்ற இக்கட்டான சூழல்.

* ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகளுக்கும் குரல் கொடுக்கும் எவரும் காணாமல் போகும் அவலம்.

* உண்மையை உரைக்கும் ஊடகங்களும், ஊடகவியலாளர்களும் உடைக்கப்படுவதும், தீயிடப்படுவதும், கடத்தப்படுவதும், நடுவீதியில் சுடப்படுவதுமான காட்டுமிராண்டித்தனம்.

* ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், மக்கள் விடுதலை

> **மொத்தத்தில் 1978 - 2009 வரையான 31 வருடகால நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை, படிப்படியாக மாற்றமடைந்து கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் ஒரு மாட்சிமை தாங்கிய மன்னராட்சியாக முழுமை அடைந்துள்ளது.**

முன்னணி ஆகிய கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆசைகாட்டி பிடுங்கி எடுக்கப்பட்டு, செயற்கையான நாடாளுமன்றப் பெரும்பான்மை உருவாக்கப்பட்டதுடன், நிறைவேற்று அதிகாரத்துக்கு கைகாட்டிச் சேவகம் செய்யும் சபையாக நமது நாடாளுமன்றம் தரம் தாழ்ந்து போனமை.

* முஸ்லிம்களின் தேசிய உணர்வுகளுக்கும், தேசிய அரசியல் இயக்கத்துக்கும் எதிராக, சுயநல முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கு சால்வை அணிவித்து அழகு பார்த்தமை.

* சிறுபான்மைக் கட்சிகளை அழித்து ஒழித்துவிட்டு சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை, தமது பெரும்பான்மைக் கட்சியின் பிரதிநிதித்துவமாக முலாம் பூசும் முயற்சி.

* அரசுத் தலைமையின் 'இனி நாட்டில் சிறுபான்மையினரே கிடையாது' என்ற அகங்கார அறிவிப்பு.

* சிறுபான்மையினர் அடிமைகள்; இலங்கையில் உரிமை இல்லாதவர்கள்; வெளிநாட்டிலிருந்து வந்தான் வரத்தார்கள்; சொந்த நாட்டுக்குத் திரும்பிப் போக வேண்டியவர்கள்; மொத்தத்தில் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் ஆகிய சிறுபான்மை மக்களுக்கு இந்த நாடு சொந்தமில்லை என்ற கருத்துருவாக்கங்கள் பரப்பப்பட்டமை.

* மாதாமாதம் குட்டித் தேர்தல்களை நடத்திவிட்டு எதிர்க்கட்சிகளை ஏப்பமிடும் அரசின் குள்ளநரித் தந்திரப் பிரயோகம்.

* அரச கட்சியின் அடாவடித்தனம் காரணமாக பிரதான எதிர்கட்சியான ஐ.தே.கவின் அடித்தளம் கூட அசைக்கப்பட்டு ஒரு கட்சி மட்டும்தான் மிஞ்சுமோ என்று எண்ணும் வண்ணமான நிலைமை.

* யுத்தத்தின் வெற்றி; வெற்றியின் முழக்கம்; கொண்டாட்டங்கள்; குதூகலங்கள்; இனித் தன்னை எவராலும் அசைக்க முடியாது என்ற இறுமாப்புடன், அடுத்த பல தசாப்தங்களுக்கு தனது பரம்பரையே ஆளப்போகிறது என்ற நினைப்புடன் காலத்துக்கு முன்பே தேசியத் தேர்தலுக்கான வியூகங்கள் வகுக்கப்பட்டமை.

இது போன்ற இன்னும் பல ஜனநாயகத்துக்கு விரோதமான சர்வாதிகார செயற்பாடுகள் முடக்கி விடப்பட்டிருந்தன.

மொத்தத்தில் 1978 - 2009 வரையான 31 வருடகால நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை, படிப்படியாக மாற்றமடைந்து கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் ஒரு மாட்சிமை தாங்கிய மன்னராட்சியாக முழுமை அடைந்துள்ளது.

சிறுபான்மையினரைப் பொறுத்தவரையில் ஒரு காலத்தில் அனுகூலமான அனுபவத்தைத் தந்திருந்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை, அதன் குரூரமான வளர்ச்சி முறையில் பிற்பட்ட காலங்களில் ஆபத்தான அனுபவங்களை அள்ளி வீசியது. முடியாட்சி போன்ற தோற்றப்பாடு ஏற்பட்ட பின்பு இந்த நிறைவேற்று அதிகாரம், சிறுபான்மை மக்கள் இந் நாட்டின் குடிகளேயல்ல என்ற முடிவுக்கு வந்தது.

தேசிய கட்சிகளில் பின்னிப் பிணைந்திருந்த காலத்துக்குப் பிறகு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இலங்கை முஸ்லிம்களும் தமது தனித்துவ அடையாள அரசியலில், கடந்த 21 வருடங்களாக நிறைவேற்று அதிகாரத்தின் நன்மைகளையும், தீமைகளையும் அனுபவமாகப் பெற்றுள்ளனர். அதன் தீமைகளைப் பொறுத்தவரையில் கடந்த 4 ஆண்டு கால அனுபவம் கடும் கசப்பானதாகும்.

எனவேதான் நம்மை நாடற்றவர்களாகவும், தனிக்கட்சி அற்றவர்களாகவும், தனித்துவமற்றவர்களாகவும், உரிமைகள் அற்றவர்களாகவும் ஆக்கக்கூடிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இலங்கையில் இருந்து ஒழித்துக் கட்டவேண்டும் என்ற முடிவுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வந்துள்ளது. வேறு வார்த்தையில கூறுவதானால் 'ஆளை அகற்றுவதல்ல, அதிகாரத்தை அகற்றுவதே' எமது முடிவாகும்.

நாமும் தனித்துவமுள்ள இலங்கையர் என்று முழு உரிமை கொண்டாடவும், ஏனைய சமூகங்களுடன் சுதந்திரம், சமத்துவத்துடன் சகவாழ்வு வாழவும், சமூகப் பொருளாதாரத்தையும், நாட்டுப் பொருளாதாரத்தையும் சரிவிலிருந்து நிமிர்த்தவும், சுயமாக எமது மார்க்கத்தை முன்னெடுக்கவும், எமது வாழ்வாதாரத் தொழில்களை ஏதேச்சாதிகார இடையூறுகள் இன்றிச் செய்யவும், சிறுபான்மை அரசியல் கட்சிகளைக் காப்பாற்றி தனித்துவத்தை நிலை பெறச் செய்யவும். அகதி வாழ்க்கையில் இருந்து மீளவும், சிதைந்து கிடக்கும் கட்டுமானங்களை பழையபடி நிமிர்த்தவும். விரும்புவதனால் மேற்கூறிய எமது அபிலாஷைகளுக்கு குறுக்காக சீனப் பெருஞ்சுவர் போல எழுந்து நிற்கும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்கு விரும்பும் அனைவருடனும் கைகோக்க வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டது.

**'இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ற விடயம் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட்ட பின்பு, நாடளுமன்ற ஜனநாயகத்துக்கு ஊடாக அணுகப்படுவது, ஆயுதப் பிரயோகம் அற்ற இச் சூழலில் ஆரோக்கியமானதாகத் தெரிகிறது.'**

யுத்த வெற்றியே இனிவரும் தேர்தல்களின் வெற்றியைத் தீர்மானிக்குமோ என்று மலைப்பு ஏற்பட்டிருந்த சூழலில், இந்த மலைப்பில் இருந்தும், கொடுமுடி ஆட்சியில் இருந்தும் தப்புவதற்கான வழி என்ன? என்ற சிந்தனை நமக்கு ஏற்பட்டிருந்த வேளையில்தான் யுத்த வெற்றியின் நாயகர்களாக இருவர் ஒரே நேரத்தில் தோன்றினர்.

ஒருவர் - அரசியல் தலைவர். மற்றையவர் - இராணுவத் தளபதி.

அரசியல் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

இராணுவத் தளபதி சரத் பொன்சேகா.

இருவருமே ஒரு முகப்பட்டிருந்தால் அழிவிலும், அடக்குமுறையிலும் மாட்டிக் கொண்ட மக்கள் விலங்கு மாட்டப்பட்ட படியே கிடந்திருப்பர். ஜனநாயக ஆட்சியை விரும்பும் மக்கள் வேறு வழியின்றி இரகசியமாக உருவாக்கப்பட்டு வந்த மன்னராட்சியின் கீழ் வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பர்.

தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரத்தை இல்லாதொழிக்க விரும்பவில்லை.


தளபதி சரத் பொன்சேகா நிறைவேற்று அதிகாரத்தை வைத்திருக்க விரும்பவில்லை.

இவ்விருவரில் யாரை நாம் தெரிவு செய்வது?

**ஆளை அகற்றுவதல்ல, அதிகாரத்தை அகற்றுவதே எமது நோக்கமாகையால் எமக்கு ஆளைப்பார்க்கும் அவசியம் அற்றுப் போய் அதிகாரத்தின் தன்மையை நோக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.**

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவையும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையும் மேலோட்டமாக ஒப்பிடுவதன் மூலமே எமக்கான இறுதித் தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

சரத் பொன்சேகா எந்த அரசியல் கட்சிக்கும் சொந்தமில்லாதவராகவும், எந்தக் கட்சியையும் சொந்தமாகக் கொண்டிராதவராகவும் விளங்கும்போது மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு மட்டும் சொந்தக்காரராகவும், எல்லா அரசியல் கட்சிகளையும் அடக்கி வைத்திருக்க விரும்பும் ஒருவராகவும் விளங்குகிறார்.



நாடாளுமன்றத்தைப் பெரும்பான்மையோடு தன்பக்கம் இழுக்க வாய்ப்பில்லாதவராக சரத் பொன்சேகா இருக்கும்போது அதே நாடாளுமன்றத்தைப் பெரும்பான்மையோடு தன்பக்கம் இழுக்க அவசியமுள்ளவராக மஹிந்த ராஜபக்ஷ காணப்படுகிறார்.

சரத்துக்கு எந்தக் கட்சியில் இருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பறிக்கும் அனுபவமும் அவசியமும் இல்லை. ஆனால், எல்லாக் கட்சிகளில் இருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் களைப் பறிக்கும் அனுபவமும் அரசியலும் மஹிந்தவுக்கு இருக்கிறது.

யுத்தம் முடிந்துவிட்ட சூழலில் இராணுவச் சீருடையையும் ஆயுதத்தையும் களைந்து வைத்திருப்பவர் சரத். ஆனால், அதே யுத்தம் முடிந்துவிட்ட சூழலில் படைபட்டாளங்களோடு முப்படைகளின் தளகர்த்தாவாக மஹிந்தவே இன்றும் காணப்படுகிறார்.

சரத் சிறுபான்மைக் கட்சிகளை இல்லா தொழிக்கும் அவசியமற்றவர். ஆனால் சிறிய கட்சிகளை நசுக்க விரும்புவராகவும், ஒரு கட்சி ஆட்சி முறையை நேசிப்ப வராகவும் மஹிந்த விளங்குகின்றார்.

இனப் பிரச்சினைத் தீர்வு நாடாளுமன்றத்திடம் விடப்படும் என்று சரத்பொன்சேகா கூறும்போது, யுத்தத்தில் வெற்றி பெற்றுவிட்ட காரணத்தினால் இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேவையில்லை என்பவர் மஹிந்த ராஜபக்ஷ. நாமும் சேர்ந்து தெரிவுசெய்யும் வேட்பாளராக சரத் பொன்சேகா விளங்குகின்றார். ஆனால் மஹிந்தவோ தன்னைத்தானே தெரிவு செய்த வேட்பாளராக இருக்கிறார்.

நிலைமை இவ்வாறு இருக்கையில் இலங்கை அரசியலில் முஸ்லிம் தேசியம் அசைந்திருக்கும் தனது தரப்பை சரி செய்ய வேண்டிய அதே நேரம் தமிழ்த் தேசியமும் சிதைந்திருக்கும் தனது 'முகப்பை' சரிசெய்ய வேண்டிய தேவை எழுந்துள்ளது.

புலிகளுக்குப் பிந்திய தமிழ்த் தேசியப் பரப்பு தனது நவீன முகத்தைக் காட்ட வேண்டிய தருணமாகவும், முஸ்லிம் தேசியம் தன்மீது கடந்த காலங்களில் கட்டவிழ்ந்து விடப்பட்ட அரசியற் பயங்கரவாதத்தை முறியடிக்கும் தருணமாகவும் இந்த ஜனாதிபதித் தேர்தலைப் பயன்படுத்த வேண்டும்.

எனவே சர்வாதிகார நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழித்து, நாடாளுமன்ற ஆட்சி முறையை ஆக்க எடுக்கும் முடிவை எடுப்பதே சிறந்த வழியாகும். யுத்த வெற்றியைக் கொண்டு தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்க முயலும் அரசின் முயற்சிகள் பல்வேறு பக்கங்களில் [illegible]ந்தும் முடுக்கிவிடப்படுவதால் இந்த வழியைத் திறப்பதற்கு சரத் பொன்சேகாவே வைபவரீதியாக நாடாவை வெட்டி வைக்க வேண்டும்.

அதற்குத் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒற்றுமைப்பட்டு, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பொதுச் சின்னமான 'அன்னப்பறவை' க்கு வாக்களிக்க வேண்டிய தற்காலிகக் கடப்பாடு கொண்டவர்களாக விளங்குகிறோம். *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08 -12 - 2009 அன்று கம்போடிய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கம்போடிய பிரதமர் முன்னிலையில் பட்டம் பெற்ற **North Lanka IIT** பட்டதாரி மாணவர்களை

# பாராட்டி வாழ்த்துகின்றோம்!!!





Mr. P.Rajkumar
B.Sc. in Computer Science




Miss.T. Parmela
B.Sc. in Computer Science



Mr.G.Puveenthan
B.Sc. in Computer Science



Mr.S.Rakulan
B.Sc. in Computer Science



Mr.U.Thineshkumar
B.Sc. in Computer Science



Mrs.P.Arunthathi
B.Sc. in Computer Science



Miss.V.Sivatharany
B.Sc. in Computer Science



Miss.S.Niruja
B.Sc. in Computer Science



Miss.S.Sajitha
B.Sc. in Computer Science



Miss.V.Thadchayini
B.Sc. in Computer Science



Miss.S.Hamsaji
B.Sc. in Computer Science



Miss.V.Vijitha
B.Sc. in Computer Science



Mr.K.Kesavan
B.Sc. in Computer Science

பாராட்டி
வாழ்த்துபவர்கள்
**North Lanka IIT**
சமூகம்

# விண்ணப்பித்துவிட்டீர்களா ???

# மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2010

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்திற்கு விண்ணப்பிப்பதன் மூலம் கற்கைநெறிக் கட்டணத்தில் விசேட சலுகைகளைப் பெற்றுக்கொள்வதுடன் வெளிநாடுகளில் நடைபெறும் பட்டமளிப்பு விழாவிலும் பங்குபெற முடியும்!!!

மேலதிக விபரங்களுக்கு...... **North Lanka IIT**
#113, Laxan Plaza, Navalar Roard, Jaffna.
0213214305, 0217390110, 0214920779

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

16.05.1986

* கொழும்பிலுள்ள முக்கிய அரச திணைக்களங்களில் கடமையாற்றும் தமிழ் ஊழியர்கள் கட்டாய லீவில் அனுப்பப்படுகின்றனர்.

* இலங்கை இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலமாகவன்றி வேறு எந்த விதமான தீர்வுக்கும் அனுமதிக்கப் போவதில்லை என இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவிப்பு.

* தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திற்கு ஏற்பட்ட சேதம் குறித்து ஆலயதர்மகர்த்தா சபையினருடன் பேசி விவரம் அறிய ஜனாதிபதி விருப்பம் தெரிவிப்பு.

17.05.1986

* சிதம்பரம் குழுவிற்கு அளித்த வாக்குறுதியிலிருந்து இலங்கை அரசு பின்வாங்கிவிட்டதால் இந்தியாவின் மத்தியஸ்த முயற்சி சிக்கலாகிவிட்டதாக இந்திய வெளியுறவு அமைச்சு வட்டாரம் தெரிவிப்பு.

* பேச்சுகள் மூலமான தீர்வு வழியை இலங்கை அரசு மூடினால் இந்தியா பதில் நடவடிகை எடுக்க வேண்டும் என 'புரொன்ட் லைன்' பத்திரிகை விமர்சிப்பு.

18.05.1986

* மட்டக்களப்பு அம்பிலாற்றுறைக் கிராமத்தில் படையினரின் தேடுதல் நடவடிக்கையின் போது ஆறு தமிழ்ப் பொதுமக்கள் சுட்டுக் கொலை.

* முக்கிய அரச திணைக்களங்களில் தமிழர்களுக்கு இனிமேல் வேலை வாய்ப்பு வழங்குவதில்லை என அரச வட்டாரங்கள் முடிவெடுத்துள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிப்பு.

19.05.1986

* கலவான நாடாளுமன்ற உறுப்பினர் சரத் முத்தெட்டுவேகம வாகன விபத்தில் சிக்கி உயிரிழப்பு.

* பலாலி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிவந்து வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் முகாமிட்டுள்ள இராணுவத்தினர் மீது போராளிகள் தாக்குதல்.

20.05.1986

* யாழ்ப்பாண நகர மத்தியில் பயங்கர விமானத்தாக்குதல்; கடைகள் எரிந்தன, பலருக்குக் காயம்.

* இராணுவத் தீர்வை நோக்கி இலங்கை செல்வது போல் தெரிகின்றது என இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தெரிவிப்பு.

* வயாவிளான் மத்திய மகாவித்தியாலய விடுதியில் தங்கியிருந்த மாணவ, மாணவியர் உட்பட 12 பேர் பற்றிய தகவல் எதுவும் இல்லை.

21.05.1986

* போராளிகளின் கடும் எதிர்ப்பால் குடாநாட்டில் முன்னேற முயன்ற இராணுவம் பின் வாங்கியது.

* விபத்தில் சிக்கி காலமாவதற்கு முன் கலவானை எம்.பி. சரத் முத்கட்டுவேகம கடைசியாகக் கலந்துகொண்ட கூட்டத்தில் இந்தியாவின் உதவியின்றி இனப்பிரச் சினைக்கு ஒரு போதும் தீர்வுகாண இயலாது எனத் தெரிவித்திருந்தார்.

* யாழ்ப்பாணத்தில் இலங்கை விமானப் படை நடத்திய தாக்குதல்களுக்கு இந்தியா கண்டனம்.

22.05.1986

* மட்டக்களப்பு பெரிய புல்லு மலையில் இராணுவ முகாம் மீது போராளிகள் தாக்குதல் நடத்தி அதனை முற்றாகத் தகர்த்தனர்.

* சீனன்வாடி சிமெந்து ஆலை குண்டு வைத்துத் தகர்ப்பு; இயந்திரங்கள் சுக்குநூறு.

* சிதம்பரம் குழு இலங்கையில் தங்கியிருந்த வேளையில் கூட இலங்கை அரசு யாழ். குடாநாடு மீது தாக்குதல் நடத்தத் திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தது என 'இந்து' நாளிதழ் செய்தி வெளியீடு.

23.05.1986

* செம்பியன்பற்று, கட்டைக்காட்டில் விமானத்தாக்குதலில் 8 பொதுமக்கள் மரணம்.

* மண்டைதீவில் இராணுவத்தினர் மினி முகாம் ஒன்றை நிறுவினர்.

* இப்போதய நிலையில் இலங்கை அரசுடன் எவ்வித பேச்சுக்களையும் மேற்கொள்ளும் சாத்தியம் கிடையாதென த.வி.கூட்டணி செயலாளர் அமிர்தலிங்கம் தெரிவிப்பு.

24.05.1986

* தமிழ்ப் பகுதிகள் மீதான இராணுவ நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்த வேண்டுமென இந்தியா எச்சரிக்கைத் தொனியில் வற்புறுத்து.

* கொள்ளையிடப்பட்ட தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்திற்குச் சொந்தமான நகைகள் அனைத்தும் திரும்பக் கிடைத்தன. உரப்பைக்குள் போடப்பட்டு ஆலயவாசலில் வைக்கப்பட்டிருந்தன.

* தீவிரவாத நடவடிக்கைகள் உள்ளவரை இராணுவ நடவடிக்கைகளை அரசு தொடரும் என இலங்கை அரசு இந்தியாவுக்குத் தெரிவிப்பு.

25.05.1986

* இனியும் பொறுக்க முடியாது, இலங்கைத் தழிழரைக் காப்பாற்ற இந்தியா இராணுவ ரீதியில் தலையிட வேண்டுமென தி.மு.க. தலைவர் கருணாநிதி அறைகூவல்.

* தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் அன்ரன் பாலசிங்கம் இந்திய அரசின் அழைப்பின் பேரில் புதுடில்லிக்கு விரைவு.

26.05.1986

* இனப்பிரச்சினை விடயத்தை இலங்கை அரசு அவசியம் ஏற்பட்டால் ஐ.நா.சபைக்கு எடுத்துச் செல்லும் என பிரதி வெளிநாட்டு அமைச்சர் டிரோன் பெர்னான்டோ தெரிவிப்பு.

* யாழ். மாநகர சபையினால் யாழ்ப்பாணக் கோட்டைக்கு மேற்கொள்ளப்பட்டு வந்த குடிநீர் விநியோகம் இளைஞர் கோஷ்டி ஒன்றினால் தடுப்பு.

27.05.1986

* போராளிகளுடன் ஒப்பந்தம் செய்து கொள்வது குறித்து இப்போதைக்கு எதுவும் கூற முடியாதென கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் சிறில் ரணதுங்க தெரிவிப்பு.

* இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர்.ஐ பேச்சு நடத்த இந்தியாவுக்கு இந்திய அரசு அழைக்க வேண்டும் என இந்திய முன்னாள் நிதி அமைச்சர் சி.சுப்பிரமணியம் தெரிவிப்பு.

28.05.1986

* இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக இந்தியா புதிய முயற்சியில் ஈடுபடும்.

* இனப்பிரச்சினை குறித்து தமிழ்ப் போராளித் தலைவர்களுடன் பேச்சு நடத்த அரசு தயாரென தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தெரிவிப்பு.

* வடபகுதி இராணுவ இணைப்பதிகாரியுடன் வடபகுதி நிலைமை குறித்து ஜனாதிபதி ஜே.ஆர்.ஆராய்வு.

29.05.1986

* திருகோணமலை மாவட்ட சிங்களக் கிராமங்களில் ஊர்காவற்படையைப் பலப்படுத்த அரசு முடிவு.

* பூஸா தடுப்பு முகாம் போன்று களுத்துறையிலும் புதிதாகத் தடுப்பு முகாம் ஒன்றைத் திறக்க அரசு முடிவு.

* இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகள் குறித்து வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு விளக்கமளிப்பு.

30.05.1986

* லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகம் முன்னால் தமிழர்களும் சிங்களவர்களும் தனித்தனியாக ஆர்ப்பாட்டம்.

* இலங்கை பற்றி வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு பொய்த் தகவல்களை அனுப்பும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை உயிரோடு எரிக்க வேண்டுமென சபாநாயகர் ஈ.எல். சேனநாயக்க சீற்றம்.

* கிளிநொச்சியிலிருந்து ஆனையிறவு வரை உள்ள பிரதேசத்தில் இராணுவக் கிராமங்களை அமைக்க வேண்டுமென பௌத்தமத தேரர் ஒருவர் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்.

31.05.1986

* கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 9 பேர் பலி; 50 இற்கும் மேற்பட்டோர் காயம்.

* மூதூரில் கண்ணிவெடி. 20 சிப்பாய்கள் பலி, 15 பேர் படுகாயம்.

* பொதுநலவாய அமைப்பின் மத்தியஸ்தத்தைக் கோரும் இலங்கை அரசின் யோசனைக்கு அனைத்து தமிழர் தரப்புகளும் எதிர்ப்புத் தெரிவிப்பு.

# கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் கலைமலரை அமைச்சர் வெளியிட்டு வைத்தார்

யாழ்ப்பாணம், டிசெ. 18

கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமூகத்தினரால் வருடாவருடம் வெளியிடப்படும் கலைமலர் நூல் வெளியீட்டின் நாற்பதாவது மலர் கடந்த 15 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இவ்விழாவின் போது கலைமலர்க் குழுவின் தலைவர் முருகானந்தம் வரவேற்புரை நிகழ்த்தினார் அடுத்து வாழ்த்துரையை நிகழ்த்திய கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் மலர் சின்னையா, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலாசாலையின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டிற்கும் பக்கதுணையாக இருந்து ஆற்றிவரும் சேவைகளுக்காக கோப்பாய் ஆசிரிய கலாசாலை சமூகத்தின் சார்பில் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நாற்பதாவது பதிப்பான கலைமலர் - 2009 இன் முதற்பிரதியினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் எஸ். ஜெயேந்திராவுக்கு வழங்கி நூலை வெளியிட்டு வைத்தார். (50)

# யாழ். மாநகர சபையின் இலச்சினையில் மகுட வாசகம் விரைவில் பொறிக்கப்படும்

யாழ்ப்பாணம், டிசெ. 18

யாழ். மாநகராட்சி மன்றத்தின் இலச்சினையில் மகுட வாசகம் பொறிக்கப்படவுள்ளது.

இதற்கு பொதுமக்களிடமிருந்து தகுந்த வாசகம் வரவேற்கப்படுவதாக யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.

யாழ். மாநகரசபையின் குறிக்கோள் செயற்பாடுகள், தடம்பதித்துள்ள துறைகள், நேரொத்தபணிகள், சேவைகள் முதலியவற்றை பிரதிபலிப்பதாக மகுடவாசகம் அமைதல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

, பொது மக்களினால் சமர்ப்பிக்கப்படும் வாசகங்களில் இருந்து பொருத்தமான மகுடவாசகம் அறிஞர் குழுவொன்றினால் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறிக்கப் படவுள்ளது.

தெரிவு செய்யப்படும் மகுட வாசகத்தினை சமர்ப்பிப்பவருக்கு சன்மானமும் வழங்கப்படவுள்ளதாக மாநகர முதல்வர் அறிவித்துள்ளார்.

(50-224)

# பாஷையூரில் 3 குளங்கள் புனரமைப்பு

நல்லூர்,டிசெ.18

பாஷையூர் பொன்னம்பலம் குடியிருப்பு மற்றும் அந்தோனியார் ஆலயத்தை அண்டிய பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்காதவாறு அந்தப் பகுதியிலுள்ள மூன்று குளங்கள் புனரமைக்கப்பட்டதுடன் வடிகால்களும் துப்புரவு செய்யப்பட்டுள்ளன.

பாதுகாப்புக் காரணங்களுக்காக கம்பிகள் போடப்பட்டு இருந்த வடிகால் யாழ். மாநகர உதவி மேயர் து.இளங்கோ, மாநகர உறுப்பினர் சு.கிளவ்யோடாசியஸ், மாநகர சபை பொறியியலாளர், உத்தியோகத்தர் மற்றும் இராணுவத்தினரின் முயற்சியால் புனரமைமைக்கப்பட்டதைத் தொடர்ந்து இந்தப் பகுதிகளில் வெள்ளநீர் தேங்குவது தவிர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆஸ்பத்திரி வீதி - வேம்படி வீதிச் சந்தியில் உள்ள வடிகால் துப்புரவுப் பணிகள் இடம்பெற்றுள்ளள. மழை வெள்ளத்தால் பாதிப்பு ஏற்படாத வகையில் யாழ். மாநகர சபை வடிகால்களைத் துப்புரவு செய்து வருவதாக உதவி மேயர் இளங்கோ தெரிவித்தார். (50-111)

# நெடுந்தீவு கிழக்குப் பகுதிக்கான மின் விநியோகம் ஸ்தம்பிதம்

நல்லூர், டிசெ.18

நெடுந்தீவு கிழக்குப் பகுதிக்கான மின்சார விநியோகம் முழுமையாக ஸ்தம்பிதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை முதல் துண்டிக்கப்பட்டிருக்கும் இந்த மின்விநியோகத்தைச் சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

காற்றுக் காரணமாக தென்னைமரம் ஒன்று சரிந்து விழுந்ததில் மின் விநியோக வயர் தடைப்பட்டதாகவும், விழுந்தமரம் அப்புறப்படுத்தப்பட்ட பின்னரும் இதுவரை மின் விநியோகம் சீராகவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (50-111)

# கலாசார அமைச்சின் ஆக்கப் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

நவாலி,டிசெ.18

கலாசார அலுவல்கள் தேசிய மரவுரிமை அமைச்சினால் சிவ் மகா கங்கா ஆக்கத்திறன் போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

சிறுகதை, பாடல், உரைநடை, விவாதப்போட்டி, அறிவுப்போட்டி, சித்திரம், புகைப்படம், சிற்பங்களும் கடைச்சல்களும், தேசிய கைப்பணிப் பொருள்கள் தொலைக்காட்சித் தொடர்நாடகம், குறுநாடகம் பேச்சுப்போட்டி ஆகியவற்றிற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி இம் மாதம் 31ஆம் திகதியாகும்.

சகல விண்ணப்பங்களையும் செயலாளர் கலாசார அலுவல்கள் தேசிய மரவுரிமை அமைச்சு, 8 ஆம் மாடி, செத்திரிபாய, பத்திரமுல்ல என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசார பிரிவில் பார்வையிடலாம். (50-100)



யாழ். சோமசுந்தரம் பாலர்பாடசாலையின் வெள்ளி விழா மலர் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சன்மார்க்க வித்தியாலய அதிபர் திருமதி எஸ். விமலநாதன் வெள்ளிவிழா மலரின் பிரதியை உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள் நேசனுக்கு வழங்குவதையும், நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலையின் ஆசிரியர் திருமதி ஆனந்தி சோமசுந்தரம், பாலர் பாடசாலை அதிபர் திருமதி ச.வொட்சன் ஆகியோருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

(50-167)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விவசாயத்திணைக்களத்தினால் 'கமநெகும' திட்டத்தின்கீழ் மானிய அடிப்படையில் விவசாயிகளுக்கு நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை. மாகாண விவசாயப் பணிப்பாளர் க.சுப்பிரமணியம், நல்லூர்ப் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், யாழ். மாவட்டப் பிரதி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சிவகுமார் ஆகியோர் நீரிறைக்கும் இயந்திரங்கள் வழங்குவதைப் படங்களில் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

## வன்னிப் பகுதியில் இடம்பெயர்வின் போது
# உறவினர்களால் கைவிடப்பட்ட 19 முதியவர்கள்
## நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டனர்

யாழ்ப்பாணம் .டிசெ.18

வன்னியில் இடம்பெயர்வின்போது கைவிடப்பட்டுப் பின்னர் வவுனியா சமணங்குளம் முதியோர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்ட யாழ். மாவட்டத்தை சேர்ந்த 19 முதியோர்கள் நேற்று முன்தினம் புதன் கிழமை யாழ்ப்பாணத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

அழைத்துவரப்பட்ட இந்த முதியோர்கள் தற்போது கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இடம்பெயர்வின்போது கைவிடப்பட்டுப் பின்னர் நலன்புரி முகாம்களில் தங்கியிருந்த இந்த முதியோர்கள் பின்பு சமணங்குளம் முதியோர் இல்லத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்களே தற்போது யாழ்ப்பாணத்துக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

அழைத்துவரப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:

செல்லத்துரை தவராஜசிங்கம்(நுணாவில் மேற்கு, சாவகச்சேரி), சரவணமுத்து தம்பையா (இடைக்காடு மேற்கு, அச்சுவேலி), சரவணமுத்து சாந்தலட்சுமி (இடைக்காடு மேற்கு, அச்சுவேலி), முருகன் வேலன் (வலந்தலை தெற்கு, காரைநகர்), செ.முருகநாதன், கிருஷ்ணபிள்ளை பொன்னம்பலம் (கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை), ஏ.எம்.மரியநாயகம் (கூழாவடி, ஆனைக்கோட்டை), என். காந்திமதி (கூழாவடி, ஆனைக்கோட்டை), மாட்டீன் மரியாய் (குருநகர்), சரவணமுத்து நாகராஜா (கரணவாய், கரவெட்டி), தம்பு கந்தசாமி (அத்தியடி), தம்பு மகேந்திரன் (கற்பகப் பிள்ளையார் கோயிலடி, உடுவில்), சண்முகநாதன் நாகம்மா (சிவன்கோவிலடி, வட்டுக்கோட்டை), வை.மாணிக்கம் வைரவர் கோவிலடி, செம்மணி வீதி, கோப்பாய்), சின்னவன் கந்தன் (வரணி), நடராஜா வள்ளிப்பிள்ளை (புலோலி தெற்கு, புலோலி), இ.இரட்ணகுமார் (சபானந்தர் வீதி, நல்லூர்), சின்னத்தம்பி தெய்வம் பலம் (வட்டுக்கோட்டை), ஆர்.கணேசலிங்கம் (பழைய தபாற்கந்தோர் வீதி, சித்தங்கேணி).

இந்த 19 முதியோர்களும் கைதடி முதியோர் இல்லத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளதால் இவர்களின் உறவினர்கள் வருகை தந்து முதியவர்களைக் கூட்டிச் செல்ல முடியும் என்று இல்ல அத்தியட்சகர் என். இராஜலிங்கம் தெரிவித்துள்ளார். (50-224)

## 6வயது மலேசிய தமிழ்ச் சிறுவன் கார் இழுத்துச் சாதனை

மலேசியா,டிசெ.18

6வயதுச் சிறுவன் ஒருவன் 'மேர்சடெஸ்' கார் ஒன்றை நான்கு பேர் உள்ளே அமர்ந்திருக்கக் கூடியதாக 120 மீற்றர் தூரம் இழுத்துச் சென்று சாதனை புரிந்துள்ளான்.

35 கிலோகிராம் நிறையுடைய ரி.சந்தோஸ் பெருமாள் என்ற இந்த மலேசியச் சிறுவன் ஆயிரத்து 990 கிலோ கிராம் நிறையுடைய காரை 4 பிரயாணிகளுடன் ஐந்து நிமிடங்கள் வரை இழுத்துச் சாதனை புரிந்துள்ளான்.

இந்தச் சிறுவன் இழுத்துச் சாதனை புரிந்த காரில் பிரயாணிகளாக இருந்தவர்களில் மலேசிய அமைச்சரவையில் பிரதி அமைச்சராக இருக்கும் ரி.முருகையாவும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ப)

# வீட்டு வன்முறைகளால் பாதிப்புற்ற பெண்களின் விவரங்களை மகளிர் அபிவிருத்தி நிலையம் சேகரிக்கிறது

யாழ்ப்பாணம், டிசெ.18

வீட்டு வன்முறைகளால் பாதிக்கப்பட்ட பெண்களின் தரவுகளை மகளிர் அபிவிருத்தி நிலையம் யாழ். மாவட்டத்தில் சேரித்து வருகின்றது. இச் செயற்பாடு தகவல் தொழில்நுட்ப முகவர் அனுசரணையுடன் கடந்த 2 வருட காலமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. இதற்காக www.vajaffna.org என்ற இணையத்தளமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று அவ்வமைப்புத் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பு மேலும் தெரிவித்தவை வருமாறு: பெண்கள் எதிர்நோக்கும் வன்முறைகளை யாழ். மாவட்டத்தில் ஒழுங்காகப் பதிவு செய்துவரும் இந்த நிறுவனத்தில் பிரதேச மட்டத்தில் 10 பெண்கள் கள ஆய்வாளர்களாகச் செயற்பட்டு வருகின்றனர். நேரடியாகப் பாதிக்கப்பட்ட பெண்களைச் சந்தித்து அவர்களிடம் தரவுகளைப்பெற்று கணனியில் பதிவு செய்வதன் மூலம் இத்தரவுகள் சேகரிக்கப்படுகின்றன. இத்தரவுகளில் ஏதாவது செயற்படுத்த விரும்பும் நிறுவனங்கள் தேவையாயின் அவற்றை பெற்றுக்கொள்ள முடியும். ஆயினும் பெறப்பட்ட விவரங்களின் இரகசியத் தன்மை பேணப்படும்.

வீட்டு வன்முறையினால் பாதிக்கப்பட்ட பெண்களை இனங்காண்பதற்கு மகளிர் அபிவிருத்தி நிலையம் பிரதேச ரீதியாகப் பல கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தி நடத்தி வருகின்றது. பெண்கள் தமக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்குச் சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கவிரும்பின் மகளிர் அபிவிருத்தி நிலையம் நடத்தும் இலவச சட்ட ஆலோசனைப் பிரிவில் முறைப்பாடுகளைச் செய்து சட்ட ரீதியான நடவடிக்கைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்காக மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் சட்டதரணிகள் சேவையாற்றுகின்றனர். பெண்கள் தமது சட்ட நடவடிக்கைகளுக்கு பணம் செலுத்தத் தேவையில்லை. யாழ். மாவட்டத்தில் வீட்டு வன்முறைகள் அதிகரித்துச் செல்வதற்கு கடந்த 2 வருடங்களில் சேகரித்த ஆயிரத்து 700 பதிவுகளும் சான்றாக உள்ளன.

இவ்வீட்டு வன்முறைச் சம்பவங்கள் மேலும் அதிகரிக்காமல் இருக்க வேண்டுமாயின் பெண்கள் சட்ட ரீதியாக வரையறுக்கப்பட்ட சட்ட ஒழுங்குகளைப் பின்பற்றுதல் அவசியமாகின்றது. வீட்டு வன்முறையினால் பாதிக்கப்படும் பெண்கள் பாராமுகமாக இருப்பதனால் அவர்கள் உடலாலும் உள்ளத்தினாலும் மேலும் மேலும் பாதிப்படைகின்றனர். குடும்பத்திலிருப்பவர்கள் குடும்பத்தின் பங்காளிகளான பெண்களை அன்போடும் மரியாதையோடும் அவர்கள் கௌரவத்தைப் பேணும் படி நடக்கும் போதும் தான் வீட்டு வன்முறை குறைவடைய வாய்ப்புகள் உண்டு.

சட்டத்தேவையைப் பெற விரும்புவோர் மகளிர் அபிவிருத்தி நிலையத்துடன் தொடர்புகொள்ள முடியும் என்த் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04)

## கண்ணீர் அஞ்சலி



எமது வலயக் கல்வி அலுவலகத்தில் கணித பாட ஆசிரிய ஆலோசகராகக் கடமையாற்றும் நா.மகாநாதன் அவர்களின் பாசமிகு தாய்

**திருமதி நாகநாதன் மனோன்மணி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா இறைவனடிசேரப் பிரார்த்திக்கின்றோம்.

வலயக் கல்விப் பணிப்பாளரும் சக உத்தியோகத்தர்களும்.

வலயக் கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம். (91528)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் அந்தோனிமுத்து இமனுவல் மரியதாசன்

(நெடியகாடு, வல்வெட்டித்துறை)

தோற்றம் 25.02.1943 மறைவு 19.11.2009

"இறைவனில் உறைவது ஒன்றே உன் மனநிறைவும் மகிழ்வும் ஆகட்டும்"

திருகோணமலையில் காலமான அ.இ.மரியதாசன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரிலும், தந்தி, தபால், தொலைபேசி மூலமும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் உள்ளிட்ட அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். குறிப்பாக சிரமங்களுக்கு மத்தியிலும் தமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொண்ட நெடியகாடு இளைஞர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் நினைவுத் திருப்பலி நாளை (19.12.2009) சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் தேவாயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும். இதில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக செபிக்குமாறு அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

14 ½, கிறீன் வீதி, திருகோணமலை. (91529) குடும்பத்தினர்.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 167, Kasthuriyar Road, Jaffna. 0212228250

3மாதகால தொழில்சார் கணனிக்கற்கை நெறி
கம்பனிக்கணக்குகளுடன் VAT இனையும் உள்ளடக்கி
DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING & E-COMMERCE
உங்கள் நிறுவன கணக்குகளை நீங்களே கணனிமயப்படுத்தும்படியான 100% செய்முறைப்பயிற்சியுடன்..
சர்வதேச ரீதியில் முன்னணியிலுள்ள கணக்கியல் மென்பொருட்களான
Quick Book + ACCPAC + MYOB
ஆகியவற்றினூடாக கற்பிக்கப்படும்




வகுப்புக்கள் ஆரம்பம்:-
19/12/2009-3PM or 4PM
20/12/2009-3PM or 4PM
21/12/2009-9AM
22/12/2009-9AM

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 . 01 . 1921



மறைவு 10 . 01 . 2008

**அமரர் தவசிப்பிள்ளை இராமலிங்கம்**

(முன்னாள் பஸ் காப்பாளர்)

திதி: மார்கழிப்பூர்வ துதியை (18.12.2009)

இவ்வுலகை விட்டு இறையடி சேர்ந்து
இரண்டு ஆண்டுகள் சென்றபோதும்
இனிய உங்கள் நினைவுகள்
இன்றும் பசுமையாய் எம்மனதில்....

243, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர். (91530)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெலுங்கான விவகாரத்தில் மிகவிரைவில் சுமுகத் தீர்வு

## பிரதமர் மன்மோகன் சிங் உறுதி



டில்லி, டிச. 18

தெலுங்கானா விவகாரத்தில் சுமுகத் தீர்வு காண்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஆந்திர மாநில காங்கிரஸ் எம்.பிக்களிடம் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார்.

ஆந்திராவைப் பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைக்கப்படும் என்ற மத்திய அரசின் அறிவிப்பால் ஆந்திராவில் பதற்றம் நிலவுகிறது. இந்தப் பிரச்சினை குறித்து பிரதமர் மன்மோகன் சிங் தலைமையில் மத்திய அமைச்சரவை குழு கடந்த செவ்வாயன்று கூடி விவாதித்தது. அமைதி ஏற்பட அனைத்து கட்சிகளும் மக்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது.

இந்நிலையில், பிரதமர் மன்மோகன் சிங்கை ஆந்திராவைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் சாய் பிரதாப், புரந்தேஸ்வரி உட்பட 20 இற்கும் மேற்பட்ட எம்.பிக்கள் நேற்று முன்தினம் சந்தித்தனர். தெலுங்கானாவுக்கு ஆந்திராவில் எழுந்துள்ள எதிர்ப்பையும் பிரதமர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரினர்.

ஆந்திராவில் பதற்றத்தைத் தணிக்கும் வகையில் சுமுகத் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என எம்.பிக்களிடம் மன்மோகன் சிங் உறுதியளித்தார். ஒருங்கிணைந்த ஆந்திராவுக்கு ஆதரவாக போராட்டங்கள் நடந்து வரும் நிலையில், சகஜ நிலையை ஏற்படுத்த முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் பிரதமர் கூறினார்.

அமைதியை ஏற்படுத்த எம்.பிக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். பின்னர், நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜியையும் ஆந்திர எம்.பிக்கள் சந்தித்துப் பேசினர். நிலைமை சீரடைய நடவடிக்கை எடுக்கப்படும் என்று எம்.பிக்களிடம் பிரணாப் முகர்ஜி கூறினார். இத்தகவலை பிரதமரை சந்தித்த எம்.பிக்கள் குழுவில் இடம் பெற்றிருந்த சுப்பராமி ரெட்டி தெரிவித்தார்.

# 34 இலங்கை மீனவர் கைது!

விசாகபட்டினம், டிசெ.18

இந்தியக் கடல் எல்லைக்குள் மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 34 பேரை கடந்த செவ்வாய்க்கிழமை இந்தியக் கடலோர காவல் படையினர் கைதுசெய்தனர்.

ஆந்திரா, விசா கபட்டினத்தில் இந்தியக் கடலோர காவல் படை உயரதிகாரி ராஜு நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு -

இந்திய கடல் பகுதியில், கடலோர காவல் படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இந்திய கடல் எல்லைக்குள் சட்ட விரோதமாக ஊடுருவிய இலங்கை மீனவர்கள், விசாகப்பட்டினம் - மசூலிப்பட்டினம் இடையேயான கடல் பகுதிக்குள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

இவர்களை இந்தியக் கடலோரக் காவல் படையினர் சுற்றி வளைத்தனர். இதில், 34 இலங்கை மீனவர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்களின் ஆறு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன. விசாரணைக்கு பின்னர் இலங்கை மீனவர்கள் விசாகபட்டினம் துறைமுக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர் - என்றார்.

# தெலுங்கானாவை எதிர்க்கும் சிரஞ்சீவியை கண்டித்து 18 திரையரங்குகள் மீது தாக்கு!

## இதனால் உண்ணாவிரதத்தைத் தள்ளிவைத்தார்

நகரி, டிசெ. 18

தெலுங்கானாவை எதிர்த்து நடிகர் சிரஞ்சீவி உண்ணாவிரதப் போராட்டத்தை அறிவித்ததால் தெலுங்கானா ஆதரவாளர்கள் 18 திரையரங்குகளை அடித்து நொறுக்கினர்.

ஆந்திராவை இரண்டாக பிரித்து தெலுங்கானா மாநிலம் அமைக்கப்படும் என்று மத்திய அரசு அறிவித்தது. இதற்கு ஆந்திராவின் ராயலசீமா மற்றும் கடலோர மாவட்டங்களில் கடும் எதிர்ப்பு கிளம்பி உள்ளது. அந்த பகுதிகளில் தொடர்ந்து முழு அடைப்பு போராட்டம் நடந்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட் டுள்ளது.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் ஆந்திர பிரிவினைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிரஞ்சீவி தனது சொந்த தொகுதியான திருப்பதியில் நேற்று முதல் சாகும்வரை உண்ணாவிரத போராட்டம் தொடங்கவிருக்கிறார் என அவருடைய கட்சி சார்பில் அறிவிக் கப்பட்டுள்ளது.

சிரஞ்சீவியின் மனமாற்றத்தால் அவருடைய கட்சியில் உள்ள தெலுங்கானா பகுதி நிர்வாகிகளும் எம்.எல்.ஏக்களும் அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் சிரஞ்சீவியைச் சந்தித்து இப்படி திடுதிப்பென்று கட்சியின் நிலையை மாற்றினால் மக்களின் நம்பிக்கையை இழக்க நேரிடும் என்று வருத்தம் தெரிவித்தனர்.

இதற்கிடையே தெலுங்கானாவுக்காக போராடி வரும் ஒஸ்மானியா, காகதியா பல்கலைக்கழக மாணவர்கள் சிரஞ்சீவியின் மனமாற்றம் பற்றி தகவல் அறிந்து ஆத்திரம் அடைந்தனர். அவர்கள் கூட்டமாக திரண்டு வந்து ஐதாராபாத்தில் உள்ள பிரஜாராஜ்யம் கட்சி அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர். சிரஞ்சீவி மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்களின் படங்களை புறக்கணிக்கப்போகின்றனர் எனவும் அவர்கள் அறிவித்தனர். இதனால் சிரஞ்சீவிக்கு புதிய நெருக்கடி ஏற்பட்டது.

இதையடுத்து தனது அணியில் உள்ள தெலுங்கானா ஆதரவு அணியினரை அழைத்து அவசர ஆலோசனை நடத்திய சிரஞ்சீவி மத்திய அரசு என்ன செய்யப் போகிறது என்பதை பொறுத்து இருந்து பார்ப்பது என்றும் அவசரப்படாமல் கவனத் துடன் செயற்படுவது என்றும் தீர்மானித்தார்.

திருப்பதியில் தாம் தொடங்க இருந்த காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தை 15 நாள்களுக்கு தள்ளி வைக்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

# தெலுங்கானாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து உண்ணாவிரதம் இருந்த எம்.எல்.ஏ. கைது!

நகரி, டிச. 18

ஐக்கிய ஆந்திரா கோரிக்கையை வலியுறுத்தி சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த எம்.எல்.ஏ. கைது செய்யப்பட்டார்.

ஐக்கிய ஆந்திரா கோரிக்கையை வலியுறுத்தி தெலுங்கு தேசம் எம்.எல்.ஏ. உமா மகேஸ்வரராவும், ராம கொத்தைய்யா, விஜயவாடா நகர முன்னாள் மேயர் அனுராதா ஆகியோர் விஜயவாடா நகரில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

இவர்களின் நிலைமை மிகவும் மோசமடைந்ததையடுத்து உண்ணாவிரதம் இருப்பவர்களை மீட்டு வைத்தியசாலையில் சேர்ப்பதற்கு உண்ணாவிரதப் பந்தலுக்கு நேற்று முன்தினம் இரவு பொலிஸார் சென்றனர்.

அங்கு ராம கொத்தைய்யாவையும், அனுராதாவையும் வலுக்கட்டாயமாக கைது செய்து வைத்தியசாலையில் சேர்த்தனர்.

ஆனால் உண்ணாவிரதம் இருந்த இன்னொரு எம்.எல்.ஏ.வை உமாமகேஸ்வர் ராவை தெலுங்கு தேசம் கட்சித் தலைவர்களும், தொண்டர்களும் சூழ்ந்து கொண்டனர். இதனால் பொலிஸாரால் அவரைக் கைது செய்து வைத்தியசாலையில் சேர்க்க முடியவில்லை.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள ராம கொத்தைய்யாவும், உமாமகேஸ்வர ராவும் நேற்றுமுன்தினம் 4 ஆவது நாளாக தங்களது உண்ணாவிரதத்தை தொடர்ந்தனர்.

இதனிடையே, விஜயவாடா தொகுதி காங்கிரஸ் எம்.பி. ராஜகோபாலின் உண்ணாவிரதம் நேற்றுமுன்தினம் 3 ஆவது நாளாக தொடர்ந்தது. ஆந்திராவைப் பிரிக்கும் நடவடிக்கைகளை கைவிடாதவரை உண்ணாவிரதம் தொடரும் என்று அவர் அறிவித்திருக்கிறார்.

## இந்தியச் செய்திகள்

# சோனியா காந்தியின் எம்.பி. பதவியை பறிக்கக் கோரும் வழக்குத் தள்ளுபடி

டில்லி, டிச. 18

சோனியாவின் எம்.பி. பதவியை பறிக் கும்படி ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி தொடர்ந்த மனுவை டில்லி உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

காங்கிரஸ் தலைவர் சோனியாவுக்கு கடந்த 2006 ஆம் ஆண்டு 'ஆர்டர் ஒப் லியோபோல்டு' என்ற தனது நாட்டின் 2ஆவது உயரிய விருதை பெல்ஜியம் அரசு வழங்கியது. இதைப் பெறுபவர்கள் அந்த நாட்டின் குடிமகனாகக் கருதப்படுவார்கள் என்றும், அதனால் சோனியாவின் எம்.பி. பதவியை தகுதியிழப்பு செய்யும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடும்படியும் கோரி டில்லி உயர் நீதிமன்றத்தில் ஜனதா கட்சித் தலைவர் சுப்பிரமணியசுவாமி வழக்கு தொடர்ந்தார். தலைமை நீதிபதி ஏ.பி.ஷா. நீதிபதி முரளிதர் அடங்கிய ஆயம் இதை விசாரித்து வந்தது.

நேற்றுமுன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தபோது வாதாடிய சுப்பிரமணியசுவாமி இந்த வழக்குத் தொடர்பாக சரியாக விசாரிக்கப்படவில்லை. சில முக்கிய விவரங்களை மறைக்க அரசு முயற்சிக்கிறது. சட்டத்தின் முன்னர் யாரும் பெரியவர்கள் அல்ல என்ற எண்ணம் பொதுமக்களுக்கு ஏற்பட வேண்டும். எனவே, சோனியாவின் எம்.பி. பதவியை தகுதியிழப்பு செய்யும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று கூறினார்.

அதில் திருப்தி அடையாத நீதிபதிகள், இந்த முறைப்பாட்டை ஆய்வு செய்த தேர்தல் ஆணையம், இந்த வழக்கில் இனிமேல் விசாரணை நடத்த தேவையில்லை என்று கருத்து கூறியுள்ளது. தாங்கள் கூறிய குற்றச்சாட்டுக்கு ஆதாரமாக நீங்கள் கொடுத் துள்ள ஆவணங்கள் எங்களுக்கு திருப்தி அளிக்கவில்லை. இந்த மனு விசாரணைக்கு தகுதியானதாக இல்லை என்று தள்ளுபடி செய்தனர்.

# இளங்கோவன் வீட்டின் மீது குண்டுவீச்சு: 4 பேருக்கு பிணை வழங்க அனுமதி!



சென்னை, டிச. 18

முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் வீடு மீது பெற்றோல் குண்டு வீசிய வழக்கில் கைதானவர்களுக்கு பிணை வழங்க நீதிமன்று உத் தர விட்டுள்ளது.

கடந்த மாதம் 26 ஆம் திகதி ஈரோட்டில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவராக இருந்த பிரபாகரனின் பிறந்தநாளை யொட்டி, போஸ்டர்கள் ஒட்டப்பட்டன. இந்த போஸ்டர்களை முன்னாள் மத்திய அமைச்சர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் தலைமையில், அவரது ஆதரவாளர்கள் கிழித்தனர் என முறைப்பாடு கூறப்பட்டது.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து கடந்த மாதம் 27 ஆம் திகதி சென்னையிலுள்ள ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் வீடு மீது பெற்றோல் குண்டு வீசப்பட்டது. இது தொடர்பாக கைது செய்யப்பட்ட வெற்றிகுமரன், அருண், மணி, மித்ரன் ஆகியோர் ஜாமீன் கேட்டு சென்னை நீதிமன்றில் மனு தாக்கல் செய்தனர்.

நீதிபதி பி.தேவதாஸ் 4 பேரையும் பிணையில் விடுதலை செய்ய நேற்று முன்தினம் உத்தரவிட்டார். சேதாரம் எதுவும் இல்லாததாலும், விசாரணை முடிந்து விட்டதாலும் இவர்களுக்கு பிணை வழங்குவதாக நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார். ரூபா 10 ஆயிரத்து சொந்த பிணையும் அதே தொகைக்கு இருநபர் பிணையும் வழங்கி பிணை பெறலாம் என்றும் பிணையில் வெளிவந்த பின்னர் திங்கள், வெள்ளி ஆகிய நாள்களில் பொலிஸில் ஆஜராக வேண்டும் என்றும் தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

# மக்களவைக் குழுத் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்தார் ஜஸ்வந்த் சிங்



புதுடில்லி, டிச. 18

நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுத் தலைவர் பதவியில் இருந்து ஜஸ்வந்த் சிங் நேற்று முன்தினம் திடீரென ராஜினாமாச் செய்தார். சபாநாயகர் அலுவலக வட்டாரங்கள் இந்தத் தகவலை உறுதி செய்தன.

பாரதீய ஜனதாக் கட்சியில் இருந்து நீக்கப்பட்ட டார்ஜிலிங் தொகுதி எம்.பியும் முன்னாள் மத்திய அமைச்சருமான ஜஸ்வந்த்சிங், நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழு தலைவராக பதவி வகித்து வந்தார்.

பாராதீய ஜனதாவில் இருந்து நீக்கப்பட்டதால் அந்தப் பதவில் இருந்து விலகும்படி பாரதீய ஜனதா கட்சி, அவரை வற்புறுத்தியது. ஆனதல் பதவி விலக முடியாது என்று ஜஸ்வந்த் சிங் பிடிவாதமாக மறுத்து வந்தார்.

இந்த நிலையில் நாடாளுமன்ற பொதுக் கணக்குக் குழுத் தலைவர் பதவியில் இருந்து ஜஸ்வந்த் சிங் நேற்று திடீரென்று ராஜினாமாச் செய்தார். சபாநாயகர் அலுவலக வட்டாரங்கள் இந்த தகவலை உறுதி செய்தன.

ஜஸ்வந்த் சிங்கின் திடீர் மனமாற்றத்துக்கு காரணம் என்ன என்பது தெரியவில்லை.

# நகரங்கள், வரலாற்றுச் சின்னங்கள் மீது தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டம்

## உள்துறை இணையமைச்சர் தகவல்

டில்லி, டிச.18

இந்தியாவின் முக்கிய நகரங்கள் மற்றும் வரலாற்றுச் சிறப்பு மிக்க பகுதிகளில் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ளனர் - என்று மத்திய உள்துறை இணையமைச்சர் அஜய் மக்கான் தெரிவித்தார்.

மாநிலங்களவையில் புதன்கிழமை கேள்வி நேரத்தின்போது அவர் இத்தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியவை வருமாறு-

புலனாய்வு அமைப்புகளுக்குக் கிடைத்துள்ள தகவலின்படி முக்கிய நகரங்கள் குறிப்பாக ஹைதராபாத் உள்ளிட்ட நகரங்கள் மீது தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

ஆந்திர மாநிலத்தில் பயங்கரவாதிகளை முறியடிக்க தீவிரவாத எதிர்ப்புப் பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. ஓராண்டில் இந்தப் பிரிவு முழுவீச்சில் செயற்படத் தொடங்கும். இந்த அமைப்பில் தற்போது 1,590 பேர் சேர்க்கப்பட்டு பயிற்சி அளிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. தற்போது 390 பேர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு கொமாண்டோ பயிற்சி அளிக்கப்படுகிறது என்றும் இப்பிரிவின் முழுமையான செயற்பாடு ஓராண்டில் இருக்கும் என மாநில அரசு தெரிவித்துள்ளது.

கடலோரக் காவலை வலுப்படுத்த அரசு ரூபா 400 கோடி செலவிலான ஐந்தாண்டுத் திட்ட செயல்பாட்டுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் தொடரா செலவினம் ரூபா 400 கோடியும் தொடர் செலவினம் ரூ. 151 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது. கடலோரக் காவலை வலுப்படுத்த ஒருங்கிணைந்த பாதுகாப்புத் திட்டத்தை மத்திய அரசு வகுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கராத்தே அணி கொழும்பு செல்கிறது

சோட்டோகான் கராத்தே சங்கத்தின் இரண்டாவது கராத்தே சம்பியன் போட்டி நாளை சனிக்கிழமை களனிப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ளது.

இப்போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ்.மாவட்டத்திலிருந்து சோட்டோகான் கராத்தே சங்கத்தின் பிரதம ஆசிரியரும் பயிற்றுநருமான சென்சேய்.றஞ்ஜித் சைலேந்திரகுமார் தலைமையில் ஆறுபேர் கொண்ட குழுவினர் இன்று வெள்ளிக்கிழமை கொழும்பு புறப்படுகின்றனர். (50-23)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

அமரர் பேராசிரியர்

**சிவபாதசுந்தரம் மகேஸ்வரன்**

**நினைவுப் பேருரை**

**'Sri Lankan Lichens: Their Medicinal and Ecological Potential'**

பேருரை வழங்குநர்: Professor-Veranja Karunaratne FRSC
Professor in Chemistry. University of Peradeniya B.Sc. (Colombo), Ph.D. (British Columbia)

இடம் : Library Auditorium University of Jaffna.

திகதி : 18.12.2009

நேரம் : பி.ப. 2.30

ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(சி/563323) பதிவாளர்.



**அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்கம் (வ-து)**

**பதவிவெற்றிடம்-சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர்**

**குறியீட்டு இலக்கம்-208/15**

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர் (208/15) பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் 20/= செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வி, பிறப்பு, அனுபவச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள் இணைத்து "பொது முகாமையாளர் அளவெட்டி மல்லாகம் ப.நோ. கூ.சங்கம், அளவெட்டி" என்னும் முகவரிக்கு 01.01.2010 ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

பதவி: : சில்லறைப் பண்டகசாலை முகாமையாளர் (208/15)

சம்பள அளவுத்திட்டம்: 66/2006 இன்படி 9450-11000 / 75X10-80X10

**கல்வித் தகைமைகள்:**

அ) கூட்டுறவுப் பணியாளரின் 16 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடத்திற்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 17 ஆவது சம்பளத் திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடத்திற்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) பத்திரம்/ க.பொ.த (சாதாரண தரம்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண் கணிதம்/ தூய கணிதம், சிங்களம்/ தமிழ் பாஷை என்பனவற்றினை உள்ளடக்கியதாக 6 பாடங்களிலான சித்தி சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வயது: 18-45 வயதுக்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

குறிப்பு: 1. சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. மேற்படி பதவிக்குச் சங்கத்தால் கோரப்படும் பிணைப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

(சி/563326)

16.12.2009

**பொது முகாமையாளர்,**
அளவெட்டி மல்லாகம்
ப.நோ.கூ.சங்கம்.



**ஸுவசெத Suwasetha சுவசெத லொத்தா**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **341**

சீட்டிழுப்பு திகதி: **16.12.2009**

வெற்றி எழுத்து: **N** வெற்றி இலக்கங்கள்: **17 21 51 59** போனஸ் இலக்கம் **25**

| | கூட்டு | பரிசுத்தொகை | வெற்றிப் பெற்ற தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில எழுத்து ஒன்றுடன் 4 இலக்கங்களும் பொருந்தினால் | ரு. 10,206,534.50 | - |
| 1 பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 2,000,000.00 | 01 |
| 2 பரிசு | 3 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரு. 50,000.00 | - |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் மாத்திரம் பொருந்தினால் | ரு. 1,000.00 | 89 |
| 4 பரிசு | 2 இலக்கங்களுடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரு. 500.00 | 141 |
| 5 பரிசு | 2 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 40.00 | 3525 |
| 6 பரிசு | 1 இலக்கத்துடன் போனஸ் இலக்கமும் பொருந்தினால் | ரு. 40.00 | 2398 |
| 7 பரிசு | 1 இலக்கம் மாத்திரம் பொருந்தினால் | ரு. 20.00 | 44575 |

இந்த முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை ரூ. **3,287,920.00**

**அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,206,534.50**

வெற்றி பெறும் டிக்கட்டுகள் சீட்டிழுப்புத் திகதியிலிருந்து 6 மாதங்கள் மட்டுமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சம் அல்லது அதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

சீட்டிழுப்புக்களின் முன்னோடி
தேசிய லொத்தர் சபை
234/2, காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி அலகு : 2470662, 2470663
தொலைநகல்: 2473360, 2433631 இணையத்தளம்:www.nlb.lk

அடுத்த சீட்டிழுப்பில் இருபது இலட்சம் ரூபாய் முதற் பரிசையும் வேறு பல பரிசுகளையும் வெல்லுங்கள்.


## விஷேட தேவையுள்ளோருக்கு உபகரணங்கள் வழங்கல்

வலி.மேற்கு, டிசெ.18

சங்கானைப் பிரதேச செயலகத்தினூடாக சமூகசேவைத் திணைக்களத்திற்கு உபகரணங்களுக்கு விண்ணப்பித்த விசேட தேவையுடைவர்களுக்கான இரண்டு முச்சக்கரவண்டி, ஐந்து சக்கர நாற்காலி, மூன்று மூக்குக் கண்ணாடி என்பன கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் விண்ணப்பித்த விசேட தேவைக்குரியவர்கள் சமூக சேவை உத்தியோகத்தரைச் சந்திக்குமாறும், தேவையுடையவர்கள் தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறும் சமூக சேவை உத்தியோகத்தர் வ. செல்வம் அறிவித்துள்ளார். (50-112)

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான மீள் பரீட்சைகள்

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்.பல்கலைக்கழகத்தில் கலை மற்றும் நுண்கலைப் பட்டப்படிப்பை பழைய பாடத்திட்டத்தின் கீழ் பயின்று தமது பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்யத் தவறிய மாணவர்களுக்கான முதலாம், இரண்டாம், அரையாண்டு ஆகியவற்றுக்கான விசேட மீள்பரீட்சைகள் எதிர்வரும் 28 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகவுள்ளதாக யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் நா.ஞானக்குமரன் அறிவித்துள்ளார். (50-201)

## மல்லாகம் நீதிமன்றில் ஏல விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ.18

மல்லாகம் மாவட்ட நீதி மன்றத்தால் பறிமுதல் செய்யப்பட்ட வெற்றுச் சாராயப் போத்தல்கள், வெற்று பியர் போத்தல்கள், வெற்றுச் சோடாப் போத்தல்கள் என்பன எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணியளவில் ஏலத்தில் விடப்படவுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (50-9)

## வைத்தியசாலையில் இருந்தபடி பரீட்சை எழுதும் மாணவன்

கண்டி, டிசெ.18

பேராதனை சரசவி உயன பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத வந்த மாணவர் குழுக்கள் இரண்டுக்கிடையில் ஏற்பட்ட மோதலின் காரணமாக காயமுற்ற ஒரு மாணவன், பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படும் அதேவேளை அம்மாணவன் ஜி.சீ.ஈ.சாதாரண தரப் பரீட்சையையும் அதே வைத்தியசாலையில் இருந்தபடியே எழுத அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெகி தெனியவைச் சேர்ந்த 16 வயது சமான்பொல் கொல்ல என்ற இந்த மாணவன் கன்னோறுவ கனிஷ்ட பாடசாலையைச் சேர்ந்தவராவர். இம் மாணவன் சரசவி பாடசாலையைச் சேர்ந்த மாணவர்களால் தனிமைப்படுத்தப்பட்டு நையப் புடைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

காயமடைந்த இம்மாணவனை வைத்தியசாலையில் இருந்தபடியே பரீட்சை எழுதுவதற்கு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் காமினி சமரசிங்க அனுமதியளித்துள்ளார். (ப)

## கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் மீளக்குடியமர்ந்தோருக்கு 20 ஆயிரம் ரூபா

கரவெட்டி, டிசெ.18

நலன்புரி முகாம்களில் இருந்து விடுவிக்கப்பட்டு கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியமர்த்தப்பட்டுள்ள மக்களுக்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் நேற்று வியாழக்கிழமை முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

அகதிகளுக்கான ஐ.நா.நிறுவனத்தால் ஆயிரத்து 392 குடும்பங்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வீதம் இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் இன்று வெள்ளிக்கிழமை முதல் மீள்குடியமர்ந்த ஆயிரத்து 425 குடும்பங்களுக்கு உணவல்லாத பொருள்கள் வழங்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியமர்த்தப்பட்ட மக்களுக்கு முதலாம் கட்டக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்படவில்லை என்று விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (50-9-70)

## சுயதொழில் கொடுப்பனவு

சங்கானைப் பிரதேச செயலகத்தினூடாக சமூகசேவை திணைக்களத்துக்கு 50 ஆயிரம் ரூபா சுயதொழில் ஊக்குவிப்பு நிதிக்கு விண்ணப்பித்து முதலாம், இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகளை பெற்றவர்களுக்கான இறுதிக்கட்ட கொடுப்பனவுக்கான காசோலைகள் செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

சுயதொழில் முயற்சியாளர்கள் எதிர்வரும் 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை செயலகத்திற்கு வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தர் வ.செல்வம் கேட்டுள்ளார். (50-112)


**சர்வதேச இந்துமதகுருபீடத்தின் கண்ணீர்க் காணிக்கை**

"வைதீக கிரியா சாகரம்" சிவஸ்ரீ. சிவசாமிக் குருக்கள் கரகுகவரதக் குருக்கள்

அமரர் வைதீக சிரோன்மணி கரணவாய் சிவஸ்ரீ சிவசாமிக் குருக்களின் மூத்த புதல்வராகிய சிவஸ்ரீ. கரகுகவரதக் குருக்கள் (கலியுகவரதக்குருக்கள்) கடந்த 15.12.2009 அன்று கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னார் எமது பிராமண சமூகத்தின் பூர்வ, அபர க் கிரியைகளை தலைநகரிலே சிறப்பான முறையிலே நிறைவேற்றிய பெருமைக்குரியவர். அன்னாரது ஆத்மா இறைவன் திருவடி நிழலில் சாந்தி பெறுவதாக. மேலும் அன்னாரது பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

(அன்னாரது இறுதிக்கிரியை நேற்று (17.12.2009) வியாழக்கிழமை நடைபெற்றது).

"சர்வதேச இந்துமத குருபீடாதிபதி"
கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸ
சாம்பசிவ சிவாச்சாரியார்,
சர்வதேச இந்துமத குருபீடம் கொழும்பு.

கலாநிதி. சிவஸ்ரீ.சிவ.நித்தியானந்த சிவாச்சாரியார்.
சர்வதேச இந்துமத குருபீட
யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளர்,
சங்கானை.

(இ/563324)



**கண்ணீர் அஞ்சலி**



எமது கல்லூரியில்
கடமையாற்றும்(எழுதுவினைஞர்)
இ.செல்வராசா அவர்களின் மாமி
**திருமதி மனோன்மணி அம்மா**
**நாகநாதன்**
அவர்களின் மறைவையொட்டி அவரது குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
(சி/863327) **கொக்குவில் இந்துக் கல்லூரி.**



**துயர் பகிர்வு**

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் இல.6, வளாக வீதி, திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்த இளைப்பாறிய அதிபரும் பிரசித்த நொத்தாரிசுமாகிய

**உயர்திரு சரவணமுத்து உடையார் புவனசுந்தரம்**

அவர்கள் 15.12.2009 இல் சிங்கப்பூரில் இறைபதம் எய்திய செய்தியறிந்து ஆறாத்துயர் அடைகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்திப்பதுடன் அமரரது மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் எம் துயரையும் பகிர்ந்து கொள்கின்றோம்.

கு.சரவணபவானந்தன்
316,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (91519)

பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.



**3 ஆம் ஆண்டு நினைவுகள்**



**திருமதி நடராசா அழகம்மா**

இகத்தில்: 02.06.1926 பரத்தில்: 22.12.2006

திதி:- துதியை (18.12.2009)

ஆண்டுகள் மூன்று ஆனாலும் அம்மாவே!
உங்கள் நினைவு என்றும் அகலாது
எங்கள் இதயத்தில் என்றும் வாழ்கின்றீர்கள்
ஓம் சாந்தி!

இல.10/2, அம்பகர் லேன்,
பிரம்படி, கொக்குவில்.

(91518)

குடும்பத்தினர்.



**பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி**



அமரர் சின்னத்தம்பி
இராஜலிங்கம் (பூச்சி)

மலர்வு: 15.06.1949 உதிர்வு: 10.12.1999

திதி:- துதியை (18.12.2009)

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமானவரே
பாரில் ஊரார் போற்ற வாழ்ந்த உத்தமரே!
என்றென்றும் உங்கள் நினைவில்

நினைவுடன்
**வே.துரைரத்தினம்** (மச்சான்).

ஆறுகால்மடம், பாடசாலை வீதி,
ஆனைக்கோட்டை. (91523)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவை தோற்கடிக்குமா இலங்கை?



இந்தியா-இலங்கை அணிகளுக் கிடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி இன்று நாக்பூரில் நடைபெறவுள்ளது.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு கிரிக்கெட் விளையாடி வரும் இலங்கை அணி-

முதலில் டெஸ்ட் தொடரை இழந்தது. அதைத் தொடர்ந்து நடந்த 'ருவென்ரி-20' தொடர் சமனிலையானது.

தற்போது 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்றுவருகிறது.

இதில் முதலாவது போட்டியில் கடைசிவரை போராடித் தோற்றது இலங்கைஅணி.

இந்நிலையில் இரண்டாவது போட்டி இன்று நடக்கிறது.

இன்றைய் போட்டியில் இலங்கை அணியில், சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் மற்றும் பெர்னாண்டோ ஆகியோர் காயம் காரணமாக விளையாட மாட்டார்கள் என்பதுடன் ஏனைய போட்டிகளிலும் இவர்களுக்கு இடமில்லை.

இவர்களுக்குப் பதிலாக சுழற்பந்து வீச்சாளர்கள் புஷ்பகுமாரா, சுராஜ் ரண்டிவ் ஆகியோர் அணிக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் மலிங்கவும் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்திய அணியைப் பொறுத்தமட்டில் முதல் போட்டியில் விளையாடிய அதே அணியே விளையாடும் எனத் தெரிகிறது.

இரண்டு அணிகளும் மோதும் இரண்டாவது போட்டியிலும் முதல் போட் டியைப் போல போராட்டங்கள் நிறைந்தே காணப்படும்.

ஏனெனில் இரண்டு அணி வீரர்களும் மிகவும் திறைமையாக விளையாடி வருகின்றர். அந்த வகையில் இன்றைய போட்டியில் இலங்கை அணி முந்தைய போட்டி போன்று எதிரணிக்கு ஓட்டங்களை விட்டுக்கொடுக்காது - தக்க முறையில் பந்துவீச்சாளர்களைப் பயன்படுத்தி ஓட்டக் குவிப்பைக் கட்டுப்படுத்த முயல வேண்டும். அப்போதுதான் இந்தியாவை வீழ்த்த முடியும்.

அதேபோல இந்திய அணியும் தனது சொந்த மண்ணில் இலங்கையை எப்படியா வது தோற்கடிக்கவே முயற்சி செய்யும்.

எனவே, இன்றைய போட்டியிலும் இந்தியாவின் வெற்றிப் பயணம் தொடர்கிறதா அல்லது இலங்கை அணி இந்தியாவைத் தோற்கடித்து வெற்றிப் பயணத்திற்குத் தடை போடுகிறதா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

# இந்தியாவுக்கு பதக்கம் உறுதி-பூபதி

''கொமன் வெல்த் போட்டிகளில் டென்னிஸில் இந்தியா பதக்கம் வெல்வது உறுதி''

- இவ்வாறு இந்தியாவின் டென்னிஸ் வீரரான மகேஸ் பூபதி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கொமன்வெல்த் விளையாட்டுப் போட்டி அடுத்த ஆண்டு டில்லியில் நடக்கவுள்ளது. இப்போட்டியில் முதல் முறையாக டென்னிஸ் போட்டியும் சேர்க்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கூறும்போதே பூபதி இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

''கொமன்வெல் போட்டியில் இந்தியா பதக்கம் வெல்வது ஊறுதி. ஏனெனில், இந்திய அணியில் என்னுடன் முன்னணி வீரர்கள் லியாண்டர் பயஸ், சோம்தேவ் மற்றும் நட்சத்திர வீராங்கனையான சானியா மிர்ஷா ஆகியோர் இடம் பெறுவதால், இந்தியா நிச்சயம் பதக்கம் வெல்லும் என நம்புகிறேன்.'' - என்றார்.

## இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட்:

# கலிஸ் அபார சதம் அடிக்க தென்னாபிரிக்கா 262/4!

செஞ்சுரியன், டிசெ. 18

செஞ்சுரியனில் நேற்றுமுன்தினம் தொடங்கிய இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது டெஸ்டில் கலிஸின் சதத்தால் தென்னாபிரிக்க அணி 262 ஓட்டங்களைக் குவித்தது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடிவருகிறது.

இத்தொடரின் முதலாவது போட்டி செஞ்சூரியனில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

நாணயச் சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி, முதலில் தென்ஆப்பரிக்காவைத் துடுப்பெடுத்தாடப் பணித்தது.

இதன்படி ஆட்டத்தைத் தொடங்கிய தென்னாபிரிக்க அணிக்கு 2ஆவது ஓவரிலேயே அதிர்ச்சி காத்திருந்தது. அணித் தலைவர் ஸ்மித் (0), ஸ்ருவார்ட் பிராட்டின் பந்து வீச்சில் விக்கெட் காப்பாளர் பிரையரிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அதன் பிறகு ஆம்லா (19), பிரின்ஸ் (45) ஆகியோர் சீரான இடைவெளியில் வீழ்ந்தாலும் 3ஆவது விக்கெட்டுக்காகக் களமிறங்கிய கலிஸ் பொறுமையாக நின்று ஆடி அணியை சரிவிலிருந்து மீட்டார்.

மறுமுனையில் கலிஸூக்குத் துணையாக நின்று ஆடிக்கொண்டிருந்த டி வில்லியர்ஸ் 32 ஓட்டங்களைப் பெற்றவேளை ஆட்டமிழந்து சென்றார்.

பின்னர் வந்த டுமினி 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது. களத்தில் உள்ளார்.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்க அணி முதல் இன்னிங்ஸிற்காக 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 262 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இந்தப் போட்டியில் தனது 32ஆவது டெஸ்ட் சதத்தை நிறைவு செய்த கலிஸ் 112 ஓட்டங்களுடன் (203 பந்துகள், 14 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) கடைசி வரை களத்தில் இருந்தார்.

இங்கிலாந்து அணி சார்பாக பந்துவீச்சில், ஸ்வான் 2 விக்கெட்டுகளையும், ஒனியன்ஸ், பிராட் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினர்.

விளையாட்டு அரங்குகளில்

# பெல்ஜியம் டென்னிஸ் வீராங்கனை விக்மேயர் மீதான தடை நீக்கம்!

பெல்ஜியத்தின் முன்னணி டென்னிஸ் வீராங்கனையான விக்மேயர் மற்றும் சகநாட்டு வீரரான சேவியர் மலிஸ்சி ஆகியோருக்கு எதிராக, ஊக்கமருந்து விதி முறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டின் பேரில் டென்னிஸ் விளையாடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை தற்போது நீக்கப்பட்டுள்ளது.

ஊக்கமருந்து விதிமுறைகளை மூன்று தடவைகள் மீறியமையால் பெல்ஜியத்தின் முன்னணி டென்னிஸ் வீராங்கனையான விக்மேயர் மற்றும் சக நாட்டு வீரரான சேவியர் மலிஸ்சி ஆகியோருக்கு சர்வதேச டென்னிஸ் சம்மேளனம் ஓராண்டு தடை விதித்திருந்தது.

இதனை எதிர்த்து அவர்கள் உள்ளூர் நீதிமன்றில் மேன்முறையீடு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து அவர்கள் மீதான தடைக்கு நீதிமன்றம் தடை விதித்துள்ளது. இதையடுத்து சர்வதேச டென்னிஸ் சம் மேளனமும், உலக ஊக்கமருந்துத் தடுப்புக் கழகமும் இது குறித்து ஆலோசனை நடத்தின.

இதில், அவர்கள் இருவர் மீதான தடையை நீக்குவது என்று முடிவு செய்யப்பட்டது. அவர்கள் உடனடியாக சர்வதேச போட்டிகளில் பங்கேற்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. விக்மேயர் அமெரிக்க ஓபனில் அரை யிறுதி வரை முன்னேறியவர் என்பது குறிப்படத்தக்கது.

# கொபன்ஹேகன் ஊர்வலத்தில் வன்முறை பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம்




கொபன்ஹேகன், டிச. 18

கொபன்ஹேகன் புவிவெப்ப மாற்றத் தடுப்பு மாநாட்டு அரங்கை நோக்கி ஊர்வலமாகச் செல்ல முயன்றவர்களைப் பொலிஸார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசிக் கலைத்தனர். அதேவேளை, வன்முறையில் ஈடுபட்ட 100 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதுகுறித்து பொலிஸ் செய்தித் தொடர்பாளர் குறிப்பிடுகையில், ''பெல்லா சென்டர் ரயில் நிலையம் அருகே பேரணியாகக் கிளம்பியவர்கள் கைதுசெய்யப்பட்டனர். பலர் கலைய மறுத்ததால் கண்ணீர்ப்புகைக் குண்டுகள் வீசப்பட்டன. பொலிஸாரின் நாய்ப் படையும் இந்தப் பணியில் பயன்படுத்தப் பட்டது. கிட்டத்தட்ட 100 பேர் கைது செய்யப்பட்டனர்'' என்றார்.

இந்த பல்லா சென்டரில்தான் புவிவெப்ப மாற்றத் தடுப்பு மாநாடு நடந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் பேரணியில் கலந்து கொள்ள வந்தவர்கள், புவிவெப்ப மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து மாநாடு அதிகம் கவலைப்படவில்லை. இதற்கு மாறாக தேவையில்லாதவை குறித்து அதிகம் பேசித் தீர்த்து வருகிறது எனக் குற்றஞ்சாட்டினர்.

ஆயிரக்கணக்கான சுற்றுச்சூழலியலாளர்கள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றஞ்சாட்டினர்.

கொபன்ஹேகனுக்கு வெளியே உள்ள தார்ன்பி என்ற புறநகர்ப் பகுதியிலிருந்து ஊர்வலமாக இவர்கள் முதலில் கிளம்பினர். கிளைமேட் ஜஸ்டிஸ் ஆக்ஷன் என்ற அமைப்பு இந்தப் பேரணிக்கு ஏற்பாடு செய்திருந்தது. இந்த ஊர்வலத்தில் கிட்டத்தட்ட ஆயிரம் பேர்வரை பங்குபற்றியிருந்தனர்.

கொபன்ஹேகனில் காலநிலை குறித்த மாநாட்டு மண்டபத்தில் நுழைய முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது டென்மார்க் பொலிஸார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்.

மாநாடு நடந்த இடத்துக்கு அருகிலுள்ள தடைகளை உடைத்துக்கொண்டு வருவதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் முயன்றனர். அப்போது பெரும் இழுபறி ஏற்பட்டது. இதன் காரணமாக அந்தக் கட்டடம் ஒரு மணிநேரம் வரை மூடப்படும் நிலை உருவானது.

காலநிலைக்கான நீதி என்ற பெயரில் வறிய நாடுகளுக்கு அதிக பணம் வழங்கப் படவேண்டும் என்று கோரி ஆர்ப்பாட்டக்காரர்களால் டென்மார்க்கின் தலைநகரில் பல ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

உலக அரங்கில்

# போர்த்துக்கல், ஸ்பெயின், மொராக்கோவில் பூகம்பம்

மாட்ரிட், டிச. 18

போர்த்துக்கல், ஸ்பெயின், மொராக்கோ ஆகிய நாடுகளில் நேற்று வியாழக்கிழமை அதி சக்திவாய்ந்த பூகம்பம் ஏற்பட்டது. இதனால் இந்த நாடுகளில் பல பாகங்கள் குலுங்கின.

ஸ்பெயினில் ஏற்பட்ட பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.3 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது. இந்தப் பூகம்பத்தால் ஏற்பட்ட பாதிப்புக் குறித்து உடனடித் தகவல் வெளியாகவில்லை.

உள்[illegible] நேரப்படி அதிகாலை 2.37 மணி[illegible]ற்கு போர்த்துக்கலின் கேப் செ[illegible]ன்செண்ட் பகுதியிலிருந்து 100 கி[illegible]ர் தொலைவில் அட்லான்டிக் கட[illegible]கம்பம் ஏற்பட்டது. கடலுக்குள் 58 கி[illegible]ற்றர் ஆழத்தில் பூகம்பம் ஏற்பட்டது.

இந்தப் பூகம்பத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.7 புள்ளிகளாகப் பதிவாகியுள்ளது என அமெரிக்க பூகர்ப்பவியல் கழகம் தெரிவித்துள்ளது. கடலுக்குள் 10 கிலோமீற்றர் ஆழத்தில்தான் இந்தப் பூகம்பம் ஏற்பட்டுள்ளது என்றும் அமெரிக்க நிபுணர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ஸ்பெயினின் செவில்லி, கோர்டோபா, ஹூல்வா ஆகிய [illegible] ரப்பட்டது. பூகம்[illegible] ரகால சேவையாளாகள் முடுக்கிவிடப்பட்டனா.

## ஆங் சான் சூகி தமது கட்சியின் 3 தலைவர்களைச் சந்தித்தார்

நீண்டகால வீட்டுக்காவலில் இருந்து வரும் பர்மிய எதிர்க்கட்சித் தலைவி ஆங் சான் சூகி அவரது தேசிய ஜனநாய[illegible] கட்சியின் மூத்த மூன்று தலைவர்களை சந்தித்துப் பேசினார். சுகவீனமுற்றிருக்கும் இந்த மூவரையும் சந்தித்துப் பேச்சுகள் நடத்த ஆங் சான் சூகிக்கு அவரது வீட்டிலிருந்து சிறிது நேரம் வெளியே செல்ல அனுமதி தரப்பட்டது.

அவர் சந்தித்த மூவரில் ஒருவரான யூ ல்வின் என்ற தலைவர், கட்சியின் செயற்குழுவை மாற்றியமைக்க தங்களது அனுமதியை ஆங் சான் சூகி கோரினார் என்று தெரிவித்தார். சற்றேறக்குறைய இரண்டாண்டுகளில் மேற்கொள்ளப்படும் முதல் சந்திப்பு இதுவாகும்.

# அடிக்கடி 'சிடி ஸ்கான்' எடுப்பதால் புற்றுநோய் அபாயம் அதிகரிப்பு

சான்பிரான்ஸிஸ்கோ, டிச. 18

அடிக்கடி எக்ஸ்ரே மற்றும் 'சிடி ஸ்கான்' எடுப்பதால் புற்றுநோய் ஏற்பட அதிக வாய்ப்பு உள்ளது என அமெரிக்காவில் நடந்த ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன. சான்பிரான்ஸிஸ்கோவிலுள்ள கலிபோர்னியோ பல்கலைக்கழகம் 'சிடி ஸ்கான்' மூலம் வெளியாகும் எக்ஸ்ரே கதிர்களின் அளவை மதிப்பிட்டுள்ளது.

ஒரேமாதிரியான தொழில்நுட்பத்தை பயன்படுத்தினாலும் ஒவ்வொரு சிடி ஸ்கேன் இயந்திரமும் வித்தியாசமான அளவில் எக்ஸ்ரே கதிர்களை வெளிப்படுத்துகின்றது.

ஒரே வைத்தியசாலையில் உள்ள 'சிடி ஸ்கான்' இயந்திரங்களுக்கிடையில் வெளியாகும் எக்ஸ்ரே கதிர்களைப் பொறுத்தமட்டில் 13 மடங்கு வித்தியாசம் உள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. சில நோயாளிகளுக்கு இந்த அளவு பெரிதும் அபாயகரமாக அமையக் கூடும் என அந்த ஆய்வு தெரிவிக் கிறது.

எக்ஸ்ரே [illegible], 'சிடி ஸ்கான்'களால் [illegible] ஆகியவை குறித்து ஏராளமான ஆய்வுகள் வெளிவந்துள்ளன. மிக அதிகமான எக்ஸ்ரே கதிர் வீச்சுக்கு ஆளாகும் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் புதிய புற்றுநோயாளிகளாக மாறும் அபாயம் இருப்பதை அந்த ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. ஓராண்டில் சுமார் 15 ஆயிரம் பேர் புற்றுநோயால் உயிரிழக்கக்கூடும் எனவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த 'சிடி ஸ்கான்'கள் மூலம் ஒருமுறை ஸ்கேன் எடுக்கும்பொழுது வெளிப்படும் எக்ஸ்ரே கதிர்களை மட்டும் வைத்துப்பார்த்தால் பாதிப்பு மிகமிகக் குறைவாகவே தோன்றும். ஆனால், 'சிடி ஸ்கான்'களின் எண்ணிக்கையும் அவற்றின் மூலம் கிடைக்கும் எக்ஸ்ரே கதிர்களையும் கூட்டிச் சேர்த்து பார்த்தால் மட்டுமே அபாயம் தெரியும். உலகில் ஓராண்டில் மட்டும் 7 கோடி சிடி ஸ்கேன்கள் புதிதாகச் சேர்க்கப்படுகின்றன என புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

இந்நிலையில், அவற்றின் மூலம் வெளியாகும் எக்ஸ்ரே கதிர்கள் புற்றுநோயாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்கின்றன. அதன் விளைவாக இறப்புகளும் அதிகரிக்கின்றன என ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். சுண்டிக்குளி மகளிர் உயர்தரப் பாடசாலை பெண் சாரணியர்களுக்கான விசேட வழிகாட்டல் செயலமர்வு அண்மையில் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

இந்த நிகழ்வில் மலேசியப் பெண் சாரணிய அமைப்பின் சர்வதேச ஆணையாளர் ஜெயதேவி சுப்பிரமணியம் செயலமர்வில் உரையாற்றுவதை முதற்படத்திலும், யாழ்.மாவட்டப் பெண் சாரணிய அமைப்பின் ஆணையாளர் திருமதி நீ.தர்மகுலசிங்கம், சர்வதேச ஆணையாளர் ஜெயதேவி, கல்லூரியின் பெண் சாரணியத்தின் பொறுப்பாசிரியர்கள் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும், நிகழ்வில் கலந்துகொண்ட பெண் சாரணியர்களையும் அடுத்துள்ள இரு படங்களிலும் காணலாம். (படங்கள்: உமா, சுகந்தன்)

# தேசியக் கல்வியியற் கல்லூரிகளுக்கான அனுமதி; நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விவரம்

தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு 2010 ஆம் கல்வியாண்டுக்கு புதிய மாணவர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக, விசேட கல்வி, சித்திரம், இஸ்லாம் ஆகிய பாடங்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியில் நடைபெறும் எனவும், இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் அட்டாளைச்சேனை கல்வியியற் கல்லூரியால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் அறிவித்துள்ளார்.

இப்பாடங்களுக்கு அழைக்கப்பட்டோர் விவரம் வருமாறு:-

**விசேட கல்வி**

எம்.மகாலக்சுமி-சுன்னாகம், எஸ்.செல்லத்துரை-புலோலி வடக்கு, பி.கீர்த்திகா-இணுவில்கிழக்கு, கே.மகிபன்-சங்கானை, என்.பாமிலா-புத்தூர், ஆர்.வினிதா- ஊரெழு வடக்கு, கே.தன்சிகா - புறூடி முன் ஒழுங்கை, கே.குகப்பிரியா-நெடுந்தீவு, கே.ஜங்கரன்-கரணவாய், இ.சுவீதி- சண்டிலிப்பாய் மேற்கு,

கே.தயாநிதி-ஆனைக்கோட்டை, ரி.பமிலா-மல்லாகம், ரி.சிவகரன்-சங்கானை, கே.அஜந்தினி-வட்டு. தென்மேற்கு, கே.கமல்-பருத்தித்துறை, எஸ்.கஜனி-நாவற்குழி, ரி.சுப்பிரமணியம்- அரியாலை, கே.புனிதா-பண்டத்தரிப்பு, என்.செந்தாழன்-கன்பொல்லை, கே.உதயராஜ்-வேலணை கிழக்கு, ரி.மோகனதாஸ் - தொல்புரம் மத்தி, ஜி.தனுசன்-மீசாலை,

எஸ்.சுஜீவன்-அச்சுவேலி, ஜி.நிலானி-பருத்தித்துறை, ரி.சுந்தரேசன்-மல்லாகம், எஸ்.பிரமானந்தன்-சாவல்கட்டு, எம்.இராசரட்ணம்-நெல்லியோடை அம்மன், எஸ்.தினேஷா-ஈவினை கிழக்கு, எம்.சுரிதா-துன்னாலை, ரி.பிறைசூடி-அச்சுவேலி, கே.சுதாகரன்-சுழிபுரம், எஸ்.சுஜிதரன்-உரும்பிராய், எஸ்.கிருஷ்ணவரன்- காரைநகர், கே.பிரசாந்தன்-கோண்டாவில்,எம்.விமல்ராஜ்- நெடுந்தீவு,

எஸ்.ஆனந்தராஜா- பருத்தித்துறை, ரி.சுரேகா-சுழிபுரம் கிழக்கு, ரி.கோபிநாத்-யாழ், கே.தனபாலசிங்கம் -ஏழாலை, என்.ஜே.ஜே.ரொபேட்-யாழ், ரி.வனஜா-நாவற்குழி, ரி.சுஜிதா -வல்வெட்டித்துறை, எஸ்.சிவாஜினி-புலோலி தெற்கு, பி.ஜெனனி-நுணாவில் மத்தி,

எஸ்.மேரி ஜன்சி-யாழ், பி.தாரணி-மட்டுவில், ரி.கேமினி-ஏழாலை தெற்கு, ரி.கேதீஸ்வரன் - சுன்னாகம், யு.கர்ணிகா-முருகன் கோவிலடி, ரி.அசோக் குமார்-சுதுமலை, ரி.லட்ஷாலினி-யாழ், என்.செளமியா- புதியவீடமைப்புத்திட்டம், எஸ்.விபூஷணி -யாழ், எஸ்.சிவனேஸ்வரன்- நாவலடி,

எம்.வசந்தரூபன்-யாழ், ரி.பாமினி-நெல்லியடி, ஆர்.ரகுதாஸ் - அல்வாய் தெற்கு, ஆர்.மயூரிகா - கரவெட்டி, என்.சிவசுப்பிரமணியம்-துன்னாலை, கே.அனோஜன் - கைதடி தெற்கு, ரி.பிரபு-யாழ், ரி.ரமணி-இமையாணன், பி.சிவராஜினி-யாழ், ஜி.கிரிஸ்ரில்லா-அளவெட்டி, எஸ்.ரஜீந்தன்-அல்வாய், ஜீ.பூஜெனி -சுழிபுரம், வி.லவப் பிரியா- நாவற்குழி, என்.டிலானி-கொக்குவில் மேற்கு, எஸ்.ஜனார்த்தனி-புத்தூர், பி.நர்மதா-யாழ், வி.பிரதீபா-யாழ், ரி.எழிலரஸ்ற்-கரணவாய்,ஆர்.கஜலக்ஷி-யாழ்,

**கலை**

ரி.சிவகரன்-சங்கானை, கே.பிரதீசன்-நவாலி தெற்கு, கே.பாலகுமார்-பத்தானை, ஆர்.அபினேஸ், கியூ.ஜெயராஜன், என்.கிருஸ்ணரூபன்-மூளாய், எஸ்.சுதாகரன்-சுழிபுரம், எஸ்.குமணனாத் -வேலணை, எஸ்.சகாயநாதன்-யாழ், எஸ்.நிகாந்- புத்தூர், கே.கருணாகரன்-யாழ்,ஆர்.ஜெயசுகந்தி -தொண்டைமானாறு,

எம்.மனோ ரஞ்சன் - வல்வெட்டித்துறை,ஜே.ஆனந் - நெடுந்தீவு, ஜே.செளந்தரசிங்கி-யாழ்., ரி. லிங்கேஸ்வரன்- பண்ணாகம், ரி.றஜீவ் -உரும்பிராய் கிழக்கு, ரி.தனபாலன்- தொல்புரம், ஜே. பிரேமலால்-சாவகச்சேரி, வி. சுபாஸ்கரன் - பண்டத்தரிப்பு, எஸ்.அருணன்-இணுவில் மேற்கு, பி.சுதர்சன்- கரணவாய்,

எம். வைதேகி - பொலிகண்டி மேற்கு, எஸ்.ரவிவர்மன் இணுவில் தெற்கு, ஆர்.சுரேந்தர் - ஊரெழு, ஏ.நிஷாந்தன் - உரும்பிராய் கிழக்கு, ஜீ.ராஜேந்திரம், ஜே.நீலபாமினி - யாழ், கே.பிரதீபன் - அளவெட்டி மேற்கு, கே.பிரதீப்- யாழ். , ஆர். சோதிலிங்கம்-தாவடிதெற்கு, எம். மஞ்சுளா -உடுப்பிட்டி, எஸ்.சுந்தரலிங்கம் -யாழ்., எஸ்.உதயகுமாரன் - கொக்குவில் மேற்கு, ரி.பி.கண்ணன் - கந்தர்மடம், ஜே. சஞ்ஜீபன்-புத்தூர், எம். செலிஸ்மதி- தொண்டைமானாறு, வி.மால்மருகன் - வளலாய், எஸ்.ஆரூரன் - இணுவில் கிழக்கு, கே.ராகுலன்- குப்பிளான், ஆர். தனுஸ்காந் - யாழ்., வை. தர்மினி-யாழ்.கே.விஜிகரன் - உரும்பிராய், கே.ரவிந்திரதாசன் - யாழ்., எஸ்.றஜீபன் - கோப்பாய், வி. சுதர்சன், உரும்பிராய் தெற்கு,

என். நரோஜன் - மலையன்தோட்டம், எஸ்.தவேந்திரன் - இணுவில் கிழக்கு, எ.பாலசிங்கம் அல்வாய் தெற்கு, இ.அனுசன்-தாவடிவடக்கு, கே.மருஜனா, கே.மனோகரன் - தாவடிதெற்கு, எஸ்.கஜந்தன் - உடுவில் தெற்கு, எஸ்.சிந்துஜா - உதயசூரியன் வீதி, எஸ்.பிரசன்னா - மல்லாகம், எஸ்.சுலோசனா - யாழ்., கே.கனகசிங்கம் சாவகச்சேரி

**இஸ்லாம்**

எம்.எம்.ஜெயோபா - நயினாதீவு, கே.தர்மினி- மாதகல்,

## தந்தை செல்வாவின் சமாதிக்கு தமிழரசுக்கட்சி இன்று மலரஞ்சலி

யாழ்ப்பாணம்,டிசெ.18

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 60 ஆவது ஆண்டு நிறைவையொட்டி, தமிழரசுக் கட்சியின் ஸ்தாபகரும், ஆரம்ப காலத் தலைவருமான தந்தை செல்வாவின் சமாதிக்கு தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் மலரஞ்சலி செலுத்தவுள்ளனர்.

இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி கட்சியின் மாவட்டக் கிளையினர் கேட்டுள்ளனர். (ஒ-4)

# ஸ்ரீலங்கா மக்கள் கட்சிக்கிளை அலுவலகம் மருதனார்மடத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.18

ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் கிளை அலுவலகங்களில் ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் மருதனார்மடம் சந்திக்கு அண்மையில் திறந்து வைக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசாரப் பணிகளுக்காக இந்த அலுவலகம் திறந்து வைக்கப்படுவதாக அதன் யாழ். மாவட்ட அமைப்பாளர் திலக்குமார உடுகம தெரிவித்தார்.

தமது கட்சியின் பிரதான அலுவலகம் 83, வேம்படி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் 10 கிளை அலுவலகங்கள் விரைவில் திறந்து வைக்கப்படும் எனவும் அவர் கூறி னார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வெற்றி பெறச் செய்தவற்காகத் தாம் யாழ்ப்பாணத்தில் அலுவலகங்களைத் திறந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவுள்ளதாகவும் திலக்குமார உடுகம தெரிவித்தார்.

(ஒ-50)

# கைதடி, இராமாவில் முகாம் மக்களுக்கு உப உணவுப் பொருள்கள் விநியோகம்

வண்ணை, டிசெ.18

கைதடி, பனைவள நிலைய மற்றும் கொடிகாமம் இராமாவில் நலன்புரிநிலையங்களில் தங்கியிருக்கும் குடும்பங்களைச் சேர்ந்த 1868 உறுப்பினர்களுக்கும் கரித்தாஸ் நிறுவனம் தினமும் உப உணவுப் பொருள்களை விநியோகித்து வருகிறது.

கடலுணவு, மரக்கறி வகைகள் மற்றும் தேங்காய், மிளகாய்த்தூள், உப்பு, வெங்காயம் என அரிசியைத் தவிர்ந்த ஏனைய உப உணவுப் பொருள்களையும், கரித்தாஸ் - கியுடெக் நிறுவனம் வழங்கி வருகிறது.

இராமாவில் நலன்புரி நிலையத்தில் ஆயிரத்து 403 பேரும் கைதடி நலன்புரி நிலையத்தில் 465 பேரும் தற்சமயம் தங்கியுள்ளனர்.


இவர்களுக்கு உப உணவுப் பொருள்கள் வழங்க மாதமொன்றுக்கு [illegible] ஆயிரம் ரூபா செலவு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஒ-160)

# மரண அறிவித்தல்

## இரத்தினம் ஜெயரட்ணசிங்கம்

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், சென். மேரிஸ் மகா வித்தியாலயம் (O.L.R.), யாழ். மத்திய கல்லூரி)



யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் ஜெயரட்ணசிங்கம் கடந்த செவ்வாய்க்கிழமை (15.12.2009) காலமானார்.

அன்னார் ஜெயரஞ்சினியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - அன்னலஷ்மி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான இராசதுரை - திரவியம் தம்பதியரின் மருமகனும் ஜனாளினி, மகிந்தன்(பிரான்ஸ்), தர்சிகா, பாலினி, ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வநாயகம், பால்ராஜ், இராசநாயகம் (டென்மார்க்), தையல்நாயகி, ஆகியோரின் சகோதரனும் தங்கராஜா (இளைப்பாறிய அதிபர்), விஜயபாஸ்கரன் (பிரான்ஸ்), ஜெகமலர், ஞானகுலேந்திரன் (பிரான்ஸ்), சந்திரசேகரன், ஜெயகுமாரி (கனடா), வசந்தகுமாரி (பிரான்ஸ்), தயானந்தன் அருள்நேசராணி, சற்குணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.12.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல்ல முகவரி :
173,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

(91542)

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். குடா நாட்டில் வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்து அவலப்படும் மக்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுமுன்தினம் பல இடங்களுக்கும் சென்று பார்வையிட்டார். அவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்குவதற்குரிய ஏற்பாடுகளையும் அமைச்சர் துரிதப்படுத்தினார்.
வல்வெட்டித்துறை, பருத்தித்துறை மற்றும் வடமராட்சி கிழக்கு பகுதிகளில் இடம்பெயர்ந்து தங்கியுள்ள மக்களைச் சந்தித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு உணவுப் பொதிகளை வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஒ)

# போக்குவரத்துக் கட்டுப்பாடுகளில் மேலும் தளர்வு இன்று முதல் பஸ்கள் தொடர் அணியின்றி புறப்படும்

## இடையிடையே சோதனை நடவடிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.18

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கும், வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான போக்குவரத்தில் உள்ள கட்டுப்பாடுகள் மேலும் தளர்த்தப்பட்டுள்ளன.

இன்று வெள்ளிக்கிழமை முதல் புதிய ஏற்பாடுகள் நடைமுறைக்கு வருகின்றன என்று யாழ்.அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ்.நகரில் இருந்து புறப்படும் போக்குவரத்து சபை பஸ்கள் யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் இருந்தும் சகல தனியார் பஸ்களும் தனியார் பஸ் நிலையத்திலிருந்தும் தொடரணி சேவையின்றி புறப்படும்.

பஸ்களில் பயணிகள் ஏற்றப்பட்டவுடன் நேரடியாக ஏ - 9 பாதையூடாக வெளி மாவட்டங்களுக்கு பயணத்தை மேற் கொள்ளலாம்.

எனினும் இவ்வீதியால் பயணிக்கும் வாகனங்கள் தேவைக்கேற்ப இடையிடையே இராணுவ சோதனைச் சாவடிகளில் பரிசோதனைக்காக நிறுத்தப்படும்.

இன்று முதல் நடைமுறைக்கு வரும் ஏனைய ஏற்பாடுகள் வருமாறு

*ஏ - 9 பாதையூடாக யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தனியார் வாகனங்கள் உட்பட சகல வாகனங்களும் காலை 6 மணியிலிருந்து பிற்பகல் 4 மணிவரை கட்டுப்பாடுகள் இன்றி பயணத்தை மேற் கொள்ள முடியும்.

*வவுனியா மற்றும் ஏனைய மாவட்டங்களில் இருந்தும் காலை 6.00 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை கட்டுப்பாடுகள் இன்றி யாழ்ப்பாணத்திற்கு பயணத்தை மேற்கொள்ளலாம்.

*யாழ்ப்பாணத்திற்கு பொருள்களை ஏற்றி வருதல் மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து பொருள்களை வெளிமாவட்டங்களுக்கு ஏற்றி செல்லும் வாகனங்கள் தொடர்பான நடைமுறை தற்போது நடைமுறையில் உள்ளவாறு நாவற்குழிக்களஞ்சியத்தில்பதிவுகளை மேற்கொண்டு தொடரணிச் சேவையில் தமது பயணத்தை மறு அறி வித்தல் வரை மேற்கொள்ளமுடியும்.

*இப்பாதையில் பயணத்தை மேற் கொள்ளும் சகல வாகன சாரதிகள் , நடத்துநர்கள், உதவியாளர்கள், பயணிகள், யாவரும் இச்செயற்பாட்டிற்கு தங்களது பூரண உத்துழைப்பை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

*இத்தகவல் யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியினால் நேற்று மாலை யாழ். மாவட்ட அரசாங்க அதிபருக்கு தெரியப் படுத்தப்பட்டது.

# தென்மராட்சியில் அடை மழையால் மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளில் தஞ்சம்

யாழ்ப்பாண ம்,டிசெ.18.

தென்மராட்சிப் பிரதேசத்தில் அடைமழை காரணமாக 49 குடும்பங்களைச் சேர்ந்த 179 பேர் தமது சொந்த இருப்பிடங்களை விட்டு வெளியேறி பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர்.

நேற்று நண்பகல் வரை கிடைத்த தகவல்களின்படி குடமியன் அ.த.க. பாடசாலை, கொடிகாமம் தனியார் கல்வி நிறுவனம், போக்கட்டி அ.த.க. பாடசாலை, போக்கட்டி கண்ணகை அம்மன் கோவில், போக்கட்டி றோ.க.த.க. பாடசாலை ஆகியவற்றில் இந்தக் குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன என்றும் இவர்களுக்கு சமைத்த உணவு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, குடமியன், மிருசுவில், கொடிகாமம் மத்தி, கொடிகாமம் வடக்கு, தவசிகுளம் ஆகிய பகுதிகளில் 150 இற்கு மேற்பட்ட வீடுகள் பகுதி சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், இவற்றின் குடியிருப்பாளர்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியுள்ளதாகவும், அந்தந்தப்பிரிவு கிராம அலுவலர்கள் அறிவித்துள்ளனர்.

# இரத்தம் வடிந்து காய்ந்த நிலையில் பெண்ணின் சடலம் சுண்டுக்குளியில் மீட்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.18

அரியாலை வடக்கு, சுண்டுக்குளிப் பகுதியில் தனியாக வசித்து வந்து பெண் ஒருவர் மர்மமான முறையில் இறந்து கிடக்கக் காணப்பட்டார். இறந்தவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் அவரது வீட்டில் இருந்து மீட்கப்பட்டது. அந்தப் பெண் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

திருநாவுக்கரசு சற்குணவதி (வயது57) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார். இச்சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது,

இறந்த பெண்ணின் வீட்டுச் சூழலில் துர்நாற்றம் வீசியதை அடுத்து அயலவர் அங்கு சென்று பார்த்துள்ளனர். அங்கே பூட்டிய அறையினுள் தலை, கழுத்துப் பகுதிகளில் இருந்து இரத்தம் வடிந்து காய்ந்த நிலையில் விரிப்பினால் போர்த்திய நிலையில் சடலம் காணப்பட்டது.

சடலம் துர்நாற்றம் வீசியதிலிருந்து மூன்று, நான்கு நாள்களுக்கு முன்னரே அவர் இறந்திருக்கலாமேன சந்தேகிக்கப் படுகிறது.

அந்தப் பெண் அணிந்திருந்த நகைகளையும் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.சடலம் பிரேத பரிசோதனைக் காக யாழ். போதனா வைத்திய சாலையில் பொலிஸாரினால் நேற்று ஒப்படைக் கப்பட்டது. (ஒ-7)

## இடம் பெயர்ந்த வாக்காளருக்கு

யாழ்ப்பாணம்.டிசெ.18

வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்துள்ள வாக்களர்கள் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் நாள் எதிர் வரும் 24 ஆம் திகதி வரை நீடிக்கப்பட் டுள்ளது என்று தேர்தல்கள் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்தவர்கள் வாக்களிக்க விண்ணப்பிக்கும் திகதி நேற்றுடன் உத்தி யோக பூர்வமாக முடிவடைந் திருந்தது. (ஒ)

## வாசனா சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு, டிசெ.18

தேசிய லொத்தர் சபையின் 'வாசனா சம்பத' 798 ஆம் இலக்க நேற்றைய சீட்டிழுப்பில் 'C' என்ற ஆங்கில எழுத்தும் 13, 20, 35, 58 ஆகிய இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாக தேர்ந்தெடுக் கப்பட்டுள்ளன.

இலக்கம் 49 போனஸ் இலக்கமாகத் தெரிவாகியது. இதன் பிரகாரம் சுப்பர் பரிசு வெல்லப்படவில்லை.

நான்கு இலக்கக்களையும் சரியாக குறிப்பிட்ட ஒருவருக்கு முதலாம் பரிசாக இரண்டு மில்லியன் ரூபா கிடைக்கும்.

போனஸ் இலக்கத்தையும் 3 இலக்கங்களையும் சரியாக எழுதிய 5 பேருக்கு ஒரு லட்சம் ரூபா வீதம் பரிசுகள் வழங்கப்படும்.

மூன்று இலக்கங்களை மட்டும் சரியாக எழுதிய 321 பேருக்கு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் பரிசுகள் வழங்கப்படும்.

இரண்டு இலக்கங்களை மட்டும் சரியாக எழுதிய 15,123 பேருக்கு தலா 100 ரூபாவீதம் பரிசுகள் வழங்கப்படும்.

ஒரு இலக்கத்தை மட்டும் சரியாக எழுத்திய 2,12,483 பேருக்கு தலா 20 ரூபா வீதம் பரிசுகள் கிடைக்கும் . (அ-10)

# விளையாட்டுத்துறை பிரதி அமைச்சர் அர்ஜுன சரத்பொன்சேகா பக்கம் பாய்ந்தார்

கொழும்பு, டிசெ. 18

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எம்.பியும் உலகக் கிண்ணம் வென்ற இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவருமான அர்ஜுன ரணதுங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்க முன்வந்துள்ளார்.

ஸ்ரீலங்க[illegible]தந்திரக் கட்சியில் இருந்து கொண்[illegible]ான்சேகாவின் வெற்றிக்காகப் பா[illegible]போவதாக நேற்று அவர் கூறி[illegible]

[illegible]சிகளின் பொது வேட்பாளர் சரத் [illegible]சேகா, ஐக்கிய தேசியக் கட்சி[illegible]தித் தலைவர் கரு ஜயசூரிய மற்றும் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோருடன் இணைந்து அர்ஜுன நேற்று கொழும்பில் சரத் பொன்சேகாவின் ஊடக மத்திய நிலையத்தில் ஊடகவியலாளர் களைச் சந்தித்து உரையாற்றினார்.

அங்கு அவர் கூறியவை வருமாறு:-

''ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்காக - அவர்களைக் காப்பாற்றுவதற்காக - நான் இத்தேர்தலில் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்கு முன் வந்துள்ளேன்.

''கட்சியில் அமைச்சுப் பதவிகளால் பாதிக்கப்பட்டோ அல்லது வேறு ஏதேனும் காரணங்களாலோ நான் இந்த முடிவை எடுக்கவில்லை. ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி உறுப்பினர்களுக்காகவே இம் முடிவை எடுத்தேன்.

''தற்போது வரைக்கும் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினன். அக்கட்சியில் இருந்துகொண்டே நான் பொன் சேகாவிற்கு ஆதரவை வழங்குவேன். நாட்டின் ஊழல், மோசடிகளை பொன் சேகா இல்லாதொழிப்பார் என்று நான் நம்புகிறேன்'' - என்றார்.

''ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டே தொகுதி அமைப்பாளராக உங்களை நியமிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இது உண்மையா?'' - என்று ஊடகவியலாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

''பல கட்சிகளிடமிருந்து பல அழைப்புகள் வந்துள்ளன'' - என்று பதிலளித்தார் அர்ஜுன ரணதுங்க. தற்போதுவரை தாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஓர் உறுப்பினன் என்றும் நாளை இதில் மாற்றம் எதுவும் ஏற்படலாம் என்றும் அவர் சொன்னார்.

## இந்து மாணவரின் அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம்,டிசெ.18

ஜி.சீ.ஈ. சாதாரணதர மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பப் பரீட்சை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற வுள்ளது.

இந்தப் பரீட்சையில் தோற்றவுள்ள யாழ். இந்துக்கல்லூரி மாணவர்கள் தமக்குரிய அனுமதி அட்டைகளை இன்று காலை 9 மணிக்குக் கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அதிபர் தெரிவித்துள்ளார். (ஒ-10)

## கலந்துரையாடல்

இனிய வாழ்வு இல்லத்தை மீளமைப்பதற்கான கலந்துரையாடல் நாளை சனிக் கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சமூகவியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த கலந்துரையாடலை இனிய வாழ்வு இல்லத்தை மீளமைக்க முனைவோர் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். (ஒ-10)

## தீவகத்தில் தற்காலிக ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவை

ஊர்காவற்துறை, டிசெ.18

வவுனியா நலன்புரி நிலையங்களில் இருந்து விடுவிக்கப்பட்டு தீவக கல்வி வலயத்தில் தற்காலிக இணைப்புப் பெற்றுள்ள ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைக் கொடுப்பனவு தீவக வலயத்தினால் தற்பொழுது வழங்கப்பட்டு வருகிறது.

எனவே சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் வங்கிக் கணக்கு இலக்கத்துடன் உடனடியாக வலய அலுவலகத்திற்கு வருமாறு கணக்காளர் எஸ். பரதன் அறிவித்துள்ளார்.

## இரு ஞாயிறு தினங்கள் சிகை அலங்கரிப்பு நிலையங்கள் திறப்பு

நத்தார் புதுவருட தினங்களை முன்னிட்டு எதிர்வரும் 20 ஆம், 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைகளில் சிகை அலங்கரிப்பு நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதிக்கப் பட்டிருப்பதாக வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கத் தலைவர் அ.அல்பேட் தெரிவித்துள்ளார். (ஒ-160)

## ஒளி விழா

யாழ்ப்பாணம்,டிசெ.18.

யாழ்ப்பாணம் முத்திரைச்சந்தியில் அமைந்துள்ள நாற்சதுர சுவிஷேச சபை நடத்தும் ஒளிவிழா இன்று வெள்ளிக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு சுவிஷேச வளாகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தின் பல இடங்களைச் சேர்ந்த சிறுவர்களது கலைநிகழ்வுகள் ஒளி விழாவில் இடம்பெறவுள்ளன. (ஒ-78)

## குடத்தனையில் மீனவர் சமாசத் தலைமையகம் இன்று திறப்பு


வடமராட்சி,டிசெ.18

குடத்தனையில் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் தலைமை அலுவலகம், கெருடாவிலில் பல நோக்கு மண்டபம், தையல் பயிற்சி நிலையம் ஆகியன இன்று வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படுகின்றன.

சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா இவற்றைத் திறந்துவைக்கின்றார்.

சமாசத் தலைவர் எல்.பி.பி. மரியதாஸ் தலைமையில் முற்பகல் 10.30 மணிக்கு சமாசத் தலைமை அலுவலகம் திறந்து வைக்கப்படும்.அதைத் தொடர்ந்து 11.30 மணிக்கு பல நோக்கு மண்டபம், தையல் பயிற்சி நிலையம் என்பன அமைச்சரால் திறந்துவைக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ-7-236-190)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரதான கட்சிகளின் இரு வேட்பாளர்களும் நியமனப் பத்திரங்களைக் கையளித்த வேளை.....

# ஜனாதிபதித் தேர்தலை நீதியாக நடத்துவதற்கு அரசு நடவடிக்கை

## அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா சொல்கிறார்

கொழும்பு, டிச. 18

நீதியான, நியாயமான முறையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்த அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது - என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான அனுர பிரியதர்ஷன யாப்பா கூறினார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் காலை அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு -

ஜனாதிபதியொருவரைத் தெரிவு செய்வதற்காக நாடு முழுவதிலும் நடைபெறும் முதலாவது தேர்தல் இதுவாகும். தாம் விரும்பிய ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்யும் ஜனநாயக உரிமை நாட்டு மக்கள் அனைவருக்கும் இப்போது வழங்கப்பட்டுள்ளது.

தேர்தல் விதிமுறைகளை உரிய முறையில் அமுல்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் 'கட் அவுட்'கள் ஆகியவற்றை அகற்றும் பணியில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக 22 வேட்பாளர்கள் களம் இறங்கியுள்ளமை இலங்கை வரலாற்றில் இதுவே முதல் முறையாகும்.

நாடாளுமன்றத்தில் அரசுக்குப் பெரும்பான்மைப் பலம் இல்லாத நிலையில் அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது நடைமுறைச்சாத்தியமற்றது.

நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் அரசுக்கு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதரவு வழங்க முன்வரும்போது அவர்களுக்கு அமைச்சுப் பொறுப்புகள் வழங்குவது சரியானதே- என்றார்.

### மக்களுக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டிக்காட்டியதுடன், அடுத்த வெற்றி தேசத் தின் பொருளாதாரத்தை வளர்ச்சியடையச் செய்வதாக அமையும் எனக் குறிப்பிட்டார்.

பிளவுபட்டுள்ள நாட்டை மீண்டும் ஐக்கியப்படுத்துவேன் என 2005 இல் தாம் உறுதியளித்தமையையும் நினைவு கூர்ந்த ஜனாதிபதி, ''பிரிவினைக் கோரிக் கைகளை முன்வைத்த - ஈவிரக்கமற்ற - விடுதலைப் புலிகளை அழித்து, எனது வாக்குறுதிகளை நிறைவேற்றினேன் ''- என்றார்.

முன்னதாகத் தேர்தல் செயலகத்திற்கு அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் புடைசூழ வந்த ஜனாதிபதியை ஐக் கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரான கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த வரவேற்றார்.

எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவுடன் ஜனாதிபதி கைகுலுக்கி உரையாடினார். (அ-சி)

### சிவாஜிலிங்கமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றும், தனித்துத் தேர்தலில் போட்டியிடுவதில் அவர்கள் உறுதியாகவிருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இது பற்றிய பேச்சுக்களின் நடுவில் சிவாஜிலிங்கம் தனித்து சுயேச்சையாகப் போட்டியிடுவதற்குக் கட்சி அனுமதிக்காவிட்டால், கட்சியிலிருந்து தாங்கள் இருவரும் விலகவும் தயார் என அந்த இரு வரும் குறிப்பிட்டனர் எனக் கூறப்பட்டது.

ஆனாலும் தாம் 'ரெலோ'வின் முதல்வராக உள்ள நிலையில் தாம் கட்சியிலிருந்து பதவி விலகவேண்டிய தேவை எழவேயில்லை என்று சிவாஜிலிங்கம் கூறினார் என இணையத்தளச் செய்தி ஒன்று தெரிவித்தது. (அ-சி)

### ஜனாதிபதித் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐந்து சுயேச்சை வேட் பாளர்கள் உட்பட 22 பேர் போட்டியிடுகின்றனர்.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலொன்றில் அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமை இந் தத் தடவையே என்பது முக்கியமானது. 1999 மற்றும் 2005 ஆம் ஆண்டுத் தேர்தல்களில் 13 வேட்பாளர்களே போட்டியிட்டனர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

ராஜகிரியவில் உள்ள தேர்தல்க்ள் ஆணையாளரின் செயலகத்தில் கடும் பாதுகாப்பிற்கு மத்தியில் இடம்பெற்ற வேட்புமனுத்தாக்கல் செய்யும் நிகழ்விற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா உட்படக் கட்டுப்பணம் செலுத்திய 23 பிரமுகர்களும் அவர்களது ஆதரவாளர்களும் சமுகமளித்திருந்தனர்.

எனினும், கட்டுப்பணம் செலுத்திய வேட்பாளர்களில் 22 பேரின் வேட்பு மனுக்களை மாத்திரமே தேர்தல்கள் ஆணையாளர் ஏற்றுக் கொண்டார்.

ஸ்ரீலங்கா பிரகதிசீலி பெரமுனவின் வேட்பாளர் நெல்சன் பெரேராவின் வேட்பு மனுவைத் தேர்தல்கள் ஆணையாளர் நிரா கரித்தார்.

நெல்சன் பெரேராவின் பிரகதிசீலி பெரமுன சட்ட அந்தஸ்து உள்ள அரசியல் கட்சியல்ல என சுட்டிக்காட்டியே ஆணையாளர் அதனை நிராகரித்தார்.

இதேவேளை, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் சரத் பொன்சேகா வேட்புமனுத் தாக்கல் செய்வது தொடர்பில் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனையைத் தேர்தல் ஆணையாளர் நிராகரித்தார்.

சரத் பொன் சேகா அமெரிக்கப் பிரஜையென சுட்டிக் காட்டிய சட்டத்தரணி சரத்கொங்ஹகே அவரது வேட்புமனுவை ஏற்றுக் கொள்ளக்கூடாது என வேண்டுகோள் விடுத்தார்.

எனினும் தேர்தல் ஆணையாளர் அதனை நிராகரித்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்த சரத் பொன்சேகா பயங்கரவாதிகளை யுத்தத்தில் வென்றது போன்று தேர்தலிலும் வெல்வேன் என நம்பிக்கை தெரிவித்தார். (அ-சி)


மாபெரும் மலிவு விற்பனை

வாடிக்கையாளர் வேண்டுகோளுக்கிணங்க 19.12.2009 சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்கு வாடிக்கையாளர் அதிஷ்டலாப சீட்டிழுப்பு நடைபெறும்.

சுந்தர்சன் - மானிப்பாய்

பாவனையை குறைக்காமல்
மின் கட்டணத்தை குறைக்க முடியுமா?
யாழ் நகரில் முதன் முறையாக
சுந்தர்சன் அறிமுகப்படுத்தும்
Benefit - Electricity Saving Device
சுந்தர்சன் - மானிப்பாய்


# குருநகரில் ஞாயிறு நத்தார் ஒளிவிழா

வண்ணை - டிசெ.18

குருநகர், நாட்டுக்கூத்து மன்றத்தின் ஒளிவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மாலை 6 மணிக்கு குருநகர் காலை அரங்கில் சி. தார்சீசியஸ் தலைமையில் ஆரம்பமாகும்.

நெய்தலம் இயக்குநர் அருட்தந்தை அ.பி.ஜெயசேகரம் அடிகள் பிரதம விருந்தினராகவும், சிறப்பு விருந்தினர்களாக யாகப்பர் ஆலயங்குத்தந்தை வணபிதா ஆர். எக்ஸ். நேசராசா அடிகள் மற்றும் அருட் சகோதரி நிர்மலா ஆபேல் ஆகியோரும் கௌரவ விருந்தினராக சைமன் கருணா வும் கலந்து கொள்வார்கள்.

கலாபூஷணம் பட்டம் பெற்ற அண்ணாவி அ. மரியதாஸ் (மனோகரன்) கௌரவிப்பு, நடனம், நாட்டுக்கூத்து, நாடகம், சிறுவர் நடனம் என்பனவும் விழாவை அலங் கரிக்கவுள்ளன. (ஒ - 160)

# சொத்துக்களின் விபரங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு 3 மாத அவகாசம்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

கொழும்பு, டிச. 18

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் நேற்றிலிருந்து எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள், தமது சொத்துக்களையும் பொறுப்புகளையும் வெளிப்படுத்த வேண்டும் - என்று தேர்தல்கள் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அறிவித்துள்ளார்

தேர்தல்கள் செயலகத்தில் நேற்று வேட்பாளர்கள் தமது வேட்புமனுக்களைத் தாக்கல் செய்ததன் பின்னர் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் அங்கு கூறியவை வருமாறு -

வீதிகளிலும் கட்டடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ள சுவரொட்டிகள் மற்றும் பதாதைகள் அகற்றப்பட வேண்டும்.

அத்துடன் அரச ஊடகங்கள் உரிய முறையில் செயற்பட வேண்டும். போட்டியிடும் வேட்பாளர்களுக்கு தேசிய தொலைக்காட்சிகளில் தமது பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்ள 45 நிமிடங்கள் இலவசமாக வழங்கப்படும். அதற்கான ஏற்பாடுகள் விரைவில் செய்யப்படும் - என்றார்.

இதேவேளை, தேர்தல் சமயத்தின் போது ஒரு அரசியல் கட்சியின் தேர்தல் அலுவலகத்துக்கு அருகில் மற்றுமொரு கட்சியின் அலுவலகம் அமைக்க அனுமதி இல்லை என்றும்-

ஒரு கட்சியின் அலுவலகத்துக்கு அருகில் மற்றுமொரு கட்சியின் அலுவல கம் அமைக்கப்படுவதால் மோதல்கள் இடம் பெற வாய்ப்புண்டு என்பதால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், அனைத்துத் தரப்பினரும் சட்டத்துக்கு ஏற்ப நடந்துகொள்ள வேண்டும் எனவும், அரச உத்தியோகத்தர்கள் சுயாதீனமாக இயங்க வேண்டும் எனவும் தேர்தல் ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலம்பெயர் இலங்கையர்கள் மிகக் கூடுதலாகக் கனடாவில் குடியேறியுள்ள நிலையில் அதிக அளவிலான கனேடிய மக்கள் இலங்கைக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. கனடிய பிரஜாவுரிமை பெற்ற அநேகமான இலங்கையர்கள், அவர்களது குடும்பத்தினரைச் சந்திக்கும் முதலீடுகளை மேற்கொள்ளவும் இலங்கைக்கு வருகைதரலாம் என்று நம்புகிறோம் - என்று கூறினார்.

### இடம்பெயர்ந்தோர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச ஊடகங்கள் பக்கச்சார்பாகச் செயற்பட்டால் அவற்றின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்குத் தகுதி வாய்ந்த அதிகாரியைத் தாம் நியமிக்கப் போகிறார் என்றும் அவர் தெரிவித்தார்.

தனியார் ஊடகங்களையும் கண்காணிக்க வேண்டும். அவற்றைக் கண்காணிப்பதற்கு ஏற்ற விதத்தில் சட்டங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார். (அ-சி)

### எதிரணியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாளிகையில் அவர்கள் விசேட பூசை வழிபாட்டில் ஈடுபடவுள்ளனர். 11 மணிக்கு தேசிய பிரகடனம் ஒன்று வெளியிடப்படும்.

இதனைத் தொடர்ந்து பிற்பகல் 2 மணி முதல் கண்டி பொதுச் சந்தை மைதானத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும் எனப் பிரசாரக் கூட்ட ஏற்பாட்டுக்குழு தெரிவித்துள்ளது. (அ-சி)


பொருளியல்
NB.கஜீதரன்
A/L 2011 -பிரிவு - 11
★சந்தைச் சமநிலை மாற்றம் வரிவிதிப்பு, மானியம் வழங்கல்
♦BPI (குருநகர்) ♦SHAMROCK (சச்சமோட்டை) ♦NEC (யாழ் நகர்) ♦VICKNA (யாழ் நகர்) ♦HAC (சித்தன்கேணி)
(ஆரம்பம் : 20.12.2009-நேரம் அலுவலகத்தில்)
(91541)





GATEWAY
HAS A PLAN FOR YOUR CHILD'S FUTURE
Computer training for school children (4-16 years) leading to the best of British Qualifications
GRADUATE SCHOOL Gateway College
B Sc (Hons) in Business Computing and Information Systems (BCIS)
International Advanced Diploma in Computer Studies (IADCS)
International Diploma in Computer Studies (IDCS)
A/L ICT (London) or GIT (Sri Lankan) or International Foundation Year
GCSE, IGCSE, GCE O/L in Computing (Edexcel/Cambridge or Sri Lankan)
Key Stage 4 (Age 14-16)
Tier 7 - Tier 9
Key Stage 3 (Age 11-14)
Tier 3 - Tier 6
Key Stage 2 (Age 7-11)
Foundation - Tier 2
Key Stage 1 (Age 4-7)
GATEWAY KIDS SCHOOL of COMPUTING
GATEWAY LANGUAGE AND ICT CENTRE JAFFNA
ISLANDWIDE GATEWAY CENTRES:


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org